May 1954
Vol. 1
No. 6

396

திரட்டு

சிறந்த மாதாந்திர கட்டுரை பொக்கிஷம்

ஜய ௵ சித்திரை-வைகாசி

MAY 1954
396/2-4

இந்த இதழில்

★

★ சரீரத்தில் சாகரம்

★ குழந்தைகளும் ஒரு வியாபார பொருள்

★ பிரபுக்கள் — அன்றும் இன்றும்

★ சொல் வன்மை அளிக்கும் கல்

இன்னும்

பல அரசியல் சமூக விஞ்ஞான ஆராய்ச்சிக் கட்டுரைகள், கதைகள்.

★

128 பக்கங்கள்

3211, N53TU
N53·1.6
18747

அனைவரும் பார்க்க வேண்டிய நாடகம்

இகபர நன்மை தரும் தெய்வீகக் கதை
அதிகப் பொருட் செலவில் தயாரித்தது
சினிமா, நாடகத்திற்கு முற்றும் புதியது

திஸ்டேஜ் அளிக்கும்

நவாப் T. S. ராஜமாணிக்கத்தின்

சபரிமலை

ஸ்ரீ ஐயப்பன்

தினசரி மாலை 6-30 மணிக்கு

தேனும்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில்
இப்பொழுது நடைபெறுகிறது

பெரிய குடும்பங்களுக்கும் சிக்கன சுலப உதவி

இளநரை தடுத்து கூந்தல் செழிக்க

காஷ்மீர்-குஸும்

ஊறின உங்கள் எண்ணெயை உபயோகிக்க

சாதாரணம் - பாக்கெட்டில்

நஞ்சன்கூடு-பல்பொடி

மேலும்

54, அரிய குடும்ப மருந்துகள் விவரப்
புத்தகத்திற்கு எழுதுக

யுனைடெட் கன்ஸர்ன்,

54, பந்தர் தெரு, சென்னை-1.

பொருளடக்கம்

●

மலைமீதிருக்கும் மணிகண்டன் 3
தேடக்கிடையாத திரவியம் 10
மதியுள்ள மர்க்கடம் 14
கவிக்குக் கற்பித்த காரிகை 17
நான் கண்ட விஜயவாடா 21
நீதி விலக, கேடு விளைந்தது 23
சரீரத்தில் சாகரம் 25
செவிடர் பேரம் 28
உறுதுணை பயப்பது எது? 29
இன்னும் ஒருவருக்கு இடமிருக்கிறது 33
பஞ்ச அங்கம் 36
20-ம் நூற்றுண்டில் ஒரு மாருதி 37
தண்டிக்கவேண்டிய குற்றவாளிகள் 39
சனிக்கிழமை தோறும் வீட்டுக்கு வரும் பெண் 40
சொல்லே சக்தி 42
உண்மை நாகரிகம் புதிதல்ல 45
விஞ்ஞானம் வளர்ந்த நாட்டிலே அஞ்ஞானத் தாண்டவம் 49
குறைகுடம் கூத்தாடும் 52
நாகத்தின் தெய்வீகத் தன்மை 55
குறையும் நிறையும் 56
கவி அரசருக்குப் புவி அரசர் அடிமை 57
மத சமூகப் பண்பாடுகளுக்கு ஆதாரம் யார்? 62

பட்டைப் பற்றிப் பேசவேண்டாம்!	66
குழந்தைகளும் ஒரு வியாபாரப் பொருள்	68
பொன் அளியாததை சூழ் அளித்தது!	74
அறியார்க்கு அறிவித்த வழி	76
பெருக்கவேண்டும்	77
கூடைகளால் "குட்டு" வெளியாயிற்று	78
மூன்றின் முக்கியத்துவம்	84
சூழ்ச்சி பலித்தது	85
பாவித்தல் எளிதல்ல	88
மனமும் பூமியும்	92
தட்டிய கையை வெட்டு	96
பட்டம், பிரபுத்துவம் அன்றும்–இன்றும்	101
கல்லுக்கு முத்தமிட்டால் சொல்லுக்கு வன்மை உண்டு	106
கொடிக்குக் குதர்க்கம்	110
வையக சிசுக்களை வாழவிக்கும் சேவை	113
அபாயம் அளிக்கும் அமிருதபானம்	119
உங்களுக்குத் தெரியுமா?	123
சாந்தி நிலையம்	124
பணக்காரக் கிழவியை மணம் புரியத் தயார்	125
சாணியிலிருந்து வெளிச்சம்	127

"THIRATTU" Tamil Monthly Digest. Vol. 1. No. 6

திரட்டு

சிறந்த மாதாந்திர கட்டுரை பொக்கிஷம்

மே 1954

198145

சிந்தனையை அவனுக்காக்கி வந்தனையை அவன் பாதமலர்க்காக்கி, வாக்கை அவன் நாமத்திற்காக்கி பக்தர்கள் பணியும் பரமன்.

மலைமீதிருக்கும் மணிகண்டன்

●

நாட்டின் பற்பல பாகங்களிலுள்ள முக்கிய க்ஷேத்திரங்களில் திருவிழாக்கள் மிகவிமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

திருவிழா நடைபெறும் ஆலயங்களுக்கு நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் திரள் திரளாக மக்கள் செல்கின்றனர். திருவிழாக் காலம் சமீபிக்கும் பொழுதே அந்த க்ஷேத்திர வாசிகள திருவிழாவை விமரிசையாகக்கொண்டாடுவதற்கு வெளியூர்களிலுள்ள தங்கள் உறவினர்களை வரவழைத்து களிப்புற வசதிகளையெல்லாம் செய்துகொள்ளுகின்றனர்.

திருவிழாவிற்காக வரும் ஜனங்களில் பக்தி பரவசத்தோடுவரும் ஜனங்கள் மிகவும் குறைவே. பெரும்பான்மையோர் தங்கள் தங்கள் வீடுகளில் மங்கள வைபவங்களைக்

கொண்டாடுவது போலவே திருவிழாக்களைக் கொண்டாடி வருகின்றனர். அவரவர்கள் சக்திக்குத் தகுந்தவாறு ஆடையாபரண அலங்காரங்கள் செய்துகொண்டு திருவிழாவிற்கு வந்திருக்கும் ஏராளமான மக்களைக்கண்டு களிப்பதற்கும் திருவிழாச் சந்தைகளில் கண்காட்சிகளைக் கண்டு ஆனந்திப்பதற்கும் வேடிக்கையும, விநோதமுமாக பொழுது போக்குவதற்கும் தான் திருவிழா என்ற பெயரால் ஆலயங்களில் மக்கள் கூடுகின்றனர்.

ஆனால் பக்தியொன்றையே குறிக்கோளாகவும் ஆடம்பர ஆடை அணிகலன்கள் இல்லாமலும் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற ஏற்றத்தாழ்வில்லாமலும், ஆலயத்தில் கூடும் லட்சக் கணக்கான பக்தர்கள் யாவரும் ஒரே ஆடையை அணிந்தும், ஒரேவிதமானத் தோற்றத்தோடும் கேளிக்கைகள், வேடிக்கை விநோதங்கள் ஒன்றுமில்லாமலும் திருவிழா கொண்டாடும் ஆலயமும ஒன்று நம்நாட்டிலிருக்கிறது.

மற்ற ஆலயங்களைத் தரிசிக்கச் செல்வதுபோல் தங்கள் குடும்பத்தோடு நினைத்தமாத்திரத்தில் இந்த ஆலயத்திற்குச் செல்லமுடியாது.

இந்த ஆலயத்திற்கு வருஷத்தில் ஒரு குறிப்பிட்ட தினத்தில் தான் சென்று மூர்த்தியைத் தரிசித்து அனுக்கிரஹம் பெற முடியும். வருஷத்தில் ஒரே நாள் தான் மூர்த்தியைத் தரிசிக்கும முறையென்றாலும் அதற்கு ஒரு மண்டலத்திற்கு முன்பிருந்தே விரதம், அனுஷ்டானம் முதலியன நியமாதிகளை மிகவும் பயபக்தியோடு மேற்கொண்டுதான் அவ்வாலயத்திற்குச் சென்று குறிப்பிட்ட அந்த சுப தினத்தில் மூர்த்தியைத் தரிசிக்க முடியும்.

உத்தராயன புண்ணிய காலமும், சங்கிராந்தி தினமும் தமிழ் மக்கள் களிக்கும் திருநாளுமாகிய தை மாதத்தின் முதல் நாள் தான் மேற்கூறிய ஆலய மூர்த்தியை தரிசிக்கும் சுபதினம்.

இதற்கு 40 தினங்களுக்கு முன்பிருந்தே அதாவது கார்த்திகை மாதத்தில் இவ்வாலயத்திற்கு செல்ல விரும்புவோர் ஒரு சுப தினத்தன்று அதிகாலையில் ஸ்நானம் செய்து, தங்கள் தங்கள் குடும்பப் பெரியோர்களை வணங்கி அவர்கள் ஆசீர்வாதம் பெற்று கழுத்தில் துளப மணி மாலையை யணியவேண்டும். இவ்வாறு பெரியோர் ஆசீர்வாதம் பெற்று மாலையை யணிந்துகொள்வது இவ்வாலயத்திற்குச் செல்வதற்குச் சங்கல்பித்ததாகும்.

மாலையை யணிந்துகொண்டதினத்திலிருந்தே மிகுந்த வைராக்கியத்தோடு நியமாதிகளை அனுஷ்டித்துவரவேண்டும். காலை மாலை இரு வேளைகளிலும் ஸ்நானம் செய்த பின்னரே உணவருந்தவேண்டும். பிரம்மசர்ய விரதம் தீவிரமாக அனுஷ்டிக்கவேண்டும். வீட்டிற்கு விலக்கான ஸ்திரீகளைப் பார்க்கவேகூடாது.

எப்போதும் .தியான சிந்தையோடிருக்கவேண்டும், இவ்வாறு ஒரு மண்டலம் விரத்தை அனுஷ்டித்த பின்னர் க்ஷேத்திர யாத்திரைக்குப் புறப்படவேண்டும். புறப்படும் தினத்தன்று பூஜை, அன்னதானம் எல்லாம் அவரவர்கள் இல்லத்திலேயே நடத்தி அன்று மாலை சுபவேளையில், க்ஷேத்திர யாத்திரைக்குச் செல்வார்கள். ஸ்வாமி பூஜைக்குரிய பொருள்களையும், நெய்த் தேங்காயையும் சமையல் சாமான்களையும் மற்ற உணவுப் பொருள்களையும், கோடிவஸ்திரத்தினல் ஆன பையில் மூட்டையாகக் கட்டுவார்கள். குளிருக்காக ஒரு போர்வையையும் வைத்திருப்பார்கள். இந்த மூட்டைகளை சுமப்பதற்கு வேலையாட்கள் கிடையாது. யாத்ரிகர்கள், பணக்காரராயினும் சரி, ஏழையாயினும் சரி. அவரவர்கள் மூட்டைகளை அவரவர்கள் தான் சுமந்து செல்ல வேண்டும்.

இவ்வாறு மூட்டை கட்டுவது யாத்திரை செல்வதற்குச் சித்தமாயிருப்பதற்கு அறிகுறியாகும். இம் மூட்டை

களைத் தூக்கிக்கொண்டு யாத்திரை புறப்படும் போதே ஏழை, பணக்காரரென்ற மனப்பான்மை அறவே ஒழிந்து விடும்.

யாத்திரிகர்கள் அவரவர்கள் இல்லத்திலிருந்து மூட்டைகளைத் தூக்கிக்கொண்டு க்ஷேத்திராடனத்திற்காக வெளியே புறப்பட்டு விட்டால் க்ஷேத்திர தரிசனம் செய்த பிறகே தான் வீட்டிற்கு வரவேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் மறுபடியும் வீட்டிற்கு வந்து பழையபடி க்ஷேத்திர யாத்திரைக்காகப் புறப்படக்கூடாது.

யாத்திரை முழுவதும் கால் நடையாகவே தான் செல்லவேண்டும். யாத்திரிகர்கள் தங்கள் தங்கள் ஊரிலிருந்து புறப்பட்டு ஆங்காங்கே மற்ற ஊர்களிலுள்ள யாத்ரிகர்களுடன் கலநதுகொண்டு செல்வதுதான் வழக்கம்.

இவ்வாறு கூட்டங் கூட்டமாக யாத்திரிகர்கள் ஒரு வாரம் வரை நடந்து சபரி மலையிலுள்ள ஐயப்பன் சந்நிதியை அடைவார்கள்.

ஐயப்பன் வீற்றிருக்கும் சந்நிதியை அடைவதற்கு சபரி மலைமீதே நான்கு தினங்கள் நடக்கவேண்டும். சபரி மலையை ஏறிச் செல்வதற்கு விசாலமான பாதை கிடையாது. ஒற்றையடிப் பாதையாய்த்தானிருக்கும். சில இடங்களில் குறுகியபாதைகளில் செங்குத்தாகவும் ஏறிச்செல்ல வேண்டியிருக்கும். புலி, கரடி, யானை முதலிய கொடிய விலங்கினங்களும் பயங்கர மலைப் பாம்புகளும் சஞ்சரிக்கும் விருக்ஷங்கள் அடர்ந்த காடுகளின் ஊடேதான் செல்ல வேண்டும்.

யாத்திரிகர்கள் "சாமியேசரணம் ஐயப்பாசரணம்" என்ற நாமாவளியைக் கோஷித்துக்கொண்டே செல்வார்கள். ஹரிஹர சுதனுகிய ஐயப்பனின் கிருபாகடாக்ஷத்தால் அவனுடைய பக்தர்களாகிய யாத்ரிகர்களுக்கு இத்துஷ்ட மிருகங்களால் ஒரு தீங்கும் நேராது. ஆனல் நியமாதிகளில் பிசகியவர்களுக்குத் தீங்கு நேரிடலாமென்பதுதான் ஐதிகம்.

யாத்திரிகர்கள் ஒவ்வொருவருமே ஐயப்பனின் அம்சமாகவே இருக்கிருர்களென்பதுதான் திடமான நம்பிக்கை. ஆகையினுல் யாத்ரிகர்கள் ஒருவரை ஒருவர் “ஐயப்பா, ஐயப்பா என்றேதான் அழைத்துக்கொள்வார்கள், ஊர். பெயர், அந்தஸ்து, இனம் ஆகிய வேற்றுமைகளே அறவே மறந்து ஒருமனப்பட்ட பக்திப்பரவசத்திலேயே யாத்திரை செல்வார்கள்.

முதலில் ஐயப்பன் ஆலயத்தின் அருகில் வந்து மிகப் புனிதமான பதினெட்டுப்,படிகளே ஏறி சந்நிதியை அடைய வேண்டும். மேற்கூறியவாறு தை மாதப் பிறப்பன்றுதான் ஆலயத்தின் வைபவம். தைமாதம் என்பது மகர மாதம் ஆகும். அன்று அவ்வாலயத்தில் பூஜைகள் நடைபெற்றுவரும். அன்றிரவு ஆலயத்தில் தீப அலங்காரங்கள் செய்யப்படும். “மகரதீபம்” என்ற தீப அலங்காரங்களூடே அவ்வாலயத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ ஐயப்பனே பக்தர்கள் தித்திக்கும் அமுதமாகக் கண்டு “ஜெயன் மாண் டடங்க புத்திக் கமலத்து உருகிப்பெருகிப் புவனமுற்றித் தத்திக் கரைபுரளும் பரமானந்த சாகரத்தே” மூழ்குவார்கள்.

சபரி மலேயில் கோயில்கொண்டெழுந்தருளியுள்ள ஸ்ரீ ஐயப்பனின் மகிமையும் கீர்த்திப்பிரதாபமும் கேரளத்தில் மட்டும்தான் முன்காலங்களில் பரவியிருந்தது. இப்பொழுது தமிழ்நாடெங்கும் பரவியிருக்கிறது. இவ்விதமாக ஐயப்பனே பக்தகோடிகள் ஒன்று சேர்ந்து வழிபடும் சுபதினம் மகரசங்கராந்தி தினமேயாகும்.

சங்கிராந்தியன்று, காலேயிலிருந்தே பூஜை முறைகள் ஆரம்பிக்கப்படும். அன்றுகாலேயில் ஸ்ரீ ஐயப்பனின் விக்கிரஹம் பத்துவயதுப் பாலகன்போன்ற தோற்றமளிக்கும். அன்றிரவு ஸ்ரீ ஐயப்பனுக்கு விசேஷ அலங்காரஞ் செய்திருப்பார்கள், ஆலயமுழுவதும் தீபாலங்காரங்கள் செய்யப்பட்டிருக்கும். அன்றிரவில் விசேஷமாக அலங்கரிக்கப்

பட்டிருக்கும் ஐயப்பன் பாலனாகத் தோற்றமளிப்பதில்லை. மிக உக்கிரத்தோற்றத்துடன் ஸ்ரீ ஐயப்பன் விசுவரூப தோற்றமளிப்பார்.

அடுக்குத் தீபாராதனைத் தட்டில் கற்பூரங்களை வைத்து ஜோதிமயமாகவே ஐயப்பனுக்குத் தீபாராதனை செய்வார்கள். இந்த மகாதீபாராதனையைக் கண்ணுற்ற பக்தகோடிகள் சிரங்கள்மீது கைகூப்பி மெய்மறந்து, "சாமியே சரணம் ஐயப்பா" என்ற புனித தெய்வீக வசனங்களை அண்ட முகடுக்கு எட்டும்படியாக கோஷிப்பார்கள்.

மகர சங்கிராந்திக்கு மறுதினம் அவரவர்கள் ஊருக்குத் திரும்பிச் செல்வார்கள்.

ஐயப்பனுடைய ஆடை ஆபரணங்களெல்லாம் திருவிதாங்கூர் அரசாங்கத்தார் கஜானாவில் பத்திரம்செய்து வைத்திருப்பார்கள். இந்த ஆடையாபரணங்களெல்லாம் மகரசங்கிராந்தி தினத்தன்றுதான் அலங்கரிப்பார்கள். அவ்வாபரணங்களைத் திருவிதாங்கூர் சர்க்கார் தகுந்த பாதுகாப்புடனும் மேளதாள வைபவங்களுடனும் ஐயப்பனின் நாமத்தை கோஷித்துக்கொண்டே சங்கிராந்தி தினத்தின் முதல்நாள் ஐயப்பன் ஆலயத்திற்குக் கொண்டு வந்து சேர்ப்பார்கள். மற்ற காலங்களில் மாதத்தில் மூன்று தினங்கள் மட்டுமே ஸ்ரீ ஐயப்பனுக்கு பூஜை நடைபெறும். இந்த மூன்று தினங்களிலும் பூஜைசெய்ய அர்ச்சகர் சென்றுவருவதற்குத் தகுந்த பாதுகாப்பு செய்திருப்பார்கள்.

மகாதீப திருநாளுக்கு மிகுந்த பக்தியோடு சென்று வரும் பக்தகோடிகளுக்கு ஐயப்பன் அளிக்கும் அருள் மிகப் பிரமாதமானது. மகாதீபத்தை தரிசித்த உடனேயே ஊமையும் வாய்திறந்து பேசுகிறது. உடனே பிரம்மராக்ஷஸுகள் விலகுகின்றன. தீராத பிணிகளெல்லாம் தீர்ந்து போகின்றன.

சிவபெருமானுக்கும் மோகினி அவதாரமெடுத்த விஷ்ணுவிற்கும் பிறந்த குழந்தைதான் ஐயப்பன் என்ற ஹரிஹர புத்திரன். பம்பா நதி தீரத்தில் பந்தள தேசத்துமன்னன் ஹரிஹரபுத்திரனைக் கண்டெடுத்தார். புத்திரப்பேறில்லாத இந்த மன்னன், குழந்தை கழுத்தில் மணியோடிருந்ததால் மணிகண்டன் எனப் பெயரிட்டு வளர்த்துவந்தார். ஹரிஹர புத்திரன் தான் தெய்வீக அவதாரமென்பதற்கு அத்தாட்சியாக பல அற்புதங்களை நிகழ்த்தினர். முடிவில் வளர்ப்புத் தந்தையான பந்தள தேசத்து மன்னனிடம் ஒரு கட்டாரியைக் கொடுத்துவிட்டு சபரிமலைக் கருகேயுள்ள ஒரு மரத்தில் அந்தக் கட்டாரியை அடித்தால்தான் தரிசனமளிப்பதாகக் கூறி மறைந்துவிட்டார் ஹரிஹரபுத்திரன்.

அன்று பந்தளதேசத்து மன்னனுக்கு வாக்களித்தபிரகாரம் இன்றைக்கும் ஆயிரக்கணக்கான மக்களுக்குத் தரிசனம் தந்தருளுகிருர் ஹரிஹரபுத்திரரான ஸ்ரீ ஐயப்பன்.

பழங்காலத்திலிருந்து நாட்டில் அவ்வப்போது நிகழும் செயல்களின் ஞாபகத்தை நிரந்தரமாக்கும் முறை.

தேடக் கிடையாத திரவியம்

●

கருவூலமென்பது நாட்டில் ஒவ்வொரு காலத்திலும் நிகழ்ந்த சரித்திரப் பிரசித்தமான ஆதாரங்களாகிய அறிகுறிகளையும், கல்வெட்டு, செப்பேடு, சிலா சாஸனம் ஏட்டுப் பிரதிகள் முதலியவற்றையும் சேகரித்துப் பாதுகாப்போடு பத்திரப்படுத்துவது தான்.

இக் கருவூலங்களை மிகச் சிரமப்பட்டுத் தேடிக் கண்டு பிடித்து சேகரிக்க வேண்டியிருக்கிறது. இக் கருவூலங்கள் சம்பாதிக்கும் பொருளைக் காட்டிலும் மிகச் சிறப்பு வாய்ந்தது.

இக் கருத்தைத் தான் "காணக் கிடையாத கருவூலம் தேடக் கிடையாத திரவியம்" என்ற பழமொழி விளக்குகிறது.

நம் தமிழ் நாட்டில், தஞ்சாவூரில் புராதன தமிழ் மன்னர்களால் மிகுந்த பிரயாசையோடு சேகரிக்கப்பட்டுள்ள சரித்திர சாஸ்திரீய ஏடுகளாகிய மிகச் சிறந்த கருவூலமிருந்தது. வெளி நாட்டார் படையெடுப்பாலும், பிற நாட்டாரின் ஆட்சிகளாலும் தஞ்சாவூர் அரண்மனையிலிருந்த புராதன கருவூலம் சிதைவுற்றது, கல் வெட்டுப்

போன்ற புராதனச் சின்னங்களையும், அரியபெரிய பொக்கிஷங்களையும், சாஸ்திர சரித்திர ஏடுகளையும், ஆங்கிலேயர்களும், முகலாயர்களும் வெளி நாடுகளுக்குக் கடத்திச் சென்று விட்டனர்.

தஞ்சாவூரிலுள்ள கருவூலம் புத்தர், முகமது நபி, ஏசு கிறிஸ்து முதலானவர்கள் தோன்றுவதற்கு முன்பே மிக மிகப் புராதானக் காலத்திலிருந்தே சேகரித்துப் பாதுகாக்கப்பட்டிருந்தது ஆனல் ஆங்கிலேயர்கள், கிறிஸ்துவிற்குப்பின் பதினைலாவது நூற்றாண்டின் இறுதியில் தான் கருவூலத்தை யமைத்திருக்கின்றனர்.

வெஸ்ட் மினிஸ்டரிலுள்ள பிரபுக்கள் சபையின் (House of Lords) தஸ்தாவேஜு அறை பிரிட்டனிலுள்ள ஒரு கருவூலம். இந்த இடத்தில் எங்கு திரும்பினலும் கையெழுத்துப் பிரதிகள், நல்லஅரசர்கள், பொல்லாத அரசர்கள்—இவர்களின் கையெழுத்துகளைக் காணலாம்.

மன்னன், மக்கள் விதியை நிர்ணயித்த ஏட்டுப் பிரதிகளையும் அங்கு காணலாம். 1497–ஆம் ஆண்டிலிருந்து பிரிட்டிஷ் பாராளும் மன்றத்தின் நடவடிக்கைகளை அங்கு சேகரித்து வைத்திருக்கிறார்கள். அங்கேஎட்டாம் ஹென்றியின் காலத்துப் பிரபுக்களைப் பற்றின குறிப்புகள் பதினைலாம் நூற்றாண்டின் பட்டு நெசவாளரின் நிலை 1640-இலிருந்து 1644–ஆம் ஆண்டுவரை லண்டன் நகரசபை நிர்வாகம், அமெரிக்கச் சுதந்திரப் போர், டெவன் கடற்கரையோரக் கப்பல் போக்கு வரத்து, காரோலின் ராணியின் விசாரணை முதலிய பற்பல தகவல்களும், ஏடுகளும் பாதுகாத்துவைக்கப்பட்டுள்ளன.

முதலாவது சார்லஸ் மன்னனை சிரச் சேதஞ்செய்ய மக்கள் அளித்த தீர்ப்பு. பதினாறும்நூற்றாண்டில் அரசைக் கவிழ்க்க நடந்த ரகசிய திட்டம். ஸ்காட் ராணி மேரி விசா

ரணையும் அவளுடைய கடிதங்களும் அவளைப் பற்றிப் பாரா ளும் மன்றத்தில் நடந்த நடவடிக்கையின் பூர்ண விவ ரங்கள் கொண்ட ஏடுகளும் அங்கு காணலாம்.

பழுதாய்விட்ட ஏடுகளை விஞ்ஞான ரீதியில் பதனப் படுத்தி வைத்திருக்கின்றனர். அவ்வப்போது பரிசோ தித்து ரஸாயனப் பக்குவம் செய்ய தனிஇலாகா ஒன்று உண்டு.

லண்டனுக்கும் பர்மிங்ஹாமுக்கும் ரயில்பாதை அமைக்கத் திட்டமிட்ட ப்ளானும் அங்கேயிருக்கிறது. ரயில்வேயின் ஆதிபிதாவான ஜார்ஜ் ஸ்டீவன்ஸன் கையெழுத்துள்ள தஸ்தாவேஜுமிருக்கிறது.

முன்னொருகாலத்தில் கருவூலத்தில் பாதுகாத்து வைக்கவேண்டிய தஸ்தாவேஜுகளும், சில பார்லிமெண்ட் நடவடிக்கைக் குறிப்புகளும் தவறிவிட்டன. சென்ற முன் னூறு வருஷங்களாகவே அதாவது 17-ம் நூற்றாண்டி லேயே அவை காணப்படவில்லை. சமீபத்தில் அவற்றின் பெரும்பகுதி கிடைத்துவிட்டது.

இவை தவறியதற்குக் காரணம் பதினேழாம் நூற்றாண் டின் பாராளுமன்றக் குமாஸ்தாவாக இருந்த ஜான் ப்ரௌன் என்பவர் அவற்றை அவருடைய சொந்த தஸ்தாவேஜு களுடன் தற்செயலாகக் கலந்து வீட்டிற்குக் கொண்டு போய்விட்டார்.

அந்த தஸ்தாவேஜுகள் அவருடைய வாரீசான ஒரே மகளிடமிருந்தன. அவள் ப்ரே பிரபுக்களின் முன்னோர் ஒரு வரைக் கலியாணஞ் செய்துகொண்டபோது இவையும் ஆஸ்தியுடன் கலந்துவிட்டன. இருநூறு வருஷகாலம் இதைப்பற்றித் தகவல் தெரியவில்லை. சென்ற நூற்றாண் டின் இறுதியில் ப்ரே பிரபுவின்மாளிகையில் அவை இருப் பதை ஓர் ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்தார். ப்ரே பிரபு

அவற்றை ஒழுங்குபடுத்தி கட்டிவைத்திருக்கிறார். அவற்றை ஒரு தர்ம ஸ்தாபனம் வாங்கி கருவூலத்திற்குப் பரிசாக அளித்தது. இதைப்போன்றே லண்டனைச்சேர்ந்த விக்டோரியா டவரிலும் ஒரு கருவூலமிருக்கிறது.

உலகம் முழுமையுமுள்ள சரித்திர ஆராய்ச்சியாளர்கள் அங்குசென்று சான்றுகளைத் தேட அனுமதிக்கப்படுகிறார்கள். ஏடுகளை ஒழுங்குபடுத்தி நவீன முறையில் பாதுகாக்க ஏற்பாடுகளைச் செய்யவும் பார்வையாளர்களின் தேவைகளைக் கவனிக்கவும் 1946—இல் தனி இலாக்கா அமைக்கப்பட்டது, இன்ன தகவலைப்பற்றி இன்ன தஸ்தாவேஜைப் பார்க்கவெண்டும் என்று முன்னதாகத் தகவல்கொடுத்துவிட்டதால் நிர்வாகிகள் அதைத் தேடியெடுத்துதவி செய்கிறார்கள். இந்த கருவூலத்தின் நிர்வாகிகள் தங்கள் பணியை ஒருதேசீயப் பணியாகவே கருதி செய்கின்றனர்.

இத்தகைய தேசீய கருவூலங்கள் நாட்டுக்குப் பெருமையளிப்பதோடு மக்களுக்குச் சரித்திரம் புகட்டும் பொக்கிஷமாகவுமிருக்கிறது. நம்நாட்டில் இப்போதுதான் மேல்நாட்டுமுறையில் தேசீயக் கருவூலம் ஒன்று டில்லியில் அமைத்திருக்கிறார்கள்.

(Based on a B. I. S. Feature)

மிருகங்களில் சில பயிற்சி அளித்தால் மனிதரைப்போலவே நடந்து கொள்ளும்.

மதியுள்ள மர்க்கடம்

●

சாதாரணமாக, வீட்டுப் பிராணிகள் என்பவை, ஆடு மாடு, நாய், பூனை, கோழி, புரு, கிளி, மைனு முதலியன; இவைகளைத்தான் வீடுகளில் வளர்ப்பார்கள். ஆனால் டச்சு, நியூகினி தேசத்தில் ஒளகாரா என்ற நகரத்தில், ஒரு வீட்டில் ஒரு 'மனிதக் குரங்கை' வளர்க்கிறார்கள். (இந்தக் குரங்கினத்தை உராங் உட்டாங், ஏப் என அழைப்பார்கள். தோற்றத்தில் குரங்கைப்போல் இருந்தாலும், வால் கிடையாது. உயரமாகவும் இருக்கும். மனிதனைப்போல் இரண்டு கால்களால் நடக்கவும், மரங்களில் ஏறும்பொழுது, நான்கு கால்களால் சாதாரணக் குரங்குகளைப்போல் ஏறவும், தாவவும் சக்தி வாய்ந்தது.)

இவ்வகையை சேர்ந்த குரங்கொன்றைத்தான் மேலே தெரிவித்த வீட்டில் வளர்க்கப்பட்டு வருகிறது; இந்தக் குரங்கு, உலகத்திலேயே மிகப் புத்தி நுட்பமுடையதாக விளங்குகிறதெனப் புகழப்பட்டு வருகிறது. அவ்வீட்டினர் இதை 'ராட்டர்டாம்' என அழைப்பார்கள். இக்குரங்கை ஆறுமாதக்குட்டியிலிருந்தே வளர்க்கிறார்கள். இப்பொழுது அதற்கு வயது 11. இதை வளர்க்கும் குடும்பத்தில், கணவன், மனைவி, பதினேழு வயதுடைய மகள், பதினைந்து வயதுடைய மகன் ஆக நான்கு பேர்கள் உண்டு. இவர்களுக்கு ஒரு பணியாளும் உண்டு. பணியாள் இருந்தபோதிலும், 'ராட்டர் டாம்' என்ற இந்தக் குரங்கும் பற்பல பணிகளையும் ஆற்றி வருகிறது.

மனிதர்களைப்போலவே, இந்தக் குரங்கும் காலையில் எழுந்தவுடன் காலைக் கடன்களை முடித்துக்கொள்கிறது.

பிறகு சமையலறைக்குச் சென்று, காலே உணவு மனிதர்களேப்போலவே பிளேட்டில் வைத்து, தன் எஜமானனுடன் தான் சாப்பிடுகிறது. ஒருவேளே எஜமானே சாப்பாட்டு அறையில் காணவில்லேயானல், அவர் படுக்கை அறைக்குச் சென்று அடைத்திருக்கும் கதவைத் தட்டி எஜமானே எழுப்புகிறது. காலே போஜனத்திற்குப் பின் இக்குரங்கு பத்திரிகைக் கடைக்குச் சென்று எஜமானருக்கு பத்திரிகைகள் வாங்கிக்கொண்டு வரும். என்னென்ன பத்திரிகைகள் வேண்டுமோ அவற்றை வீட்டிலிருக்கும் பத்திரிகைகளின் அட்டைகளில் உள்ள ரகங்களே இக் குரங்குக்குக் காட்டுவார்கள். அக் குரங்கும் கண்ணுல் பார்த்த பிரகாரம், வீட்டில் உள்ளவர்கள் குறிப்பிட்ட பத்திரிகைகளே எல்லாம் வாங்கிக்கொண்டு வந்துவிடுகிறது.

பத்திரிகைகள் வாங்குவதற்குரிய, தொகையை ஒரு பையில் போட்டு அப் பையை இக் குரங்கிடம் கொடுப்பார்கள். முதலில் இப்பணப்பையை அதன் கழுத்தில் கட்டினர்கள். ஆனல் அக் குரங்குக்கு ஒரு பிடிவாதம் பாருங்கள், கழுத்தில் பையைக்கட்ட அது சம்மதிப்பதே இல்லேயாம். அதை கையில் வாங்கி, வாயில் கௌவிக்கொண்டு ஒரு போர் வீரனேப்போல் நிமிர்ந்தவாறு, கடமைகளேச் செய்யச் செல்லும் குடும்பத் தலேவனேப்போலவே காரியார்த்தமாகவே போகும் தோரணேயில் பத்திரிகை கடைக்குச் செல்கிறது. இக்குரங்கு வீதியில் காரியார்த்தமாக செல்லும் தோரணேயைப் பார்த்து ஜனங்கள் அதிசயிப்பார்கள்.

பத்திரிகைகள் வாங்க கடைக்கு வருவோர்க்கெல்லாம் இந்தக்குரங்கைப் பார்க்க விநோதமாயிருககும். குரங்கைக் கண்டவுடன் எல்லோரும் உற்சாகத்தோடு வரவேற்பார்கள். கடையிலுள்ள அலமாரியில் தன் எஜமானர் வீட்டிற்கு வேண்டிய பத்திரிகையெல்லாம் பொறுக்கி எடுக்கும். பத்திரிகைகளே எடுத்துக்கொண்டபிறகு தன் வாயிலிருக்கும் மணிபர்ஸை கடைக்காரனிடம் கொடுக்கும். கடைக்காரன் பத்திரிகைகளுக்கான சில்லறையை எடுத்துக்கொண்டு மிகுதியை பர்ஸில்போட்டு குரங்கினிடம கொடுப்பான். மிகுதி சில்லறையைப் பெற்றுக் கொண்டவுடன் கடையிலுள்ள மிட்டாய் ஜாடிகளேயெல்லாம் ஒவ்வொன்ருய்க் கவனிக்கும்.

இனிப்பான மிட்டாய்களை தன் நாக்கால் சுவைப்பது போல் பாவனைக் காட்டி மிட்டாய மீதுள்ள தன் விருப்பத்தைக் காட்டும். மிட்டாய் கிடைத்ததும் மிட்டாயைச் சுவைத்துக் கொண்டே பத்திரிகைகளைத் தூக்கிக்கொண்டு வீட்டிற்கு வரும். வீட்டிற்கு வந்ததும், அவரவர் கேட்ட பத்திரிகைகளை அவரவரிடம் கொடுக்கும். பத்திரிகைகளைக் கொடுப்பதில் ஒரு தவறும் ஏற்படாது. அந்த ஊரில் அடிக்கடி பஸ்களிலும் பிரயாணஞ் செய்யும். பிரயாணிகளுக்கு இந்தக் குரங்கைப் பற்றி நன்கு தெரியுமாதலால் இதைக்கண்டு அவர்கள் பயப்படுவதில்லை.

ஒருசமயம் இந்தக் குரங்கிடம் ஒரு பொட்டலத்தைக் கொடுத்து தங்கள் குடும்ப டாக்டரிடம் சேர்க்குமாறு அனுப்பி வைத்தார்கள். பஸ்ஸில் கண்டக்டர் குரங்கை டிக்கட் கேட்டான். கண்டக்டரிடம் குரங்கு தன் பர்ஸை நீட்டியது. பர்ஸ் காலியாயிருந்தது.

இக்குரங்கு சோர்வுடனிருக்கும் சமயங்களில் வீட்டிலுள்ள ரேடியோ சுவிட்சைப் போட்டு நடன சங்கீதத்தை ஆவலோடு கேட்கும்.

ஒருசமயம், குரங்கின் அறிவைச் சோதிப்பதற்காக ரேடியோவின் 'பிளக்'கை எடுத்து வைத்திருந்தார்கள். குரங்கு ரேடியோவின் சுவிட்சை திருப்பியபோது ரேடியோவிலிருந்து சப்தம் ஒன்றும் வரவில்லை. 'பிளக்' இல்லாததால்தான் சப்தம் வரவில்லையென்று அறிந்து 'பிளக்'கைத் தேடிப் போட்டது. உடனே ரேடியோவில் சங்கீதம் கேட்டது.

இந்த ராட்டர்டாம் குரங்கிற்கு இணையாக பெண் குரங்கு ஒன்றை எவ்வளவோ கஷ்டப்பட்டு தேடியும் இதுவரை அகப்படவில்லை. வாலிபப் பருவமடைந்துவிட்ட ராட்டர்டாம் குரங்கு தனக்குத் தகுந்த பெண் ஜோடி இதுவரை கிடைக்காததால் வீதியில் நடமாடும் பெண்களையெல்லாம் ஏக்கத்துடன் கவனித்துவருகிறது.

புலவர்க்கு ஔடதம் என்று புகழ் பெற்ற நைடதத்தைப் பற்றிய ருசிகரமான வரலாறு.

கவிக்குக் கற்பித்த காரிகை

●

சோழ மன்னன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து, மதுரையைக் கைப்பற்றியதும் பாண்டியனின் சந்ததியார் தமிழ் நாடு முழுதும் பரவி ஆங்காங்கே சிற்றரசர்களாக ஆண்டு வந்தனர். அதில் வரதுங்க ராம பாண்டியன் என்பவன் கரிவலம் வந்த நல்லூரை ஆண்டுவந்தான். இவன் மிகுந்த சிவபக்தி உடையவன்.

பால் வண்ண நாதர் ஸ்வாமி கோயிலைக் கட்டி, அங்கே எழுந்தருளிய சிவபெருமான் மீதுபல திருமுறைகளும் திருவந்தாதிகளும் பாடி அருளினன். இவனுடைய இளைய சகோதரன் அதிவீர ராமபாண்டியன் என்பவன் தென்காசியை ஆண்டு வந்தான்

இவன் விசுவநாதர் ஆலயத்தைக் கட்டினன். இவனும் மிகுந்த தெய்வபக்தியுடையவன் இவனுக்கு முன்னிருந்த நிடத நாட்டு மன்னன் நளனைப்பற்றிய கதையை நைடதம் என்ற சிறந்த காவிய நூலாக எழுதியுள்ளான். இலக்கிய உலகத்திற்கு நைடதம் மிகவும் சிறந்த நூலாகும்.

ஆகையால் 'நைடதம் புலவர்க்கு ஔடதம்' என புலவர்களால் போற்றப்பட்டு வருகிறது. அதிவீர ராமபாண்டியன் நைடதத்தை எழுதி முடித்ததும் தமையனுகிய வரதுங்க ராம பாண்டியனிடம் அரங்கேற்ற கொண்டு சென்றுன். கோடை கால மாதலால், கரிவலம் வந்த நல்லூரின் அருகேயுள்ள பூஞ்சோலையில் பரிவாரங்களுடன் இளைப்பாறினன். தூதனிடம் தமையனுக்கு முன்கூட்டியே நூலை அனுப்பி வைத்தான். தூதன் வரதுங்க ராம பாண்டியன் முன்பாக நூலை வைத்தான்.

'இது என்ன ஏடு?' என மன்னன் வினவினன். 'தங்கள்சகோதரர் அதிவீர ராமபாண்டியன்

எழுதிய நைடதம் என்ற நூல். இந்நூலைத் தங்களிடம் அரங் கேற்ற வந்திருக்கிறார்.

இந்நகரச்சோலையில் அமர்ந்திருக்கிறார், எனத் தூதன் கூறினன்.

"ஏடு நன்றாக இருக்கிறது. ஏட்டைத் திருப்பி எடுத்துக் கொண்டுபோ" என மன்னன் ஆக்ஞையிட்டான். அவ்வாறே தூதன் ஏட்டை எடுத்துக் கொண்டு சோலையில் தங்கி யிருக்கும் அதிவீரராம பாண் டியனிடம் கொடுத்து நடந்தவற் றைக் கூறினன்.

அதிவீரராம பாண்டியனுக் குக் கோபம் வந்துவிட்டது. "நம்மைப்போல் இவனும் ஒரு கவியாக வந்துவிட்டான் என்ற பொறாமையினல்தான், நமது ஏட்டை அரங்கேற்ற விரும்ப வில்லை. இப்பேற்பட்ட தமை யனைக் கொலைசெய்துவிடுவதே உசிதம்" எனத் தீர்மானித்து, தமையனின் அரண்மனைக்குள் சென்றான்.

அந்தச் சமயத்தில் வரதுங்க ராமபாண்டியன் சிவ பூஜை செய்து நிஷ்டையில் அமர்ந் திருந்தான். "நிஷ்டையிலிருக் கும் பொழுது வதைக்கக் கூடாது, நிஷ்டை கலைந்து எழுந்ததும் வெட்டி வீழ்த்த வேண்டும்" என்று நினைத்து அவ னுக்குப் பின்னல் அதிவீரராம பாண்டியன் வாளை ஓங்கிய வண்ணம் நின்றுகொண்டிருந் தான். இத்தகைய அபாயகர மான நேரத்தில் தெய்வச் செய லாய் வரதுங்கராமபாண்டியன் "மனிதர்களுக்குக் கவிபாடக் கூடிய சக்தி வருவதே மிகவும் அபூர்வம். அப்படியிருக்க கவிதாசக்தி யடைந்தும் கட வுளைப் பற்றிக் கவிபாடி மோக்ஷத்தை அடையவிரும்பா மல் அழியும் நரனைப்பற்றிப் பாடி அழியாத நரகத்திற்கு ஆளாகின்றார்களே" என்றகருத் துகளடங்கிய ஒரு கவியைப்பாடி னன். அப்பொழுதுதான் அதி வீரராம பாண்டியனுக்கு உண்மை புலனாயிற்று. உடனே "அண்ணா, மகாபாதகத்தைச் செய்யத் துணிந்த என்னை மன் னிக்க வேண்டும்" என தமை யன் பாதத்தில் வீழ்ந்து நமஸ் கரித்து மன்னிப்புக்கேட்டான்.

அப்பொழுது வரதுங்கராம பாண்டியன் "அப்பா, நளன், நம்மைப்போன்ற ஒரு மனிதன் அவன் காலத்திற்குப்பின் இருப்பவர்கள் அவனது செயல் களைக் கதையாக வர்ணிக்கிறார் கள், அதுபோன்றே நமது காலத்திற்குப்பின் உள்ளோர் நமது செயல்களைக் கூறுவார் கள். இது சாதாரணமாக நடப்பது. நீ நளனைப்பற்றிப் பாடியதும் இதை ஒத்ததேதான்.

மேலும் நரஸ்துதி செய்வது மிகவும் பாபமான செயல் என் பதும் நீ நன்குணர்ந்ததேதான். ஆகையால் இப்பாபம் நீங்கு வதற்கு, இங்குள்ள பால்

வண்ணநாதராகிய சிவபெருமான் மீது அந்தாதி பாடு'' எனக் கூறினன். அவ்வாறே அதிவீரராம பாண்டியனும் கருவைத் திருவந்தாதி பாடினன். திருவாசகம்போல் இந்நூல் இருப்பதால் இதைக் 'குட்டித் திருவாசகம்' என்று கூறுவார்கள்.

பின்னர் "தம்பி, நீ எழுதிய நைடதம் வீண்போகவேண்டாம் அதை என் மனைவியிடம் கொடுத்து அரங்கேற்றிக் கொள்'' எனத் தமையன் கூறினன். அவ்வாறே அதிவீரராம பாண்டியன் தன் மதனியிடம் அரங்கேற்றுவதற்காக ஏட்டை கொடுத்தனுப்பினன்.

மதனியும் ஏட்டைப் பார்வையிட்டு தூதனிடம் "இவ்வேட்டின் நடை வேட்டை நாயின் நடைபோலிருக்கிறது'' என்று அதிவீரராம பாண்டியனிடம் கூறுமாறு சொல்லி யனுப்பினன்.

தூதன் வாயிலிருந்து இம்மொழிகளைக் கேட்ட அதிவீரராம பாண்டியன் அடங்காச் சினம் கொண்டு "என்ன இது, தமையனே ஏட்டைக்கண் கொண்டும் காண மறந்துவிட்டான்.

அவன் மனைவியோ, நமது ஏட்டின் நடையை வேட்டை நாய் நடைக்கு ஒப்பிட்டு மிகவும் துச்சமாகக் கூறுகிறான்- இவர்களை ஒழித்தே தீரவேண்டும்'' என நினைத்துத் தனது தமையனை யுத்தத்திற்கு அழைப்பதற்காக சைனியத்தை யுத்த பேரிகையையும் சங்கத்தையும் முழங்கச் செய்தான்.

இந்த யுத்த முரசொலியைக் கேட்ட வரதுங்கராம பாண்டியனின் மனைவி யார் யுத்த பேரிகையையும் சங்கத்தையும் முழக்குகிறார்கள் என்று விசாரித்தாள்.

நீங்கள் "வேட்டை நாய் நடை போல் இருக்கிறது என்று கூறிய வார்த்தைகளைக் கேட்ட உங்கள் மைத்துனர் அவர் தமையனை யுத்தத்திற்கு அழைக்கிறார்'' என ஒரு சேவகன் கூறினன்.

"ஓகோ, இந்த வார்த்தைக் காகவா யுத்தஞ்செய்ப முனைந்து விட்டார்?'' எனக் கூறி ஒரு ஏட்டை எடுத்து,

"செஞ்சுடரோன் மைந்தனையும்
தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரில் பார்த்தனையும்
பாராதே!
விஞ்சி விரதமே பூண்டு
இம்மேதினியை ஆண்ட
பரதனையும் ராமனையும்
பார்''

என்ற கவியை எழுதி அதிவீரராம பாண்டியனுக்கு அனுப்பினள்.

அதாவது "செஞ்சுடரோன் மைந்தன்'' சூரியனின் மகன் சுக்ரீவன், அவன் தமையனாகிய வாலியைக் கொன்றுவிட்டான்.

'தென்னிலங்கை வேந்தன்'' விபீஷ்ணன் தன் தமையனாகிய ராவணனைக் கொன்று விட்டான்.

''பஞ்சவரில் பார்த்தன்''

அர்ஜுனன் தன் தமையனை கர்ணனைக் கொன்று விட்டான். இவர்களைப்போல் நீயும் தமையனைக் கொல்லத் துணியாதே. குறிப்பிட்ட நேரத்தில் ராமன் அயோத்திக்குத் திரும்பாததால் அக்னிப் பிரவேசம். செய்யத் துணிந்த தம்பியாகியபரதனைப்போல்சகோதர வாஞ்சையுடன் அல்லவா நீயும் இருக்கவேண்டும்'' எனக் கூறுகின்ற அந்த எட்டை அதிவீரராம பாண்டியன் கண்ணுற்றதும் கோபம் தணிந்து மதனியாரிடம் நேரில் சென்று ''என் காவியத்தைப் புலவர்கள் எல்லாம் கரும்புபோல் இருக்கிறது என்று புகழ்ந்திருக்கிறார்கள்.

அவ்விதமிருக்க நீங்கள் மட்டும் என் ஏட்டின் நடைவேட்டை நாயின் நடைபோல் இருக்கிறது என்று கூறுகிறீர்களே, என்ன காரணத்தினால் அவ்விதம் கூறுகிறீர்கள்'' என்று கேட்டான்.

அதற்கு அவள் 'உங்கள் ஏட்டை மற்ற புலவர்கள் கரும்புபோலிருக்கிறது என்றார்கள். நான் வேட்டை நாய் நடைபோலிருக்கிறது என்று சொன்னேன். இரண்டுக்கும் பொருள் ஒன்றுதான். எப்படியென்றால், கரும்பை அடிப்பாகத்திலிருந்து தின்றுகொண்டுபோனால் மேல் போகப்போக இனிப்புகுறைந்து கொண்டே வந்து அந்த கொழுந்தாடையின் கடைசி பாகத்திற்கு வரும்பொழுது இனிப்பு முழுவதும் மறைந்து ருசியற்றுப்போகிறது.

அதுபோன்றே வேட்டை நாயும் முதலில் அதிவேகமாய் ஓடும். வரவர ஓட்டத்தின் வேகம் சிறிதுசிறிதாகக் குறைந்து முடிவில் ஓடசக்தியற்று, நாவைத் தொங்கவிட்டுக் கொண்டு களைத்துப் போகிறது. இதுபோன்றே உங்கள் ஏடும் ஆரம்பத்தில் மிகக் கடினமான பதங்களோடு விறுவிறுப்பாகவும் சுவையோடும் திகழ்கிறது. போகப்போக இனிப்புக் குறைந்துகொண்டு போகும். கரும்பு போலவும் ஓட்டம் தளர்ந்து கொண்டுபோகும் வேட்டை நாயைப்போன்றும் பலமற்று ருசியற்று முடிகிறது.

புலவர் கூறியதும் நான் கூறியதும் ஒரே பொருளைக் குறித்தவைதான் என்று இப்பொழுதாவது நீங்கள் உணர்வீர்களென்று நம்புகிறேன்' என்று கூறினான்.

இதைக் கேட்டதும் அதிவீரராமபாண்டியன் கோபம் தணிந்து உண்மையை உணர்ந்தான்.

அண்ணனுக்கும் தம்பிக்கும் மூண்ட தீராப்பகையைத் தன் கவிதா சக்தியாலும், சமயோசித அறிவாலும் தவிர்த்த இவ்வரசி போன்ற பல பெண்மணிகளைப் பெற்றிருந்தது நம்தமிழ் நாடு.

———

நான்கண்ட விஜயவாடா

சமீபத்தில் என் கணவருக்கு விஜயவாடாவில் உத்தியோகம் கிடைத்தது. சென்னையிலேயே பிறந்து வளர்ந்த எனக்கு விஜயவாடாவுக்குச் செல்லும்பொழுது ஊர் எப்படியிருக்குமோ என மனம் நிலைகொள்ளாதிருந்தது. ஆனால் நாங்கள் அங்கே தங்கியிருந்த ஆறுமாதங்களுக்குள் அவ்வூரின் வனப்பு என்னை மிகவும் களிப்பூட்டியது. பெரிய வியாபார ஸ்தலங்கள், தொழிற்சாலைகள், மாடமாளிகைகள் முதலான சகல செயற்கை அம்சங்களில் இந்நகர் சென்னைமாநகரை ஒத்திருந்தாலும் இயற்கையின் அதி உன்னத அழகே இந்நகருக்குச் சிறப்பை யூட்டுகிறது.

இங்கே கிருஷ்ணா நதி ஓடுகிறது. கிருஷ்ணா கால்வாய், பக்கிங்ஹாம் கால்வாய், ஏலூரு கால்வாய், பந்தர் கால்வாய் போன்ற கால்வாய்களும் சுற்றிலும் மலைகளும் உள்ளன. இம்மலைகளில் ஒன்றில்தான் சாந்தி துர்க்கா தேவி கோயில் உள்ளது. விக்ரஹமும், கோயிலும், மண்டபமும் அழகாக அமைந்துள்ளன. அதன் பக்கத்தில் ஈசுவரன் கோயிலும் இருக்கிறது. இவற்றில் புண்ணிய தீர்த்தமும் உள்ளது. இந்த மலைக்சருகிலேயுள்ள மற்றொரு மலையிலே அர்ஜுனன் காண்டிபம் பெற தவம் செய்த இடம் இருக்கிறது.

“நீர்வளமும், நிலவளமும் குடிவளமும்” என்பார்களே, அவ்வித வளங்களோடுகூடிய ஊர் எது என்று கேட்டால் அது விஜயவாடாதான் என்பதை நான் நிதர்சனமாக அறிந்தேன். நிலம் எப்படி வளப்பமடைந்து இருக்கிறதோ அதுபோன்றே மக்களும் வாட்டசாட்டமான வளப்பத்துடன் புத்திசாலிகளாகவும் நாகரிகமாகவுமிருக்கின்றனர். சூர்ப்பனகை ராஜ்யமோ என்று சொல்லும்படி இங்குள்ள பெண்கள் எல்லோரும் திடமாகவும் வீரியம்பொருந்தியவர்களாகவும் காணப்படுகின்றனர்.

மக்களில் பெரும்பாலோர் நிலச்சுவான்தார்கள். இவர்கள் வணிகர்கள் அநேகர் வியாபாரத் துறையிலும், ஈடுபட்டுள்ளனர். நெய்யும், ஊறுகாயும்

இவர்கள் அதிகமாய் உபயோகிப்பது பிரசித்தமானது. எல்லோரும் மிகுந்த தெய்வ க்தியுடையவர்கள். துளசி பூஜை இவர்களுக்கு முக்கியமானது. கார்த்திகை மாதம் முழுவதிலும் ஒவ்வோர் வீட்டிலும் சதா பூஜை மயமாயிருக்கும். இவர்கள் வீட்டிற்கு மஞ்சள் குங்குமத்திற்குச் சென்ருல் காலை நீட்டச் சொல்லி மஞ்சள் பூசுகிருர்கள். பிறகு நெற்றியில் பொட்டுவைக்கிருர்கள். பிறகு மூன்று வெற்றிலையில் மூன்று மஞ்சள் வைத்துக் கொடுக்கிருர்கள். கரண்டியால் பரிமாறுவதை ஆசாரக் குறைவாக மதிக்கின்றனர். பெண்கள் எல்லோரும் நகைப்பிரியர்கள். அறுபது, அறுபத்தைந்து வயதுடைய முதியவர்களுங்கூட கழுத்து நிறையச் சங்கிலியும் ஒட்டியாணமும் வங்கியும் அணிகின்றனர்.

இங்குள்ள மக்களில் அநேகர் ஹிந்தி கற்றுக்கொள்ளுகின்றனர். ஆனல் ஹிந்தி வாக்கியங்களைத் தெலுங்கு அக்ஷரங்களில்தான் எழுதுகிருர்கள். ஹிந்தி அக்ஷரங்களை எழுதவும், வாசிக்கவும், கற்றுக் கொள்ளாமல், ஹிந்து பாஷையைத் தனித் தெலுங்கிலேயே, கற்றுக்கொள்ளும் அதிசயத்தை இங்கே கண்டேன். காய்கறிகளும் புஷ்பங்களும் அந்தந்த காலத்தில் ஏராளமாய் கிடைக்கும். சாத்துக்குடி, சர்க்கரைகிளி பழத்திற்கும், மாம்பழத்திற்கும் பேர் போனது. பெரும்பான்மையான இடம் விளை நிலமாயிருப்பதால் அரிசிக்குக் குறைவில்லை. கனக துர்க்காதேவி அங்குள்ள அவளுடைய அடியவர்களுக்கு கனகத்தையே வர்ஷிக்கிருள் என்றுதான் சொல்லவேண்டும். இவ்வளவு நீர் வளமும் நில வளமும் இயற்கை அழகும் கூடிய ஒரு நகரை நம் சென்னை ராஜ்யம் பிரிந்தது வருந்தத் தக்கது.

"மஹாலக்ஷ்மி"

நீதி விலக, கேடுவிளைந்தது

●

ஆதிகாலத்தில நமது பரத கண்டம் ஐம்பத்தாறு சிறு சிறு ராஜ்யங்களாகப்பிரித்து ஐம்பத்தாறு மன்னர்களால் ஆளப்பட்டுவந்தது.

விந்திய—சாத்பூரா மலைப் பிரதேசத்தில் விசேஷமாக அமைக்கப்பட்ட ஒரு மண்டபத்தில், இந்த ஐம்பத்தாறு தேச மன்னர்களும், பன்னிரு வருடங்களுக்கொருமுறை கூடி, அவரவர் நிர்வாகங்களைப் பற்றியும் அந்தந்த ராஜ்யத்தின் சுபிட்சத்தைப் பற்றியும் பேசுவது வழக்கமாயிருந்தது.

மேற்கூறிய வழக்கப்படி ஒரு முறை ஐம்பத்தாறு தேச மன்னர்களும் இந்த இடத்தில் கூடினர். அச்சமயம் திடீரென இடி மின்னல் முழக்கத்துடனும் பெரும்புயற்காற்றடித்தது. மின்னல் கண்ணையே கொண்டு போய்விடுகிறமாதிரியும், இடி காதையே செவிடாக்கும் அளவுக்கும், மிகவும் உக்கிரகமாயிருந்தது.

ஆலங்கட்டியுடன் அகோரக் கோடை மழை வருஷித்தது. நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகரித்துக்கொண்டே வந்த மின்னலும், முழக்கமும் கண்டிப்பாய் இடி விழுந்தே தீரும் என்ற அறிகுறியை ஸ்திரப்படுத்தியது.

ஐம்பத்தாறு தேச மன்னர்களுக்கும் மிகுந்த பயம் ஏற்பட்டது ஒரு வேளை அவர்கள் கூடியிருந்த மண்டபத்திலேயே இடி விழலாம் என அவர்கள் திகிலடைந்தனர்.

'கொடிய மின்னல் முழக்கங்களோடு கூடிய கோர கோடை மழையினால் தீங்கு சம்பவிப்பதற்கு நம்மில் யாரோ ஒருவர் அநீதியான மன்னராய் இருக்க வேண்டும். ஆகையால் மண்டபத்திலே இடிவிழவும் கூடும். இந்த அநீதியான் மன்னர் ஒருவரால் நாம் யாவரும் உயிர் இழப்பதா? அந்த அநீதியான மன்னனை மண்டபத்தினின்று வெளியேற்றினால் இடி அவரை மட்டும் பலியாக்கிக்கொள்ளும். நாம் யாவரும் பிழைத்துக் கொள்ளலாம்' என ஆலோசித்து ஒரு முடிவிற்கு வந்தனர்.

ஆனால் இந்த ஐம்பத்தாறு மன்னர்களில் யார் அநீதியான மன்னர்என்பதை கண்டுபிடிப்பதெப்படி என்ற பிரச்னை அவர்

களுக்குள்ளேயே எழுந்தது. மண்டபத்திற்கு வெளியே ஒரு பர்லாங்கு தூரத்தில் ஒரு ஆல விருக்ஷம் இருந்தது.

மண்டபத்தில் வீற்றிருந்த ஐம்பத்தாறு தேச மன்னர்களும் வரிசைக்கிரமமாக ஒவ்வொருவராய் அந்த ஆல விருக்ஷத்தைத் தொட்டுவிட்டு வருகையில் யார் அநீதியான மன்னனோ அவரை மட்டும் இடி அழித்துவிடும், மற்றவர்களின் உயிரைப் பாதுகாக்கலாம் என்று முடிவு செய்தனர். இதற்கிணங்க, ஆலவிருக்ஷத்தைத் தொட்டுவிட்டு இவ்விதம் ஐம்பத்தைந்து பேர்களும் ஒவ்வொருவராய் நீதிவழுவா மன்னர்களென நிருபிப்பதற்கு சாட்சியளிப்பதுபோல, மண்டபத்திற்கு மீண்டும் வந்து சேர்ந்தனர்.

ஐம்பத்தாறுவது மன்னன் கடைசியாக போகவேண்டிய முறையில் இருந்தான். மற்றமன்னர்களுக்கெல்லாம் தாங்கள் எல்லோரும் ஆல விருக்ஷத்தைத் தொட்டுவிட்டு உயிரிழக்காமல் க்ஷேமமாய்த்திரும்பிவிட்டதால், கடைசியாக இருந்த மன்னனே அநீதியானவன் என்ற சந்தேகம் யாவருக்கும் உதித்தது. யாவருக்கும் கடைசியாகச் செல்லும் மன்னனும் "நாம் மக்கள் ஒவ்வொருவருக்கும் எவ்வளவோ நன்மைபுரிந்திருக்கிறோம். அவர்களுக்கு ஒரு குறையுமில்லாது பாதுகாத்து வந்திருக்கிறோம். நமக்குத் தெரியாமல் ஏதாவது மக்களுக்கு அநீதி இழைத்தோமோ என்னவோ எதுவாயினும் சரி. எல்லாம் ஆண்டவன் செயல்" என மனம் துணிந்து மண்டபத்தை விட்டு வெளியேறினான். "முக்கால்பாகத்திற்கு வந்துவிட்டோம், விருக்ஷத்திற் கருகே வந்துவிட்டோம், இதுவரை நமக்கு ஒரு தீங்கும் நேரவில்லை" என்று சற்றுத் தைரியத்துடன் விருக்ஷத்தை அடிமேல் அடியாக நடந்து நெருங்கிவந்துகொண்டேயிருந்தான். முடிவில் விருக்ஷத்தைத் தொட்டும் விட்டான். உடனே, என்ன ஆச்சரியம் காதுகள் செவிடுபடும்படியும் அண்டம் கிடுகிடுக்கும்படியும் பலத்த ஓசையுடன் இடி விழுந்தது. ஆனால் இடிவிழுந்தது மண்டபத்திலே! மிகுந்த நீதிமான்கள் எனப் பெருமையடைந்திருந்த ஐம்பத்தைந்து மன்னர்களும் இடியால் தாக்குண்டு மாண்டனர்.

நீதிமானு அல்லவா? என்று சந்தேகத்திற்குப் பாத்திரமான ஐம்பத்தாறுவது கடைசி மன்னன் உயிர்தப்பினான். நீதிமான் யார் என நிர்ணயிக்கும் கடமை தன்னையே சேர்ந்ததென்பதற்கு அத்தாட்சியளித்தார் ஆண்டவன்!

ஞானிகள் வாழ்க்கையை சமுத்திரத்திற்கு ஒப்பிட்டனர். இன்றைய விஞ்ஞானிகளோ உடலையே சமுத்திரத்திற்கு ஒப்பிடுகின்றனர்.

சரீரத்தில் சாகரம்

●

தத்துவஞானிகள், பூமியாகிய அண்டத்தைப் போலவே மனித சரீரமாகிய பிண்டமும் அமைந்திருக்கிறதெனக் கூறுகின்றனர். பூமியின் முக்கால் பாகமும் சமுத்திரமாகிய நீர் நிலைபால் (ஏழு சமுத்திரங்கள்) சூழப்பட்டிருக்கிற தென்பதை பூமிசாஸ்திரத்திலிருந்து யாவரும் அறிந்ததே.

பூமியைப்போன்றே மனித உடலில் முக்கால் பாகம் இரத்தம் முதலான நீர் நிலையால் கூடியதே. பார்வைக்கு சதை எலும்பு, நரம்பு முதலியவற்றேடு திடப்பொருளாகத் தோன்றும் சரீரம் முக்கால் பங்கிற்கு திராவகப் பதார்த்தத்துடன் கூடியிருக்கிறதென்ற உண்மை யாருக்கும் வியப்பை அளிக்கலாம்.

தசைகளில், ஐந்தில் நான்கு பாகம் இரத்தம் முதலான பல வகைத் திராவகப் பதார்த்தங்கள் அமைந்திருக்கின்றன. மிகவும் இறுகி உலர்ந்த கடினமான பொருளை எலும்புபோலிருக்கிறதென்பார்கள்.

இவ்வித எலும்பாகிய கடின பதார்த்தத்திலுங்கூட மூன்றில் ஒருபாகம் திராவகம் அடங்கியிருக்கிறது. அடுக்கடுக்காகச் செங்கற்களை வைத்து சுவரை அமைப்பதுபோல் நமது சரீரமும் அடுக்கடுக்கான தசைகளாலும் அடுக்கடுக்கான எலும்புகளாலும் அமைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு அடுக்குக்கும் இடையே இரத்தம் முதலான நீர்நிலைகள் இருக்கின்றன. இவை ஒவ்வொரு நிலைக்கும் சென்று பாய்ந்துகொண்டிருக்கும்.

சரீரத்தில் தங்கியுள்ள நீர் சுத்தமானதல்ல. ஜடராக்கினி, பொட்டாஷியம், சர்க்கரைச் சத்து முதலான பல ரசாயனப் பொருள்கள் கலந்ததாகவே

இருக்கும். இவை ஒவ்வொரு தனி உறுப்பிலும் கலந்திருக்கும். ஒவ்வொரு உறுப்புக்கு மிடையேயும் வெளியேயும் உள்ள நீரில், சமுத்திர ஜலத்தில் நிரந்தரமாய் என்னென்ன சத்துக்கள் கலந்துள்ளனவோ அந்த சத்துக்கள் யாவும் நிரம்பியிருக்கின்றன.

உலகம் தோன்றிய காலத்தில் சமுத்திரத்தில்தான் ஜீவராசிகள் இருந்தனவென்றும் இவ்விதம் சமுத்திரத்தில் இருந்த ஜீவராசிகளே ஜீவபேத முன்னேற்றத்தில் ஊர்வன, நடப்பன, பறப்பன, செயல்கொண்டிருப்பன ஆகிய நால்வகை யோனி, எழுவகைத் தோற்றம், 84 லட்சம் ஜீவபேதங்களாக உலகில் உற்பத்தியாயின வென்றும் இன்று தோன்றுகிற இந்த ஜீவராசிகளுக்கெல்லாம் ஆதி உற்பத்தி ஸ்தானம் சமுத்திரமாயிருந்ததால்தான் இந்த ஜீவராசிகளின் உடலில் சமுத்திர நீரின் சத்து இருக்கிறதென்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

சமுத்திர ஜலம் பலவித மாறுபட்ட நீரோட்டமாகவும் அலைகளாக மோதியும் நிலையில்லாது இயங்கிக்கொண்டிருப்பது போலவே சரீரத்தின் தசை அடுக்குகளின் ஊடேயிருக்கும் நீர் தசை அடுக்குகளுக்கு வெளியேவந்து பின் உள் சென்றும் தசைகளிலே உள்ள நீர் இரத்தக்குழாயாகிய நாணங்களுக்கும், நாணங்களிலிருந்து தசைகளுக்குமாக மாறி மாறி இயங்கிக் கொண்டிருக்கின்றன.

சமுத்திர நீரோட்டம்போல் ஓடிக்கொண்டிருக்கையில் ஆகார சத்துகளும் சுத்த அசுத்த பொருள்களும் இவற்றுடன் கலந்தே சென்றுகொண்டிருக்கின்றன. பொதுவில் சமுத்திரநீரைப் போன்றே சரீரத்திலுள்ள நீரும் சதா இயங்கிக் கொண்டே யிருக்கிறது.

நீர் நிறைந்த சமுத்திரமானது சங்கமமாகும் பல நதிகளின் நீரையும் தன்னுள் கொள்கிறது. சங்கமமாகும் நதிகளின் ஜலப் பிரவாகங்களெல்லாம் சமுத்திரத்தை வந்தடைந்தாலும் சமுத்திரம் ஒரே அளவில் இருப்பதற்குக் காரணம், ஏராளமான நீர் ஆவியாய் மாறிவிடுவதால் தான். அதுபோன்றே ஜீவராசிகளின் உடலில் இயற்கையாகவே முக்கால் பாகம் நீராக இருந்தபோதிலும் (சமுத்திரத்தில் நதிகள் சங்கமம் ஆவதுபோல்) மேலும் மேலும் நீரை ஜீவராசிகள் உட்கொள்கின்றன.

இவ்விதம் ஜீவராசிகள் உட்கொள்ளும் நீர் கழிவுகளாக வெளியாகின்றது. இவ்விதம் சரீரத்திற்கு நீரை உட்கொள்ளும் தேவையும் அதை வெளிப்படுத்தும் சக்தியும் இருப்பது தான் பூரண ஆரோக்கியத்திற்கு அறிகுறியாகும். தாக மெடுக்கும்போது நீர் உட்

கொள்வதோடு அதிகமான நீர், காய் கறி, மாமிசம் முதலான ஆகாரப்பொருள்கள் மூலமாகவும் உட்செல்கின்றது. பொதுவாக நீரோடு ஆகாராதிகளிலுள்ள மிகுதியான நீரையும் ஜீவராசிகள் உட்கொள்கின்றன.

உட்கொள்ளும் ஆகாராதிகள் ஜீரணிக்கும் உறுப்புகளிலிருந்தும் (பூமியில் நீர் ஊற்று உண்டாவதுபோல்) நீர் சுரக்கின்றது. எப்பொழுதுமே சரீரத்திலுள்ள நீரானது சுவாசத்தின் மூலமாகவும் ரோமச்கண்களின் வழியே வியர்வையாகவும், ஆவியாகவும் வெளிப்படுத்தப் படுகிறது. இதனுல் சரீரத்திலுள்ள உஷ்ணத்தில் கால் பாகம் குறைகிறது.

சரீரத்திலுள்ள நீரில் ஆரோக்கியத்திற்கு அவசியமான பொருள்களில் உப்புச் சத்து மிகவும் முக்கியமானது. இது வியர்வையுடன் கலந்து வெளியாகிறது. இந்த உப்புச் சத்து அளவுக்குமீறி அதிகமாக வெளிப்பட்டால் தேகத்திற்குத் தீங்குநேரிடும். ஆகவே அதிகமாக வியர்வை உண்டானுல் அது அபாயகரமான நோய்க்கு அறிகுறியாகும்.

நீரிலுள்ள உப்புச் சத்தானது மனிதர்களுக்குத்தான் வியர்வை மூலம் வெளியாகிறது. ஆனுல் விலங்கினங்களில் குதிரைக்கும் கழுதைக்கும் மிகுதியான வியர்வை வெளிப்பட்ட போதிலும் அவ் வியர்வையில் உப்புச்சத்து வெளியாவதில்லே. வெறும் நீராகத்தான் வெளிப்படுகிறது.

மற்றும் உஷ்ணப் பிரதேசங்களிலுள்ள சில விலங்கினங்களுக்கு வியர்வை வெளியாவதில்லே. அதனுல் அவற்றின் உடலில் நீர் குறைவும் உப்புச் சத்துக் குறைவும் ஏற்படுவதில்லே உதாரணமாக மிகுந்த உஷ்ணகாலத்தில், நடுப்பகலில் நாய்களின் உடலிலுள்ள நீர் அதிவேகமாக ஓடுகிறது: அந் நீர் வியர்வையாக வெளிப்படாததால்தான் மூச்சுத்திணறிகளைப்படைகிறது.

சரீரத்திற்கு நீரை உட்கொள்வதும் நீரை வெளிப்படுத்துவதும் பொது அம்சமாக இருக்கிறது. இவற்றில் மாறுபாடு ஏற்படுவது சரீரத்தைப் பாதிக்கும் நோயின் அறிகுறியாகும். நீரை உட்கொள்வதும் வெளிப்படுத்துவதும் குறிப்பிட்ட அளவுள்ளதாக இருக்கிறது. ஆனுல் எந்த குறிப்பிட்ட அளவுக்கு நீரை உட்கொள்ளவேண்டும் எந்தக் குறிப்பிட்ட அளவுக்கு நீரை வெளிப்படுத்தவேண்டும என்ற திட்டவட்டமான அளவை இப்பொழுதுதான் ரஸாயன நிபுணர்கள் ஆராயத் தொடங்கியிருக்கிருர்கள்.

பல நோய்களேயும் அவற்றைப் போக்கத் தகுந்த பல

மருந்துகளையும் சாஸ்திரீயமாய் ஆராய்ந்து அறிந்துவருகின்றனர். அதுபோலவே நீரைப் பருகுவதிலும் வெளிப்படுத்துவதிலும். ஒரு திட்டவட்டமான அளவை அறிய இன்றும் முயற்சித்து வருகின்றனர்.

குலேவாய்வு என்னும் ஹிருதய நோயின் கிருமிகள் சரீரத்திலுள்ள நீர் முழுவதையும் தசையில் கொண்டுவந்து சேர்த்துவிடுகிறது. இதனால் சரீர முழுவதிலும் நிரந்தரமாயுள்ள நீரோட்டம் கிருமிகளால் மேற்கூறியவாறு பாதிக்கப்படுவதால் அபாயம் நேருகிறது.

சரீர ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் பொருட்டு சுகாதாரத் துறையின் அறிவு எவ்வளவோ முன்னேற்றமடைந்திருக்கும் இக்காலத்திலும் மனித சரீரத்தில் அடங்கியிருக்கும் சமுத்திரத்தைப் பற்றிய ஆராயும் அறிவு மிகக் குறைவாகவே யிருக்கிறது.

செவிடர் பேரம்!

செவிடர் ஒருவர் ஜவுளி எடுப்பதற்காக ஜவுளிக் கடைக்குச் சென்ருர். அவர் தனக்கு வேண்டிய துணியைப் பொறுக்கி எடுத்து "கெஜம் என்ன விலே" என்று கடைக்காரரைக் கேட்டார்.

கடைக்காரர் "கெஜம் நான்கணு" என்று தெரிவித்தார். அதற்குச் செவிடர் இதற்கா பதினன்கணு? பத்தணு வைத்துக் கொள்ளுங்களேன்" என்ருர்.

கடைக்காரர் மிகவும் நாணயமானவரார்தலால் அவருக்குப் புரியும்படி உரக்கச் சத்தம் போட்டு "இல்லே, நான்கணுத்தான் விலே" என்ருர். உடனே செவிடர், "அப்படியானல் இரண்டணு வைத்துக் கொள்ளுங்கள்" என்ருர்.

உறுதுணை பயப்பது எது?

இந்தியாவையும், பலதேசங்களையும் நேரில் நன்கறிந்த ஆங்கிலப் பேராசிரியர் ஒருவர் சிறந்த "ஆத்மீக நாடு எது? என்று என்னைக் கேட்பீர்களானல், இந்தியாவையே சுட்டிக் காட்டுவேன்" எனக் கூறியிருக்கிறார்.

ஆதிகாலத்தில் நமது நாட்டு மன்னர்கள் அவர்களது ஜீவிய காலத்தின் பெரும்பகுதியைப் போர்க்களத்திலும் வீரச்செயல்களிலும் கழித்து அதனல்வரும் இன்பத்தையும் ஆட்சிமுறையின் உயர்வையும் ஆழ்ந்த மதப்பற்றையும் என்றும் மழியாது விளங்கச் செய்வித்திருப்பது அவர்கள் கட்டுவித்த ஆலயங்கள் அன்றே?

இவ்வாலயங்களின் கைங்கரியங்கள் என்றும் குறையாது நடைபெற்று வரவேண்டுமென்பதற்காக அவர்கள் செய்து வைத்திருக்கும் நன்கொடைகள் தான் எவ்வளவு? காலமென்னும் மணற்பரப்பில் நம் காலடிச் சுவடுகளை நன்கு ஆழப்பதியவைத்து பின்வரும் சந்ததிகளுக்குச் சிறந்த தெய்வீக மார்க்கத்திற்கு வழிகாட்டிகளாய் செய்துவைத்திருக்கும் இவ்வாலயங்களால் என்ன பயன் என்றும் "தெய்வம் என்பதேது? எல்லாம் இயற்கையில் நடப்பவையே" எனக் கூறும் நாஸ்திகர்கள் நமதுநாட்டில் மிகுதியாகத் தோன்றி இளம் உள்ளங்களிலும் அதிலும் மாணவர்களின் உள்ளங்களிலேயும், நாஸ்திகத்தைப் பரப்பிவருகின்றனர். கடவுள் செயல் என்பதெல்லாம் பொய் — எல்லாம் இயற்கையாகவே நடப்பவை என நம்பிக்கை கொண்டு கடவுளின் நாமத்தை நாவில் உச்சரிக்காமலும் தெய்வத்தைப் பற்றிச் சிறிதேனும் சிந்திக்காமலுமிருந்த சிலர் அவர்களின் மரணத்தருவாயில் மரணவஸ்தையில் அவர்களை அறியாமலேயே "தெய்வமே!" எனக் கூறியிருக்கிறார்கள்.

கடவுள் இருக்கிறாரா? இல்லையா? என்ற பிரச்னை லகுவான பிரச்னையல்ல. "அப்பாலும் அறிகின்ற அறிவினை அறிந்து பார்க்கில் எண்திசையெலாம் விளங்கும் ஒரு தெய்வ அருள் அல்லாமல் இல்லை" என்ற பெரியாரின் வாக்குப்படி

மேற்கூறிய பிரச்னேயில், கடவுள் இருக்கிருர் என்ற முடிவுக்கு வருவதற்காகவே ''அப்பாலும் அறிகின்ற அறிவாகிய பேரறிவை'' ஆண்டவன் மனிதனுக்கு மட்டும் கொடுத்திருக்கிருர்.

நாஸ்திகத்தை உலகமெங்கும் பரவச்செய்வதையே லட்சியமாகக் கொண்ட ருஷ்யநாட்டுத் தலேவர் ஸ்டாலின் அவரது மரணத்தருவாயில் ருஷ்ய நாட்டிலுள்ள எல்லா கோயில்களிலும் பிரார்த்தனே நடத்தச் சொன்னுர். தீவிர தெய்வ நம்பிக்கையும் மதக்கோட்பாடும் அமெரிக்கர்களுக்குக் கிடையாதென நாம் கருதுகிருேம். ஒரு பிரபல அமெரிக்க ஆசிரியரின் புத்தகத்திலிருந்து நாம் நினேப்பது சரியல்ல என்று தெரியவருகிறது. சினிமா நடிகை ஒருத்தி அகால மரணமடைந்தாளாம். அவளுடைய நண்பர் ஒருவர் அவள் சரீரத்தை அடக்கம் செய்ய ஏற்பாடு செய்தார். அவள் உயிரோடிருந்த பொழுது எவ்வளவு புகழ் பெற்ருளோ அதைவிட பன்மடங்கு மரணத்திற்கு பிறகும் அவள் புகழ்பெற ஒரு யுக்தியைக் கையாண்டார். அது வென்ன வென்ருல்? அவளுடைய உடலே அடக்கஞ் செய்யும் பொழுது அவ்வூரிலுள்ள நான்கு தேவாலயங்களிலும் இரவும் பகலும் இடைவிடாது 24 மணி நேரமும் மணி அடிக்கவும் தொடர்ந்து பிரார்த்தனே நடத்தவும் ஏற்பாடு செய்தார். இந்த சம்பவத்திலிருந்து அவ்வூரில் தெய்வ நம்பிக்கையும் மதப்பற்றும் பன்மடங்கு அதிகமாக ஸ்திரமாயிருந்தது அமெரிக்காவில் இருநூறுக்கு மேற்பட்ட மதங்களிருக்கின்றன. அவ்வாறே சகல தேசங்களில் எண்ணற்ற மதங்களேப் பின்பற்றுகின்றனர்.

பல மதங்களில் வெளியாகும் புள்ளிவிவரங்களில் இம்மாதிரி மத வரலாறு விவரமாகவருங் காரணமென்ன வென்ருல் மதத்தைவிடத் தயாரில்லேஎன்ற மனப்பான்மைகொண்ட ஜனங்கள் உலகமுழுவதும் பரவியிருப்பதால் தான். தெய்வத்திற்காக, தெய்வநம்பிக்கைக்காக மதங்கள் தோன்றியிருக்கின்றன.

பஞ்சபூதங்களின் இயக்கங்களெல்லாம் தெய்வத்தால் வரையறுக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் வரையறுக்கப்பட்டிருப்பதனுல் தான், சமுத்திரத்தில் செல்லும் கப்பல்கள் எல்லாம் அபாயமின்றி செல்கின்றன. புயற்காற்று வீசும்போது கப்பல் கவிழ்ந்துவிடாதபடி கப்பலின் நான்கு புறங்களிலும் நங்கூரம் பாய்ச்சுகிருர்கள். அந்த நங்கூரங்களேயும் பெயர்த்து கவிழ்த்துவிடுகிறது கடும் புயல. மனிதனுடைய சக்திக்குமீறிய தெய்வசக்தி யொன்று இருக்கிறது என நமக்குத்தெரிவது இம்மாதிரி அநேக சம்பவங்கள் நடக்கும் பொழுதுதான்.

"தீட்டுவோனின்றி ஆமோசித்தி
திகழ்பொற் பாவை [ரம்
ஆட்டுவோனின்றி தானே ஆடு
திவ்ய யாழின் [மோ
மீட்டுவோ னின்றி கீதம்விளையு
சராசரங்கள் [மோ
காட்டுவோனின்றி நன்மை
விளந்தொழுகும் கொல்
[லோ"

என்பதற்கிணங்க சராசரங்களை நோக்குங்கால், இவற்றைப் படைத்த ஒரு கடவுள் உண்டு என்பது நமக்கு நிச்சயமாய்த் தோன்றுகிறது.

முன்னர் கூறியது போல், கடவுள்களுக்காக மதங்களே தவிர, மதங்களுக்காக பல கடவுள்கள் ஏற்படமுடியாது. ஒரு ஹிந்து, ஒரு முஸ்லீம் ஒரு கிருஸ்துவர்; ஒரு பௌத்தர், ஒரு ஜைனர் ஆகிய ஐந்து மதஸ்தர்களையும் படைத்தது, ஒரு கடவுளே தவிர, ஐந்து கடவுள்கள் அல்ல.

யாவற்றையும் படைத்துக் காத்தது அழிக்கும் பொருள் ஒன்றேதான். அப்பொருளைப் பல பாஷைகளில் பல பெயர்களில் கூறுகின்றனர். சுத்தமான தண்ணீருக்கு நிறம், ருசி கிடையாது. ஆனால், அது மண்ணின் நிறத்தையும் ருசியையும், பெறுவதைப்போலவே சுத்த சைதன்ய சொரூபனன கடவுளுக்கு மதங்களின் மூலம் பற்பல கோட்பாடுகளை அமைத்திருக்கின்றனர். ஒரே தங்கம் பல ஆபரணங்களாகின்றன.

பல ஆபரணங்களாயிருப்பது ஒரே தங்கம்தான். அது போன்றே கடவுளுக்குப் பற்பல பெயர்களைக் கற்பிக்கின்றனர்.

பல பெயர்களாக விளங்கும் கடவுளும் ஒருவராவார். இவ்விதமாக பல மதங்களில் ஆயிரக்கணக்கான நாமங்களில் விளங்கும் ஒரே கடவுளை உணர்வதுதான் மானிட ஜன்மம் எடுத்ததன் பயனாகும்.

'கற்றதனால் ஆய பயன்கொல் வாலறிவன் நற்றாள் தொழாரெனின்'

என்ற தமிழ்ப் மறைப்படி தெய்வத்தை நினையாமலும், வணங்காமலும் இருப்பவர்கள் கல்வி கற்று என்ன பயன்?

தெய்வத்தை, தெய்வச் செயலை தமது (யுக்தி) அறிவால் அறிந்து தாம் அறிந்தவற்றை அனுபவத்தில் உணர்ந்து தாம் அறிந்தும் அனுபவித்ததுமாகிய விவரத்தையே வேதமாக(சுருதி) எழுதினார்கள் மதாச்சாரியர்கள். இதுவே சுருதி, யுக்தி அனுபவம் எனப்படும். இவ்விதம் பிரம்மஞானிகளால் எழுதப்பட்டவைகளே சமய நூல்களாகும்.

செய்யத்தகுந்தவை புண்ணியச் செயல்களென்றும், செய்யத் தகாதவை பாவச் செயல்களென்றும் இவை வரையறுக்கப் பட்டுக் கடவுளின் அந்நியோன்னிய அன்பிற்கு புண்ணிய கரு

மங்களே ஆதாரமானவையென சகல மத நூற்களும் கூறுகின்றன.

ஆகையால் எவனொருவனுக்கு மதப் பற்றில்லையோ, அவனுக்குத் தெய்வ நம்பிக்கையும் ஏற்படாது.

அவன் பாப புண்ணியங்களுக்குப் பயப்படவும் மாட்டான்.

தான் எது செய்தாலும் தான் தோன்றித்தனமாகவேதான் செய்வான்.

மதங்கள் போதிப்பதென்னவென்றால், கடவுளே அன்பாக விளங்குகிறாரென்றும் மனிதர்கள் ஒருவருக்கொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதேதான்.

ஆகையால் தெய்வநம்பிக்கையுடையவர்கள்தான் உலகத்திலுள்ள சகல ஜீவ ராசிகளிடத்தும் அன்பாயிருப்பார்கள்.

சில பெரியார்கள் தெய்வ நாமத்தை சதா உச்சரிப்பதையும் அவர்களின் சகல செய்கைகளும் தெய்வத்தின் அருளால் நேருகின்றன என்று சொல்வதையும் நாம் சகஜமாய் கேட்கிறோம்.

இதற்கு உதாரணமாகக் கூற வேண்டுமானால் தெய்வீகப் புனிதத் தன்மையில் விளங்கியவர் மகாத்மா காந்தி யாவார். இது போன்றே பல அறிஞர்களும், தெய்வ நம்பிக்கையுடையவர்களும் அவர்களுடைய செயல்களின் பொறுப்பையெல்லாம் தெய்வ சங்கல்பமாகக் கூறுவதை நாம் அர்த்தமற்றது என நினைப்பது தவறு.

நற்செயல்களுக்குத் தூண்டுவதும், தீய காரியங்களைத் தடுப்பதும் நம் இதயத்திலிருந்து உணர்வதே தெய்வ நம்பிக்கைக்கு அறிகுறி.

இம்மாதிரி சிந்தனையை தெய்வத்தினிடத்தில் செலுத்துவார்களே யானால், லோகோபகாரிகளாகத் திகழ்வார்கள்.

இதிலிருந்து கடவுள் நம்பிக்கை மனிதனுக்கு எவ்வளவு உறுதுணையாகும் என்பது நன்கு புலப்படுகிறது.

சமீபகாலத்தில் அமெரிக்காவில்
நிகழ்ந்த ஓர் உண்மை சம்பவம்.

"இன்னும் ஒருவருக்கு இடமிருக்கிறது"

●

நியூயார்க் நகரவாசியான ஒரு யுவதியை ஆயிரமைல்களுக்கு அப்பால், தேயிலை, காப்பி முதலான பயிர்களுடைய ஒரு எஸ்டேட்டிற்கு, அவளுடைய சொந்தக்காரர்கள் விருந்திற்கு அழைத்தார்கள்.

அவளும் அவ்வாறே அவர்களுடைய அழைப்பிற்கு இணங்கி அங்கு சென்றாள். அவள் அங்கு வந்து சேர்ந்தது காலைநேரம். அன்று முழுவதும், உறவினருடன், வெகு குதூகலமாய் அளவளாவி, எஸ்டேட்டின், வனப்பை கண்டு மனப் பரவசமடைந்தாள்.

அன்று இரவு, உணவு அருந்தியபின் அவளுக்குத் தனியாக வசதி செய்யப்பட்டிருந்த அறைக்கு நித்திரைக்குச் சென்றாள். அவள் படுக்கை அறைக்கு வரும்பொழுது சுமார் பத்தரை மணியிருக்கும். படுக்கை அறையின் ஜன்னல் வழியாக சந்திரனின் ஒளி மிகவும் குளிர்ச்சியாகப் பிரகாசித்துக்கொண்டிருந்தது. வெகு நாட்களுக்குப்பின் சந்தித்த தனது உறவினருடன் நாள்முழுதும் இடைவிடாது பேசிக்கொண்டிருந்த களைப்பாலும், பிரயாண அலுப்பாலும், நிம்மதியாக நித்திரைசெய்ய நினைத்து, படுக்கையை விரித்தாள். அத் தருணத்தில் "கட, கட" என்ற வண்டி ஓடி வரும் ஓசையும், குதிரைகளின் குளம்பு ஒலியும் கேட்டது.

திகிலடைந்த யுவதி எழுந்து ஜன்னலருகே வந்து வெளியே நோக்கினாள். என்ன ஆச்சர்யம்! நான்கு கருத்த பெரிய குதிரைகள் பூட்டிய ரதம் ஒன்று வெளியேவந்து நிற்கும் காட்சியைக் கண்டாள். அந்த ரதத்தின் சாரதி ரதத்தினின்று கீழிறங்கினான். மாடிமீது ஜன்னலருகே நின்று கீழே நோக்கிக்கொண்டிருந்த யுவதியைப் பார்த்தான்.

சாரதியின் முகம் தூய வெண்ணிறமாக இருந்தது. அவனுடைய கண், மூக்கு வாய்—இவையெல்லாம் பயங்கரமாய்த் தோற்றமளித்தது. அவனுடைய இடது கன்னத்தில் ஒரு பெரிய தழும்பு இருந்தது.

இந்தத் தோற்றத்துடனிருந்த சாரதி, திகிலடைந்து திகைத்து நிற்கும் யுவதியை நோக்கி சுட்டுவிரலால் சுட்டிக்காட்டி "இன்னும் ஒருவருக்கு இடமிருக்கிறது" என்று திகிலடைந்த அவள் இன்னும் அதிகமாய் பீதி அடையும் தொனியில் கூறினான். யுவதி வாய்விட்டு அலற யத்தனிக்கையிலேயே ரதமும் குதிரைகளும் சாரதியும், மாயமாய் மறைந்தனர். இந்தப் பயங்கரக்காட்சிக்குப் பிறகு அன்றிரவு யுவதிக்கு நித்திரை எங்கே வரப்போகிறது? ஒருவாராக அன்றிரவைக் கழித்தாள்.

பொழுது புலர்ந்ததும் சற்று தைரியமடைந்தாள். பயங்கரக் காட்சியைப் பற்றி யாரிடமும் கூறவில்லை. பகல் முழுதும் உறவினர்களோடு எஸ்டேட் காட்சிகளை, ஆனந்தமாய் அனுபவித்ததால் முதல்நாளிரவுகண்ட பயங்கர சம்பவத்தை மறந்தேபோனாள். அன்றிரவிலும் அந்தப் படுக்கை அறைக்கு நித்திரைக்குச் சென்றாள். நித்திரை செய்யலாமென்று நினைத்தமாத்திரத்தில் முதல் நாள் இரவுகேட்ட அதே சப்தத்தை மறுபடியும் கேட்டாள். மிகவும் திகிலடைந்து ஜன்னலருகே சென்று வெளியே பார்க்கையில் முன்னிரவு கண்ட மாதிரியே ரதமும் குதிரைகளும் பயங்கர உருவத்தோடு கூடிய சாரதியும் தென்பட்டனர்.

முன்போலவே சாரதி ரதத்திலிருந்து இறங்கி அவளைநோக்கி சுட்டுவிரலைநீட்டி "இன்னும் ஒருவருக்கு இடமிருக்கிறது" என்று கூறும் பயங்கரத்தொனியையும் கேட்டாள். கூக்குரலிட எத்தனிக்கையில் முன்போலவே யாவும் மறைந்தன.

இவ்வாறு தொடர்ந்து இத்தகைய பயங்கரக் காட்சிகளைக் கண்ட யுவதிக்கு அந்தவீட்டிலேயே ஒரு நிமிஷங்கூட தங்க மனம் இடங்கொடுக்கவில்லை.

தான் அவசியமாய் தனது சொந்தநகரமாகிய நியூயார்க்குக்கு உடனே திரும்பிப்போக வேண்டிய அவசர ஜோலியிருப்பதாய் காரணம் கூறி அங்கிருந்து உடனே புறப்பட்டு நியூயார்க்குக்கு வந்தாள். மறுநாள் காலை நியூயார்க்குக்கு வந்தவுடன் வீட்டிற்குப் போகாமல் நேரே அவளுடைய குடும்ப டாக்டர் வீட்டிற்குச் சென்றாள். அந்த டாக்டர் ஒரு பிரம்மாண்டமான கட்டிடத்தின் பதினெட்டாவது மாடியில் இருந்தார். டாக்டரிடம் இவள் தான் இரு இரவுகள் எஸ்டேட்டில் கண்ட பயங்கரக் காட்சிகளைப் பற்றி விவரமாய்க் கூறினாள்.

டாக்டர் இவள் கூறிய விவரங்களை மிக அன்புடன் கேட்டு ஆறுதலான மொழிகளில் அவளைத் தைரியப்படுத்தி வீட்டிற்குப் போகச்சொன்னார். டாக்டரிடம் விடைபெற்று அந்தஅறையைவிட்டு வெளியே வந்து கீழேசெல்ல 'லிப்ட்'டின் மணியை அடித்தாள்.

திடீரென்று லிப்டு அவள் நின்றுகொண்டிருந்த மாடிக்கு வந்தது. 'லிப்டை' மேலும் கீழும் செலுத்தும் ஆள் 'லிப்டி'ன் கதவைத் திறந்தான்.

லிப்டில் ஒரே ஜனநெருக்கமா யிருந்தது. தானும் அந்த ஜன நெருக்கடிக்குள் சேர்ந்துகொள்ளலாமா வென்று நினைக்கும் அத் தருணத்தில் 'இன்னும் ஒருவருக்குகூட இடமிருக்கிற' தென்ற வார்த்தைகள் எஸ்டேட்டில் இரண்டு இரவுகளில் கேட்ட அதே பயங்கரத் தொனியிலேயே அவள் காதில் விழுந்தன. உடனே திகிலடைந்து நிமிர்ந்து லிப்டைச் செலுத்துகிறவனுடைய முகத்தைப் பார்த்தாள்.

எஸ்டேட்டில் இரு இரவுகளில் வந்த பயங்கர சாரதியின் முகத்தில் கண்ட அதே தூய வெண்ணிறம், கண், மூக்கு, வாய் அதே பயங்கரத்தோற்றம், இடது கன்னத்தில் அதே மாதிரி ஒரு பெரிய தழும்பு ஆகிய இவை தென்பட்டன.

ஜனநெருக்கத்தில் லிப்டிற்குள் காலை யெடுத்துவைத்த அவள் இந்த பயங்கரத்தோற்றத்தைக் கண்டதும் வெளியில் குதித்துவிட்டாள். லிப்டின் கதவு படாரென்று அடைக்கப்பட்டது. லிப்டு கீழே சென்றது. அடுத்த நிமிஷத்தில் அந்த பிரம்மாண்ட கட்டிடமே அதிரும்படியாக ஒரு சப்தம் கேட்டது. அது என்னவென்றால்—'அந்த லிப்டின் பிணைப்புகள் அறுந்து பதினெட்டாவது மாடியிலிருந்து இருநூறு அடி கீழே செங்குத்தாக விழுந்த சப்தம் தான் அது.

இந்த லிப்டு அறுந்துவிழுந்த விபத்தினால் அந்த லிப்டிலிருந்த ஜனங்களனைவரும் மாண்டனர். யுவதி மாத்திரம் உயிர் தப்பினாள்.

———

பஞ்ச அங்கம்

திதி, வாரம். நக்ஷத்திரம், யோகம், கரணம், ஆகிய பஞ்ச அங்கங்கள் அடங்கியதே பஞ்சாங்கமாகும். பஞ்சாங்கம் உலகில் எல்லா காரியங்களுக்கும் முக்கியமாக ஆஸ்திகர்களுக்கு மிக அவசியமாகவும் விளங்குகிறது. மக்களுக்கு ஜீவ நாடியாய் விளங்குகிற சூரியபகவானைப் பிரார்த்தித்து வருஷ ஆரம்பத்தில் பஞ்சாங்க பலாபலன்களைக் கேட்க வேண்டும். திதிகளைத் தெரிந்து கொண்டு அதற்கேற்ப நற்காரியங்களைத் தொடங்குவதால் லக்ஷ்மி கடாக்ஷமும், வாரத்தைப் பற்றி அறிந்து அந்த வாரத்தில் தேகத்திற்கு வேண்டிய மருந்து முதலான பொருள்களை உட்கொள்ளுவதால் ஆரோக்கிய வளர்ச்சியும், நக்ஷத்திர ராசிகளை ஒட்டி நடப்பதால் முன் செய்த தீவினைகள் நீங்குவதும் யோகங்களின் பிரகாரம் நடப்பதால் நோயற்ற வாழ்வும் சரியான கரணங்களில் நற்காரியங்களைத் தொடங்குவதால் காரியசித்தியும் ஆக இவ்விதமான நன்மைகள் ஆண்டவன் அருளால் நமக்கு ஏற்படுகிறது.

சீதையைக் காண சிங்களத்திற்கு ஹனுமான் தாண்டியது புராணக் கதை. சிங்களத்திலிருந்து இந்தியாவிற்கு நீந்தியேவந்தது இன்று நடந்தது.

20-ம் நூற்றுண்டில் ஒரு மாருதி

•

கடல் கடந்து குடியேறுவதற்காகவோ வியாபார நிமித்தமாகவோ, ஐரோப்பியர்கள் பிறநாடுகளுக்குச் செல்லாத மிகப் புராதன காலத்தில் நம் தமிழ் நாட்டினர் சிங்களம், புட்பகம், ஜாவகம் ஆகிய பல தீவுகளிலும் குடியேறி தமிழர்கள் நாகரிகத்தையும் பண்பாட்டையும், நிலை நாட்டியுள்ளனர்.

பல வெளிநாடுகளுக்கும் கப்பல் வியாபாரம் நடத்தினர். கிரீஸ், ரோமாபுரி, பாபிலோனியா, எகிப்து, இந்தியா ஆகிய நாடுகளே ஆதிகாலத்தில் நாகரிகமுடையவை என சரித்திரம் கூறுகிறது.

இந்தியாவிலிருந்து வந்த ஆடை ஆபரணங்களை அணிவதே மேற்கூறிய நாட்டினர் நாகரீகத்தின் உயர்தர சின்னமாகக் கருதினர்கள்.

மனிதனுடைய சக்திக்கு மீறிய அரிய பெரிய காரியங்களையும் நம் நாட்டினர் சாதித்துள்ளனர். சமீபத்தில் நம் நாட்டைச் சேர்ந்த ஷெர்ப்பா டென்சிங் இதுவரை எவரும் வெற்றிகாணுத எவரஸ்ட் சிகரத்தை வெற்றிகரமாய் அடைந்து உலகப் பிரசித்தியும் புகழுமடைந்திருக்கிறர்.

ஒருவராலும் இதுவரை செய்யாததும் செய்து முடிக்காததுமான ஒரு காரியத்தை ஒருவர் செய்து முடிப்பாரேயானல்,

அவருடைய புகழ் உலகப் பிரசித்தம் அடைகிறது. மாபெரும் அரியசெயல் என உலக மக்கள் கொண்டாடுகிருர்கள்.

பிரான்சிலுள்ள கலேயுக்கும், இங்கிலாந்தின் டோவருக்கும் இடையேயுள்ள இங்கிலீஷ் கால்வாயின் தூரம் 22 மைல். இந்த 22 மைலேயும் நீந்துவது முடியாதகாரியம் எனக் கருதினுர்கள்.

சில ஆங்கிலேயர்கள் 22 மைல் தூரம் நீந்தி கரை சேர்ந்தனர். இதைப் பெரும் சாதனையாக ஐரோப்பிய நாடுகள் கருதிவந்தன.

இது ஒரு பொருட்டல்ல. இதைக்காட்டிலும் அதிகமான தூரத்தைக் கடலில் நீந்தி கரைசேரும் சக்தி தமிழனுக்கு இருக்கிறதென்று நிரூபித்து காட்டியுள்ளார் முருகுப்பிள்ளை நவரத்தின சாமி என்பவர்.

அதாவது இலங்கையிலுள்ள வல்வெட்டித்துறையிலிருந்து, கடலில் நீந்தி தென்னிந்தியாவிலுள்ள கோடிக்கரைக்கு வந்து சேர்ந்தார். வல்வெட்டித் துறைக்கும், கோடிக்கரைக்கும் உள்ள தூரம் 35 மைல்கள். இடைவிடாது 27 மணி நேரம் களைப்படையாமல் நீந்திக் கரை ஏறினுர். என்னே! இவரது உடல் வலிவும், மன வலிவும்! குளத்திலோ, ஆறு, கால்வாய்களிலோ நீந்துவதுபோன்ற சாதாரண நீச்சலா இது? வாய் கைக்கும், கண் கரிக்கும் நீரையுடைய அலைகளோடு கூடிய கடலிலே; சுராமீன் போன்ற பல பயங்கர மீன்கள் வாழும் கடலிலே; அதுவும் இரவு பகலாய் இடைவிடாது 27 மணி நேரம் 35 மைல் தூரம் நீந்துவதென்ருல் சாமான்யமா?

கடலிலே இவ்வளவு நீண்ட தூரத்தை யாரும் நீந்தியதே இல்லை என்ற பெரும் புகழ் நவரத்தினசாமியைப் பற்றி உலகமெங்கும் பரவியது.

அதிலும் சிறப்பாக, இந்தியாவிலும் இலங்கையிலும் நவரத்தினசாமியின் வீரத்தைக் கொண்டாடப்பட்டு வருகிறது.

பல நாட்டினர் நவரத்தின சாமியைக் காணவும், அவருடன் வார்த்தையாடவும் ஆவலுற்றிருக்கின்றனர்.

சமீபத்தில் இலங்கைக்கு விஜயஞ்செய்யப்போகும் மகாராணி எலிஸபெத் அம்மையாருக்கு நவரத்தினசாமியை அறிமுகம் செய்துவைப்பார்களெனத் தெரிகிறது.

இத்தகைய வீர தீரச் செயலைச் சாதித்த நவரத்தினசாமிக்கு இலங்கை வாசிகள் மிகக்குதூகலமாய்க் கொண்டாட்டங்கள் நடத்தி, உபசாரங்களும், சன்மானங்களும் அளிப்பது இயல்பே யன்றே? இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இவர் நீந்திவந்த சமுத்திர மார்க்கமாகவே இவரைப் பின்பற்றி வேறுசிலர் நீந்தி இந்தியா வந்தடைந்தபோதிலும், முதன் முதலில் செய்து காட்டிய இவரது பெரும் புகழ் குன்றின் மேல் ஏற்றிய ஜோதியைப்போல் என்றும் உலகத்தில் நிலைத்திருக்குமென்பது திண்ணம்.

உத்தம வீரர் நவரத்தினசாமி இன்னும் அநேக அரும் செயல்களைப் புரிந்து பழுதற்ற உடலும், பண்புற்ற மனம்பெற்ற வீரராய் திகழுமாறு எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறோம்.

—Courtesy: Eelakesari, Jafna.

தண்டிக்கவேண்டிய குற்றவாளிகள்

கைதிக் கூண்டிலிருந்து குடித்ததற்காகவும் ஒழுங்கீனமாக நடந்துகொண்டதற்காகவும் ஒரு குற்றவாளியைப் பார்த்து மாஜிஸ்டிரேட்டு "நான் தீர்ப்புச் சொல்வதற்கு முன் நீ ஏதாவது சொல்லவேண்டுமானல் சொல்லிக் கொள்ளலாம்" என்றார்.

கூண்டிலிருந்த குற்றவாளி "யஜமானே, மனிதர்கள் அவரவர்கள் ஒழுக்கமற்ற தீய செய்கைகளினால் துன்பமடைகிறார்கள். நான் என்ன ஒட்டக்கூத்தனைப்போல கர்வம் பிடித்தவனா? அல்லது கெட்டுப்போனவனா? காளமேகத்தைப்போல ஆபாசக் கவிகளை வெளியிட்டிருக்கிறேனா? வால்மீகியைப் போன்ற கொள்ளைக்காரனா? அதிவீர ராமபாண்டியனைப்போல மிருக உணர்ச்சியைத் தூண்டும் காமாந்தகாரத்தை கவிதையாக வெளியிட்டேனா?" என்றான். மாஜிஸ்டிரேட் "சரி, ஏழு நாள் சிறைவாசம்" என்று தீர்ப்புக் கூறிவிட்டு, (போலீஸ் அதிகாரியிடம்) "கைதி கூறியுள்ள பெயர்களைக் குறித்துக்கொள். அவர்களும் ஏதாவது குற்றம் செய்திருக்கலாம். அவர்கள் எங்கிருந்தாலும் கோர்ட்டில் ஆஜராகும்படி வாரண்டு பிறப்பி" என்று உத்திரவிட்டார்.

சனிக்கிழமைதோறும் வீட்டுக்கு வரும் பெண்

அன்று சனிக்கிழமை. இரவு பன்னிரண்டு மணி வேளை. அமெரிக்காவில் இலிஞய்ஸ் என்ற பெரிய நகரத்தின் பிரதான வீதி வழியாகக் கனவான் ஒருவர் காரை ஓட்டிக்கொண்டு வந்தார். நான்கு பெரிய வீதிகள் சந்திக்கும் நாற்சந்தியான இடத்திற்குக் கார் வரும்பொழுது பருவமடைந்த கன்னி ஒருத்தி காரை நிறுத்தச் சொல்லி நாற்சந்தியான அவ்விடத்திலிருந்து ஐந்து மைல் தூரத்திற்கு அப்பாலிருக்கும் ஒரு வீதியின் பெயரைச் சொல்லி, அவ்வீதியிலுள்ள ஒரு வீட்டின் நம்பரையும் குறிப்பிட்டுத் தன்னை அவ்வீட்டில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டாள்.

பரோபகார சித்தத்தோடு கனவான் அவள் கூறியவாறே அவளை வீட்டில் சேர்ப்பதாகக் கூறி, அவளைக் காரின் பின் ஸீட்டில் அமரச் செய்து, காரை ஓட்டிச் சென்றார்.

கன்னி தெரிவித்த வீதியில் அந்த வீட்டிற்குச் சமீபமாகக் கார் வரும்பொழுது பின் ஸீட்டில் கன்னியைத் திரும்பிப் பார்த்தார் கனவான். கன்னியைக் காணவில்லை! கனவான் ஆச்சரியமுற்றார். கன்னி தெரிவித்த வீட்டிற்குச் சென்று இம் மர்மத்தைத்தான் அறிவோமே என எண்ணி, காரை அவ்வீட்டிற்குச் செலுத்தி, சாத்தப்பட்

டிருந்த அவ்வீட்டின் கதவைத் தட்டினர். பல தடவைகள் பலமாகத் தட்டியபின், வயது முதிர்ந்த ஒருவர் வந்து கதவைத் திறந்து, விவரம் என்னவென்று கேட்டார். கனவான் நடந்த விருத்தாந்தங்களைத் தெரிவித்தார்.

அப்பொழுது பெரியவர் "ஐயா, அந்தப் பெண் எனது மகள்தான். அவள் நின்றுகொண்டிருந்ததாக நீங்கள் சொன்ன அதே நாற்சந்தியில்தான் ஒரு கார் விபத்தில் இரண்டு வருஷங்களுக்கு முன் அவள் மாண்டுபோனள். அவள் மாண்டது சனிக்கிழமை இரவு பன்னிரண்டு மணிக்கு.

"ஒவ்வொரு சனிக்கிழமையும் நடுநிசியில் காரில் வருபவர்களை நிறுத்தி இவ்விதச் செயல்களைத்தான் புரிகிறது அவளது ஆவி" எனத் தெரிவித்தார்.

இறந்துபோனவர்கள் ஆவிரூபத்தில் வருவதை, அதுவரை சந்தேகித்த கனவான், இச்சம்பவத்திலிருந்து, ஆவிரூபம் தோன்றுவது உண்மைதான் என்று அறிந்துகொண்டார்.

சொல்லே சக்தி!

●

வாய்ச்சொல் என்பதை அநேகர் அலட்சியமாகக் கருதலாம். கிருஸ்துவ வேதமான 'பைபிளில்' "ஆதியில் தேவனின் வார்த்தை இருந்தது; அவ்வார்த்தையே உலகம் யாவையும் படைத்தது" எனக் கூறுவதைக் காணலாம். புராதன ஹிந்து வேதங்களும் முதலில் வார்த்தைகளாகவேதானிருந்தன.

அணிவகுத்து நிற்கும் சைநியமும் சேனாதிபதியின் வார்த்தையைத்தான் எதிர்பார்த்து நின்றுகொண்டிருக்கிறது. ஆகவே வார்த்தை மிகவும் முக்கியத்துவமுடையது. சமாதானத்தை நிலை நாட்டுவதும் யுத்தத்தை வருவிப்பதும், வார்த்தையாகிற சொற்களே. சொற்களால் உலகில் சர்வமும் நிகழ்கின்றன. இவ்வித சர்வசக்தியுள்ள சொற்கள் 'இன்சொல்' 'வன்சொல்' என இருவகைப்படும். இவற்றில் அறநெறியோடு அமைந்தது இன்சொல். அறத்தின் வழியை அறிந்தவர்களது வாய்ச்சொற்கள், இன்சொற்களேயென தமிழ்மறையாகிய திருக்குறள் கூறுகிறது.

இன்சொல் என்பது மனிதன் அடையவேண்டிய ஒரு உயர்ந்த பொருள். இப்பொருள் சிரமப்பட்டுச் சம்பாதிக்கவேண்டிய பொருள் ஆயினும் வியாபாரஸ்தலங்களில் விலைகொடுத்து வாங்க வேண்டிய பொருள் அல்ல. உத்தமர்களுடைய உள்ளத்தில் உதித்து, நாவிலிருந்து வெளியாகும் பொருள். "சத்தியமும் நோன்பும் தவமும் இளஞ்சொல்லும் உத்தமர்க்குள்ள குணம்" என்பதுபோல் இது உத்தமர்களுக்கு உடமையாகயிருக்கவேண்டிய ஒரு பொருள்.

"இன்சொல்லாலன்றி இருநீர் வியனுலகம்
வன்சொல்லால் என்றும் மகிழாவாம்"

என்பதற்கிணங்கவும். 'தேனின் கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல்' என்பதற்கிணங்கவும் யாவரையும் வசீகரிப்பதும் மகிழ்விப்பதும் இன்சொல்லே.

இது அகமகிழ்ச்சியிலிருந்து வெளியாவதால் முகமலர்ச்சியும் ஏற்படுத்துகிறது. ஆதலால் இன்சொல் பேசுபவர் முகம் எப்பொழுதும் வசீகரமாகவே தோன்றும்.

இனி, வன்சொல் என்பதைக் கவனிப்போம்.

வன்மையான—அதாவது கொடிய சொல் என்பது பொருள்.

"வில்லம்பு சொல்லம்பு—மேதினியில் அம்பிரண்டாம்
வில்லம்பில் சொல்லம்பே வெய்தாகும்"

என்றபடி வன்சொல்லானது அம்புபோல் பாய்ந்து பிறர் மனத்தை புண்படுத்தும் சொல்.

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும்—ஆறுதே
நாவினாற் சுட்டவடு"

அதாவது தீயினால் சுட்டபுண் ஆறிவிடும். நாவிலிருந்து வரும் வன்சொல்லாகிய தீயினால் சுட்ட புண் ஆறாமல் தழும்பேறியிருக்கும். வன்சொல் பேசுபவர்களை உலக மக்கள் விரும்ப மாட்டார்கள். தவிர, அவர்கள் மனம் அமைதியாக இருக்காது. முகமும் விகாரத் தோற்றமளிக்கும். பேசுவதை எல்லாம் நிதானமிழந்த நிலையில், மிகவும் பட படப்பாகவும் உடம்பையே பாதிக்கும் ஆக்ரோஷத்துடனும் பேசுவார்கள். பொதுவாக வன்சொல் என்பது மனிதத்தன்மைக்கே பொருந்தாத ஒரு குணமாகும். யாவரும் விரும்புவதும் அடைந்திருக்க வேண்டியதுமாகிய உத்தம குணம் இன்சொற்களே.

இன்சொற்களைத் திறமையோடு பேசும் சக்தி மனிதருக்கு இருக்கவேண்டும். இதுதான் 'சொல்வன்மை' எனப்படும். எவ்வளவோ கல்வியெல்லாம் கற்று பட்டங்களை யெல்லாம் பெற்றிருந்தபோதிலும் சபைகளிலே பேசும் வன்மையாகிய சொல் வன்மை இல்லாவிட்டால் அவர்கள் கற்ற கல்வியால் ஒருபயனுமில்லை. கல்வியுங்கற்று சொல்வன்மையும் பெற்றிருப்பதே சிறப்புத் தன்மையாகும்.................. "சொல்வன்மை யின் றேல் என்னும் ? அஃதுண்டேல் பொன்மலர்நாற்ற முடைத்து"

மிகுந்த கல்வியறிவு அடைந்து சொல்வன்மையும் பெற்றிருப்பது பொன்னால் செய்யப்பட்ட மலர் இயற்கையிலே மணம் பெற்றது போலாகும். தவிர உண்மையிலே நடந்த ஒரு ஆச்சர்யமான சம்பவத்தை பொதுமக்களிடம் தெரிவிக்கவிரும்பும் ஒருவனுக்குச்

சொல்வன்மை யில்லாவிட்டால் பொதுமக்களுக்கு அவன் சொல்வது பொய்யாகத் தோன்றும். இதைத்தான் "மெய்யுடைய ஒருவன் சொலமாட்டாமையால் பொய்போலும்மே—பொய்போலும்மே" என கவிஞர் கூறுகிறார். மேலும் கற்பனையாக இருந்தாலும் தன் சாதுர்யமான சொல்வன்மையினால் பொதுமக்கள் அது உண்மையில் நடந்த சம்பவமெனக் கருதச்செய்வோரு முண்டு. இதைத்தான் "பொய்யுடைய ஒருவன் சொல்வன்மையினால் மெய்போலும்மே மெய்போலும்மே" என்றும் கவிஞர் கூறுகிறார். இதுவும் தவிர சொல்வன்மையுடையவர்கள் எக்காரியத்திலும் வெற்றியடைகிறார்கள். அவர்களுக்குச் சோர்வு என்பதே ஏற்படுவதில்லை. எதற்கும் அவர்கள் அஞ்சுவதுமில்லை.

வாக்குவாதத்தில் இவர்களை ஜயிப்பவர்கள் கிடையாது. இக் கருத்தைத்தான் "சொலல் வல்லன், சோர்வு இலன், அஞ்சான் அவனை இகல் வெல்லல் யார்க்கும் அரிது" என்று வள்ளுவரும் கூறுகிறார்.

சொல்வன்மையானது தேசீயவாதிகளுக்கு இருக்கவேண்டிய ஒரு சிறந்த பொக்கிஷம். குயவன் பதப்படுத்திய களிமண்ணைத் தான் விரும்பிய பாத்திரமாக மாற்றுவதுபோல் சொல்வன்மையுடைய தேசியவாதிகளாகிய குயவர்களும் தங்கள் சொல்வன்மையினால் பொது மக்களைத் தங்கள் கருத்துக்கிணங்கவைக்கின்றனர். இத்தகைய சிறப்புவாய்ந்த சொல்வன்மையை மாணவ மாணவிகள் பெற வேண்டுமென்பதற்காகத்தான் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் சங்கங்களை அமைத்திருக்கிறார்கள். மாணவ மாணவிகள் இச் சங்கங்களில் கலந்து இன் சொல்லிலும் சொல்வன்மையிலும் தேர்ச்சிபெற வேண்டும். இவ்வாறு தேர்ச்சிபெற்றால் மாணவ—மாணவிகளின் எதிர்கால வாழ்க்கைக்கு இவர்களின் இன்சொல்லும் சொல்வன்மையும் மிகுந்த பலனளிக்கும்.

மாணவ மாணவிகள் தங்கள் ஓய்வு நேரங்களிலெல்லாம் அறிவு புகட்டும் நூற்களைப் படித்து அரிய விஷயங்களை மனத்தில் பதியவைத்துக் கொள்ளுதல் வேண்டும். நூலறிவும் நுண்ணறிவும் மனிதனுக்குச் சூட்டும் கிரீடத்தைபோன்றது. இன்சொல்லும் சொல்வன்மையும் அக் கிரீடத்தை அழகுபெறச் செய்யும் நவமணிகளை ஒக்கும்.

தாம்பூலம், மஞ்சள் முதலான வற்றை அநாகரிகத்தின் அறிகுறிகள் என்று கருதுபவர்கள் அறியவேண்டிய அரிய உண்மைகள்.

உண்மை 'நாகரிகம்' புதிதல்ல

இன்று நமது நாட்டில் எந்த விஷயத்திற்கும் மேல்நாட்டை உதாரணங் காட்டிப் பேசுவதுதான் மிகுந்த நாகரிகமாகவும் அறிவுடைமையாகவும் சிலர் கருதுகின்றனர். சாதாரணமான அழகு சாதனங்களைக்கூட முதன் முதலில் மேல்நாட்டாரே கண்டுபிடித்தன ரென்றும் உபயோகித்தனரென்றும் இன்றும் கூறுவது நமது நாட்டில் சகஜமாயிருக்கிறது.

இவ்விதம் கூறுவது அர்த்தமற்றது என்பது நமது நாட்டின் பூர்வீக ஆசார அனுஷ்டானங்களை ஆராய்ந்தால் நமக்கு நன்கு புலனாகும்.

உதாரணமாக ஒரு பத்திரிகையில் உலகிலேயே முதன்முதலில் "கண்ணுக்கு மைதீட்டிய காரிகை யார்?" என்ற வினாவிற்கு ஒரு எகிப்திய மாது எனப் பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம்நாட்டுப் பெண்கள் கண்ணுக்கு மை தீட்டிக்கொள்வதை சரித்திர வாயிலாக அறிகிறோம். அந்த மைக்கு 'அஞ்சனம்' என்று பெயருண்டு. கண்ணுக்கு நோய் வராமல் காப்பதற்கும் குளிர்ச்சியளிப்பதற்கும் மூலிகைகளைச் சேர்த்து இந்த மையைத் தயாரித்திருந்தார்கள். மிகப் புராதன கால குழந்தைகள் பாட்டிலும் "காக்கா, கண்ணுக்கு மை கொண்டுவா" என்று காணப்படுகிறது. இது தவிர சங்ககால இலக்கியங்களிலும் "மையிடுங் கண்" என்று பெண்களைப் பற்றி வர்ணிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறே, உலகத்தில் முதன் முதலில், முகத்தில் 'பவுடர்' பூசியது யார்? என அபூர்வ வினவைக் கேட்டு அதற்கு ஒரு பிரெஞ்சு மாதுதான் முதன் முதலில் பவுடர் பூசிக்கொண்டாள் என்ற பதில் கூறுவார்கள். இதுபோன்றே உலகத்தில் முதன் முதலில் உதடுகளிலும் கை நகங்களிலும் சாயம் பூசியது ஐரோப்பிய ஸ்திரீகள்தான் என்று கூசாமற் கூறுவார்கள்.

பெண்கள் முகத்தில் பவுடர் பூசிக்கொள்வது நமது நாட்டின் பண்டைய பண்பாடாகவே இருந்ததென்பதை சிலர் அறியாமலே பவுடரைப் பூசிக்கொள்ளும் வழக்கம் மேல்நாடுகளிலிருந்துதான் முதன் முதலில் உதயமானதாகக் கருதுகின்றனர். இதே போன்று நம் நாட்டுப் பெண்கள் ஆதிகாலத்திலேயே முகவசீகரத்திற்காக பவுடரை பூசிக் கொண்டிருந்தார்களென்பதற்கு காவியங்களில் காணும் "புனுகந்தப் பொடி" என்ற வார்த்தைகளே அத்தாட்சியாகும். முன் காலத்தில் உபயோகித்துவந்த இந்தப்பொடி செயற்கையால் ஆனதல்ல, தாழம்பூபோன்ற பல பூக்களிலிருந்து எடுத்த மகரந்தப் பொடிகள்தான் இந்தப் 'பவுடர்' இந்தப் பொடிகள் இயற்கையாகவே நறுமணத்துடனிருக்கிறது. இயந்திரத்தில் அரைத்த முகப்பவுடரைவிட மிகவும் மிருதுவாக இருக்கிறது. இயந்திரத்தில் அரைத்த முகப்பவுடரில் சேர்த்திருக்கும் கூட்டுப் பொருள்களின் சிலவற்றிற்கு முகத்திலுள்ள இரத்தத்தையே சுண்டச் செய்யும் தன்மை உள்ளது. ஆனால் இந்த மகரந்தப் பொடி எவ்விதக்கேடும் விளைவிக்காது. இது பொன்னிறமுடையது. நம் நாட்டு மங்கையர்கள் முகத்தில் மஞ்சளைப் பூசியபிறகு இந்த மகரந்தப் பொடியைப் பூசிக்கொள்வது ஆதிகாலத்தில் வழக்கமாயிருந்தது. ஆனால் இன்று இந்த மகரந்தப்பொடியை விசேஷமாகப் பூசிக்கொள்வதில்லை. மஞ்சள் பூசும் வழக்கம் ஐதிகமான குடும்பங்களில் இன்றும் நிலைத்திருக்கிறது. மேல்நாட்டு நாகரிகத்தையே பெருமை எனக் கருதும் நமதுநாட்டு நவநாகரிக நங்கையர் மஞ்சள் பூசுவதை அசாரமாகக் கருதுகின்றனர். இவர்கள் மஞ்சளைக் கையால்கூடத் தொடுவதில்லை. மஞ்சள் பூசும் வழக்கம் நமதுநாட்டு பண்டையப் பண்பாடுஇது அழகுக்காகமட்டுமல்லாமல் மஞ்சளால் ஏற்படும் பல நன்மைகளைக் கருதியேதான். மஞ்சள் முகத்திற்கு வசீகரத்தை யளிப்பதோடுமட்டுமின்றி இரத்த

கிருமிகளை அழித்து இரத்த சுத்தியுஞ் செய்வதோடு முகத்தில் ரோமங்கள் வளர்ந்து அழகு பாதிக்கப்படாமல் காப்பாற்றுகிறது.

இத்தகைய நன்மை பயக்கும் உயர்ந்த பழக்கத்தை நவநாகரிக நங்கைகள் அடியோடு கைவிட்டதனல் அவர்களுடைய முகத்தில் புருவங்களிலுள்ள ரோமங்கள் வளர்ந்து புருவங்கள் ஒன்றுசேர்ந்து தோற்றமளிக்கிறது.

பெண்களின் முகங்களுக்கு மிகுந்த அழகு அளிப்பது திலகம். பெண்களின் நெற்றியை 'சிறுபிறை நுதலுக்'கு ஒப்பிட்டு (மூன்ரும் பிறைச் சந்திரன்) தாயுமானர் பின்னும் அந்நெற்றியினிடை விளங்கும் திலகத்திற்கே மிகுந்த வசீகரத்தன்மை யிருக்கிறதென "பொட்டிலே.........புத்திதனை நுழையவிட்டு நெட்டிலே அலையாமல்" என்ற அடிகளால் விளக்குகிருர்.

"பொட்டென்று பொட்டு இட்டாள் புருவத்திடைநடுவே" எனக் கவிகள் கூறுவது உத்தமப் பெண்மணிகளுக்கு சிறந்த லக்ஷணமாக விளங்கும், திலகம் பிரகாசிக்கவேண்டிய இடமாகிய புருவ மத்தியில் ரோமங்கள் வியாபித்துவிடுகிறது. அதனல் புருவமத்தியில் எவ்வாறு திலகம் இடமுடியும்? இதுவும்தவிர இரு செவிப்புறங்களிலும் 'கேரா' போன்று ரோமங்கள் வளர்ந்திருக்கின்றன. "அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா" என்ற பழமொழி, பெண் ஆணுக மாற முடியாதென்ற கருத்தை விளக்குகிறது.

மஞ்சள் பூசிக்கொள்வது அநாகரிகமெனக் கருதும் பெண்மணிகளில் பலர் 'சித்தப்பாவாக' விளங்குவதை சகஜமாய்க்காணலாம். மஞ்சளின் சக்தியை இப்போதுதான் மேல்நாட்டார் உணர்ந்து வருகின்றனர். மஞ்சளைத் திராவகமாக்கி (ரத்தசுத்தி செய்வதற்காக) இஞ்செக்ஷன் மருந்துகள் அமெரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன.

மேல்நாட்டினர் உதடுகளுக்குச் சாயம் பூசுவதைப் புதிதாகக் கண்டுபிடித்திருப்பதாக நம்நாட்டினர் கூறுகின்றனர். ஆனல் முன்காலத்தில் நமது நாட்டு ஆண் பெண் அனைவரும் தாம்பூலம் தரித்து வந்தனர்.

தாம்பூலம் தரித்துக்கொள்வதால் வாய் உதடுகள் எல்லாம் சிவப்புநிறமாக மாறி முகம் வசீகரமாகத் தோன்றும். அதுமட்டு மின்றி வெற்றிலைச் சாறையும் சுண்ணும்பு நீரையும் உட்கொள் ளுவதால் சரீரத்திற்கு ஆரோக்கிய விருத்தி ஏற்படுகிறது. உட் கொண்ட ஆகாரத்தை வெற்றிலைச் சாறு ஜீரணிக்கச் செய்கிறது. வாயின் துர்க்கந்தத்தையும் போக்குகிறது.

ஒவ்வொரு உணவு வேளைக்குப்பின்னரும் தாம்பூலம் தரிக் கும் பழக்கம் முற்காலத்தில் நம் நாட்டில் வழக்கமாயிருந்து வந் தது. இக்காலத்தில் நமது நாட்டு நவ நாகரிக நங்கைகளோ, தாம் பூலம் தரிப்பது அநாகரிகமாகக் கருதி, உதடுகளுக்கு மட்டும் சிவப் புச் சாயம் பூசிக்கொள்ளுகின்றனர்.

இந்தச் சிவப்பு சாயத்தை உற்பத்தி செய்வோர் இந்த சாயம் ஆகாராதிகளில் கலந்து, தீங்கு விளைவிக்காததற்காக இன்னும் முறைகளை ஆராய்ச்சி செய்துவருகின்றனர்.

இதுபோன்றே நகத்துக்கு பூசும் சாயத்தாலும் தீங்கு நேரிடு கிறது. நகத்திற்குச் சாயம் பூசி அழகுபடுத்த மருதாணியை முன் காலத்தில் பூசி வந்தனர்.

மஞ்சள் பூசுவது, புனுகந்தப் பொடி பூசுவது, வெற்றிலை போடுவது, மருதாணிப் பூசிக்கொள்வது போன்ற பழக்கங்களை நம் நாட்டினர் அழகு சாதனங்களுக்கு மட்டுமின்றி ஆரோக்கியத் திற்காகவும், சுகாதாரப் பாதுகாப்பிற்காகவும் அனுஷ்டித்து வந்தனர்.

புதிய புதிய அழகு சாதனங்களைப் புத்தி நுட்பமாய் நவநாக ரிகமுறைப்படி உற்பத்தி செய்து வந்தபோதிலும் நம் புராதன இயற்கையான அழகுச் சாதனங்கள் தான் சுகாதாரத்தைப் பாதிக் காமல் அபிவிருத்தி செய்வதோடு. அழகையும் அதிகரிக்கச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

இதனால் நவநாகரிகம் எனக் கருதும் முறைகளைச் கையாள்வ தனால் ஏற்படும் தீங்குகளை நன்குணர்ந்து நமது புனித பண்டைய பண்பாடுகளை ஆதாரமாகக்கொண்ட பழக்கங்களையும் வழக்கங் களையும் பின்பற்றுவதே பாரத மக்களின் கடமையாக இருக்கவேண்டும்.

———

அன்று ஹிட்லரால் விளைந்த தீங்குகளை இன்றும் ஜெர்மனி அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

விஞ்ஞானம் வளர்ந்த நாட்டிலே அஞ்ஞானத் தாண்டவம்

ஒருகாலத்தில் விஞ்ஞானத் துறைகளின் முன்னேற்றத்தில் ஜெர்மனி உலகிலேயே தலை சிறந்து விளங்கிக்கொண்டிருந்த தென்பதை ஜெர்மனியின் விரோதியுங்கூட ஒப்புக்கொள்ளும் உண்மையாகும்.

ஹிட்லர் தன் ஆட்சியின்போது ஜெர்மனி அதுவரை அடைந்திருந்த விஞ்ஞானத் துறையில் சிறந்த அபிவிருத்தியை தன்னுடைய கட்சிக்குச் சாதகமாகவும் தன் எதிரிகளுக்குப் பாதகமாகவும் உபயோகித்தான்.

இதனால் விஞ்ஞானத் துறையில் உற்பத்திப் பெருக்கம்தான் அதிகமாயிற்று. உற்பத்திப் பெருக்கத்தில் ஒத்துழைக்காத விஞ்ஞானிகள் பலர் உயிரிழந்தனர். மற்றும் பலர் நாட்டை விட்டே ஓடும்படியாயிற்று.

ஹிட்லரின் இந்தக் கொள்கையினால், இரண்டாவது மகா யுத்தத்திற்குப்பின் தொழில்துறை முன்னேற்றமடைந்ததே யன்றி விஞ்ஞானத்துறை அபிவிருத்தியடையாமல், க்ஷீணமடையலாயிற்று.

ஹிட்லரின் கொடுமையினால் வெளிநாடுகளுக்குச் சென்ற விஞ்ஞானிகள் இன்னும் ஜெர்மனிக்கு திரும்பவில்லை.

இவ்விதம் வெளிநாடுகளுக்குச் சென்ற விஞ்ஞானிகள் ஜெர்மனிக்கு திரும்பாததால் ஜெர்மனியிலுள்ள விஞ்ஞானிகள் அவர்கள் பெற்றிருந்த விஞ்ஞான அறிவைக்கொண்டு உற்பத்திப் பெருக்கம் தான் செய்கிறார்களே தவிர, விஞ்ஞானம் தீவிரமான அபிவிருத்தியடையமுடியவில்லை உற்பத்திப் பெருக்கத்திற்காக ஜெர்மனி

யில் பெரிய தொழிற்சாலைகள் ஐந்து கோடி ரூபாய் திரட்டி தொழில் அபிவிருத்தி வழிகளை ஆராய்ச்சி செய்வதற்காக செல விட்டு வருகின்றனர். ஆனால், விஞ்ஞானத்தை அபிவிருத்தி செய்வதற்கென அமைத்திருக்கும் விஞ்ஞானிகளின் சுத்த விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகத்திற்கு விஞ்ஞான அபிவிருத்திக்காகச் செலவிட இரண்டேகால் ரூபாய் தானிருக்கிறது! அறிவுத்திறமையே இப்போது ஜெர்மனியில் மிகவும் குறைந்துவிட்டது.

ஜெர்மானிய பொதுமக்களும் கூட வியாபாரப் பொருள்களைத்தான் மென்மேலும் உற்பத்தி செய்யவேண்டுமென்று விரும்புகிறார்களே தவிர, விஞ்ஞானத்தை அபிவிருத்திசெய்ய இவர்கள் விரும்பவில்லை. விஞ்ஞான அபிவிருத்திக்கு சிறந்த ஆராய்ச்சியாளர்களும் அங்கில்லை. இதல்லாமல் மூட நம்பிக்கைதான் அதிகரித்துவருகிறது.

எல்லாத் துறைகளிலும் 'போலி நிபுணர்கள்' தோன்றி அந்தந்த துறைகளில் ஆதிக்கம் செலுத்துகின்றனர்.

பகுத்தறிவிற்கும் மிகுந்த ஞானத்திற்கும் பேர் பெற்றிருந்த ஜெர்மனியிலே இப்போது மூடநம்பிக்கைதான் தலை விரித்தாடுகிறது!

ஜெர்மானியர்களை மூடநம்பிக்கை என்ற குழியிலிருந்து காப்பாற்றுவதற்குக் கழகங்கள் கூட பல தோன்றியுள்ளன.

ஜெர்மனியில் தற்சமயம் நிலவிவரும் மூடநம்பிக்கைக்கு ஒரு விந்தையான உதாரணமிருக்கிறது. 'பூமியிலிருந்து ஒரு ஜ்வாலை ஏற்படுகிறதாம். இந்த ஜ்வாலையால் சரீரத்தில் தீராத ரணங்கள் ஏற்படுகிறதாம். பெட்டியில் இணைக்கப்பட்ட விசைக் கம்பியை இரண்டு மணி நேரம் பிடித்துக்கொண்டிருந்தால் ஜ்வாலையின் தாக்குதலை அழித்து ரணங்களைக் குணமாக்குமாம். இவ்வாறெல்லாம் இந்த போலி நிபுணர்கள் கூறுகின்றனர்.

இந்தப் பெட்டியை உற்பத்தி செய்து விற்பவருக்கு சென்ற வருஷத்தில் 14 லட்ச ரூபாய் லாபம் கிடைத்ததாம்.

இந்தப் பெட்டியை உற்பத்தி செய்வதற்கு இரண்டு ரூபாய் தான்செலவாகும். ஆனால்அதை விற்கும் விலை 100 ரூபாய். ஜ்வாலையால் ஏற்படும் நோய்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு இந்தப் பெட்டியல்லாமல் வேறு கருவிகளும் உற்பத்தி செய்கின்றனர். உலோகங்களாலான நூல் கலந்த சட்டைகளும், கால் சட்டைகளும் பாதரக்ஷைகளுக்கு விசேஷமான அடிப்பாகங்களும் இந்த கருவிகளைச் சேர்ந்தவையாகும். இவற்றைத் தயாரிப்பவர்களும் கொள்ளை லாபம் சம்பாதிக்கின்றனர்.

ஆனால் உண்மையான விஞ்ஞான அறிஞர்கள், பூமியிலிருந்து ஜ்வாலை ஏற்படுவதென்றுகூறுவதே சுத்தப்பொய் என்றே கூறுகின்றனர்

இந்த ஜ்வாலையிலிருந்து நோய்கள் பீடிக்கின்றனவென்றும் அந்த நோய்களைத் தடுப்பதற்குத் தான் கருவிகள் கண்டுபிடித்திருப்பதாகக் கூறுவதெல்லாம் சுயநலத்தோடு பொருள் சம்பாதிப்பதற்காகவேயன்றி வேறொன்றுமில்லையெனவும் திட்டமாய் தெரிவித்துள்ளனர்.

போலி விஞ்ஞானிகளின் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் பூமியில் ஜ்வாலை கண்டிப்பாக ஏற்படுகிறதென்றும், பூமியிலுள்ள நீர் நிலையைக் கண்டுபிடிப்பதற்கு உபயோகிக்கும் கழி பூமியில் ஜ்வாலையிருப்பதனால் தான் வளைகிறதென்றும், ஆகையினால் நிச்சயமாய் ஜ்வாலையிருக்கிறதென்றும் கூறுகிறார்கள். இதல்லாமல் பூமியின் கீழ் ஆறுகள் உள்ளனவென்றும் கூறுகின்றனர்.

அறிவுத்துறையிலும், விஞ்ஞானத் துறையிலும் சிருஞ்சிறப்பும் பெற்றிருந்த ஜெர்மனியில் போலி விஞ்ஞானிகள் காளான்கள்போல் முளைத்துவிட்டதால் நாட்டிலெங்கும் மூடநம்பிக்கைகள் பரவி ஜெர்மானியர்கள் பெரும் அவதிக்காளாகி வருகின்றனர்.



தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை 600 008

கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு.

குறை குடம் கூத்தாடும்

●

"நிறை குடம் ததும்பாது" என்பது பழமொழி" பலவிஷயங்களைக் கற்றறிந்த அறிஞர்கள் மிகவும் அடக்கமாக நடந்துகொள்வார்கள்., தன்னையொத்த அறிஞர்கள் மத்தியில் தான் கற்றறிந்த விஷயங்களை மிகவும் களிப்போடு உரைப்பார்கள். மற்றவர்களிடம் தங்களுக்கு ஒன்றும் தெரியாதது போல் பாவித்து அவர்களின் கூட்டுறவை நாடவும் மாட்டார்கள்.

ஆனல் குறைகுடம் கூத்தாடும் என்பதுபோல அரைகுறையாகப் பலவிஷயங்களை அறிந்தவர்கள் ஐயந்திரிபற முற்றும் கற்றுணர்ந்த அறிஞர்களிடம் சென்று விஷயங்களின் சம்பந்தத் தொடர்பில்லாமலே மனத்தில் நினைத்ததை வாய்க்கு வந்தபடி பிதற்றுவார்கள். "கொல்லர் தெருவில் ஊசி விற்க முடியுமா?" "கைக்கோளர் தெருவில் சேலைவிற்க முடியுமா?" என்ற கருத்துகளைப் போல் நாம் யாரிடத்தில் பேசுகிறோம், நாம் பேசும் விவரங்கள் அறிவுத்திறனோடு சம்பந்தங்களை விளக்குகின்றனவா? நாம் பேசும் விஷயத்தில் மிகுந்த ஆராய்ச்சியும் அனுபவமுடைய இப்பெரியார் நாம் கூறுவதை ஏற்றுக்கொள்வாரா?" என்று சிறிது கூட சிந்திப்பதில்லை. ஆனல் அறிஞர்களோ இவர்கள் சொல்வது சரியென்றோ தப்பிதமென்றோ கூறாமலும் அவ்வார்த்தைகளுக்குச் செவிசாய்க்காமலும், எப்படிவேண்டுமாளுலும் சொல்லிக் கொண்டே போகட்டும், என்று மௌனமாகவே இருப்பார்கள். ஆனல் அந்த அரைகுறைப் பேர்வழிகள் தங்களுக்கு மிகுந்த அறிவு வளர்ச்சி இருக்கிறதாக அறிஞரிடம் காட்டிவிட்டோம் என மகிழ்ச்சி யடைகிறார்கள்.

தம்மினும் கற்றோருக்குத் தாம் சமம் என எண்ணவே கூடாது, என்பதற்காக "தம்மினும் கற்றோரை நோக்கிக் கருத்தழிக - கற்றனவெலாம்

எற்றே நாம் இவர்க்கு என்று'' என ஔவையார் கூறியிருக்கும் வாக்கியங்களை இவர்கள் சற்றேனும் சிந்திப்பதில்லை.

பொதுவாகக் கூறப்போனால் சிறந்த அறிவாளிகளின் கூட்டங்களில் தாங்களும் சிறந்த அறிவாளிகள் என்று காண்பித்துக் கொள்வது தான் இவர்களின் பிரதானநோக்கமாகும்.

ஒரு விருந்தில் அறிஞர் ஒருவருக்குப் பக்கத்தில் கல்லூரி மாணவி ஒருத்தி சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். அந்த மாணவி அறிஞரை நோக்கி "நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்" என்று கேட்டாள். அதற்கு அவர் "வானசாஸ்திரம் பயின்று வருகிறேன்'' என்றார். உடனே அவள் "நீங்கள் இப்போது தானா வானசாஸ்திரம் படிக்கிறீர்கள், நான் சென்ற வருடமே வானசாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்று விட்டேனே!'' என்று கூறினாள். அறிஞர் இதைக் கேட்டு குறுநகை செய்தார். மாணவி வானசாஸ்திரத்தை கற்றுக்கொடுக்கும் பாவனையில் தனக்குத் தெரிந்ததை யெல்லாம், அவருக்கு விஸ்தரித்தாள்.

மேற்கூறியுள்ள விவரங்களுக்கு இவள் ஒரு உதாரணமாக விளங்குகிறாள். இம்மாதிரி சகல துறைகளிலும் தங்களுக்குத் தான் சிறந்த அறிவு உண்டென்ற பாவனையுடையவர்களை எங்கும் காணலாம்.

இவ்வாறு கூத்தாடும் குறை குடமாகிய ஒருவர் இருந்தாலே அந்தந்தத் துறையிலுள்ள மற்றவர்களுக்கு மிகுந்த உபத்திரவமாயிருக்கும். அரைகுறையாகத் தெரிந்தவர்களின் எண்ணங்களையும் அபிப்பிராயங்களையும் அரிக்கும் பேன்களுக்கு ஒப்பிட்டிருக்கிறார் ஒரு மனோதத்துவ நிபுணர். அரிக்கும் பேன்களை வெளிக்களைவதுபோல் அரை குறையாகத் தெரிந்தவர்களின் மனத்தில் அரித்துக் கொண்டிருக்கும் விஷயங்களை வெளியிடுவதுதான் அவர்களின் செயலாக இருக்கிறது.

இதுவும் தவிர மேற்கூறியுள்ள குற்றங்கள், ஒன்றும் தெரியாத குறை குடங்களிடம் தான் மலிந்திருக்கிறதென்பதில்லை.

மற்றும் பல துறைகளில் தனித்தனியாக நிபுணத்துவம் பெற்றவர்களிடமும் இக்குறைகள் காணப்படுகின்றன. அதாவது தங்களுக்குச் சம்பந்தப்பட்ட துறையில் தான் நிபுணத்துவமிருக்கிறதென்பது மட்டுமல்ல, இதர எல்லா துறைகளிலும் தங்களுக்குச் சிறந்த ஞானம் உண்டு என்பதைக் காட்டிக் கொள்வதற்காகவே தான் இவர்கள் குறைகுடமாக விளங்குகிறார்கள்.

ஆனால் இவர்கள் நிபுணத்துவம் பெற்ற துறைகளைப்பற்றி அதிகமாய் பிரஸ்தாபிக்காமல் அடக்கமாயிருப்பார்கள்.

மனோதத்துவ நிபுணர்கள் இதற்குக் கூறும் காரணம், 'பொதுவிஷயங்களில் ஆராயும் அறிவற்ற பாமரராய்த் தங்களைக் கருதுவார்கள் என்று பயந்தேதான் இவர்கள் தங்களுக்குத் தெரிந்த அரைகுறை விஷயங்களை ஆர்பாட்டமாகக் கூறுகிறார்கள் என்பதாகும்'

மனிதர்களின் ஒவ்வொரு கூட்டுறவிலும் யாவற்றையும் முற்றும் உணர்ந்ததாகக் கூத்தாடும் ''குறை குடங்கள்'' மலிந்தே யிருக்கின்றன. மிகவும் பொறுமையோடு விஷயங்களை ஆராய்ந்து நேர்மையாக நடப்பவர்களுக்கு இவர்களைக் கண்டால் வெறுப்பாகத்தானிருக்கும். ஆனால் மனோதத்துவ நிபுணர்கள் கூறுவது போல் இவர்களது பிதற்றல்களுக்குக் காரணத்தை நன்குணர்ந்து பொறுமையோடு சமாளித்துக்கொண்டு தங்கள் வெறுப்பைக் காட்டாமல் இவர்களிடம் பழகுவதுதான் சிறந்த தன்மையாகும்.

ஆங்கிலப் பத்திரிகை யொன்றில் அமெரிக்காவில் ஒரு கிராமத்தைச் சேர்ந்த பெண்கள் மேற்கூறியவாறு பொருமையைக் கையாண்டதைப் பற்றி ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

அதாவது விவாகமாகாத ஒரு ஸ்திரீ அக்கிராமத்திலுள்ள ஏராளமான குழந்தைகளைப் பெற்று வளர்க்கும் இதர ஸ்திரீகளிடம் சென்று கருத்தரித்த இரண்டு மூன்று மாதங்களில் ஏற்படும் மயக்கம், வாந்தி முதலானவற்றிற்கு இன்னென்ன மருந்துகள் சாப்பிடவேண்டுமென்றும் குழந்தைபிரசவிக்கும் வரை ஒவ்வொரு மாதமும் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்றும் பிரசவித்த குழந்தையை எவ்விதம் பராமரிக்க வேண்டுமென்றும் குழந்தைகளை எவ்வாறுவளர்க்கவேண்டுமென்றும் கூறித் திரிவாளாம்.

குழந்தைகளைச் சுமந்து பெற்று வளர்க்கும் அனுபவமுடைய ஸ்திரீகள் இவள் கூறுவதை அலட்சியஞ் செய்வார்கள். ஆனால் இந்தப் பெண்ணுக்கோ இவ்விதம் கூறித் திரிவதுதான் தொழிலாய் இருந்து வந்தது. ஆகையால் நாளாவட்டத்தில் குடும்பப் பெண்கள் இவளைக் கண்டால் அவர்களின் வீட்டுக் கதவுகளைத் தாளிட்டுக் கொள்வார்கள்.

இவள் கதவைத் தட்டினாலும் இவர்கள் கதவைத் திறப்பதில்லை. இவர்கள் இவ்வாறு செய்வதனால்வீண் தர்க்கங்களுக்கும், மனஸ்தாபங்களுக்கும் இடமே ஏற்படாமற்போயிற்று.

சமூகத்தில், (ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி) சிலரை எல்லோரும் வெறுக்கிறார்கள். இவ்வாறு வெறுப்பதற்குக்காரணங்கள் அநேகமிருந்தபோதிலும், குறைகுடமாக கூத்தாடுவதுதான் முக்கியமான காரணமாயிருக்கிறது.

நாகத்தின் தெய்வீகத் தன்மை

நாகத்தைத் தெய்வமாகக் கொண்டாடும் இந்த நாட்டில் நாகர்கோயில், பாம்புக்கோயில் முதலான ஆலயங்களை அமைத்ததோடல்லாமல் காவுகளிலும் ஏராளமான நாகச் சிலைகளையும் பிரதிஷ்டை செய்திருக்கின்றனர்.

அதுவுமன்னியில் நாகங்கள் வசிப்பதற்கு நாக லோகம் என்ற தனியான பிரதேசமும் பர்மாவுக்கும், அஸ்ஸாமுக்கும் நடுவே இருக்கிறது. மைசூரில் விதுர அஸ்வத்தா என்ற ஒரு ஊர் இருக்கிறது.

பாண்டவ—கௌரவருடைய சிற்றப்பாவான விதுரரால் நடப்பட்ட அரசமரம் ஒன்று அங்கிருப்பதால்தான் இந்தப் பெயரோடு விளங்குகிறது.

அங்கு ஏராளமான நாகங்கள் வசிக்கின்றன. 'விதுர அஸ்வத்தம்' என்ற இந்த இடத்தில் நாக பூஜையும் விசேஷமாக நடைபெறுகிறது.

பல நலன்களைக் கருதி நோன்புகள் புரிந்து இந்த 'விதுர அஸ்வத்தம்' என்னும் அரசமரத்தை வணங்குவார்கள்.

ஆதிகாலத்தில் இந்நாட்டினர் சர்ப்பங்களுக்கு அரிய பெரிய சக்திகளைக் கற்பித்திருக்கின்றனர்.

ஆதிசேஷன் என்ற ஒரு பாம்பிற்கு ஆயிரம் தலைகளிருப்பதாகக் கூறியிருக்கின்றனர். நமது பூமியை ஆயிரம் தலைகள் படைத்த ஆதிசேஷன் ஒருதலைப் பாரமாகத் தாங்கிக்கொண்டிருக்கிறதாம்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கொருமுறை நமது பூமியாகிய சுமையை ஒரு தலையிலிருந்து மற்றொரு தலைக்கு மாற்றும் போது பூமி ஆட்டங்கொள்கிறதாம். இவ்விதச் சக்தி படைத்த ஆதிசேஷன் உமையவள் சுண்டு விரலுக்கு மோதிரமாக அமைந்திருக்கிறதாம்.

அனந்தன் என்னும் ஐந்து தலை நாகம் திருப்பாற் கடலில் பள்ளி கொள்ளும் மஹா விஷ்ணுவிற்குசயனமாக விளங்குகிறதாம்.

தவிர சிவபெருமானுக்கு நல்ல பாம்பு கழுத்தில் மாலையாக விளங்குகிறதாம்.

இவ்விதம் தெய்வீகத் தன்மையும், சக்தியும் படைத்த நாகங்களினால் தீண்டப்பட்டவர்கள் விஷத்தால்மரணமடைவார்கள். ஆனால் அபினி சாப்பிடும் பழக்கமுள்ளவர்களை பாம்பு கடித்தால் விஷம் பாதிக்காதாம். அபினி சாப்பிடுபவர்களுக்கு அபினி கிடைக்காவிட்டால் வயிற்றுவலி முதலிய சரீரஉபாதைகள் ஏற்படும். அபினி லாகிரி இல்லாமையை இவர்கள் சகித்துக்கொள்ளாத நிலையும் ஏற்பட்டுவிடுகிறது.

அபினி இல்லாத நேரங்களில் லாகிரி மயக்கத்தை வருவித்துக் கொள்வதற்கு பாம்பை நாவில் கடிக்கவிட்டுக் கொள்வார்களாம்.

மேற்கூறியவாறு இவர்களை பாம்பு விஷம் பாதிக்காததோடு அபினியால் ஏற்படும் போதையே உண்டாகிறதாம். இதற்கென்றே இந்த 'அபினிப் பிரியர்கள்' பாம்புகளை வளர்க்கிறார்களாம்.

குறையும் நிறையும்

அற்ப விஷயங்களிலிருந்தும்கூட மனிதர்களின் குணத்தை நாம் நன்கு அறிந்துகொள்ளலாம். ஒரு நண்பன் வீட்டிற்குச் சென்று திரும்பிய ஒருவர், நண்பன் வீட்டில் பால் கொடுத்தார்கள் என்று கூறுபவர் நன்மைகளையே எடுத்துக்கொள்பவர் ஆவார். "நண்பன் வீட்டில் அரை டம்ளர் பால் தான் கொடுத்தார்கள்" என்று கூறுபவர், குறைகளையே எப்போதும் கூறுபவரென்றும் முடிவு கட்டலாம்.

★

குறையுள்ள மனிதனென்று பிறனைச் சுட்டுவிரலால் குறித்துக் காண்பிக்கும்போது நம்மை நோக்கி மூன்று விரல்களிருக்கின்றன. பிறன் குறைகளைவிட மும்மடங்கு குற்றமாகும் அவனிடம் குறைகள் இருக்கின்றன என்று கூறுவது என்பதுதான் இதன் பொருள்.

"மன்னர்க்குத் தன்தேச மல்லால்
சிறப்பில்லை ; கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாம் சிறப்பு."

கவி அரசருக்குப் புலி அரசர் அடிமை

●

குலோத்துங்க சோழனின் ராஜசபையில் கம்பர் சமஸ்தான வித்வானாக இருந்தார். இராமாயண அரங்கேற்றத்திற்குப் பின்னர் "கவிச் சக்கரவர்த்தி" என்ற பட்டத்தைக் கம்பருக்கு அளித்து, சோழன் கம்பரை மிகவும் கௌரவமாக நடத்தியதோடு அவரிடம் மிகவும் அன்பு பாராட்டி வந்தான்.

இவ்விருவரும், தனித்திருக்கையில், 'மாமா' மருமகன்' என்ற முறைகளையும் சொல்லிக்கொள்வார்கள் ஒருநாள் கம்பரும் சோழனும் நந்தவனத்தில் தனிமையாக உரையாடிக்கொண்டிருக்கையில், சோழன் திடீரென நகைத்தான். அப்பொழுது கம்பர், "மருமகனே, ஏன் சிரிக்கிறீர்கள்?" என வினவினார். அப்பொழுது மன்னன், "இந்த அழகான பூவும் எனக்கு அடிமையாயிருக்கிறது என்பதை நினைத்துச் சிரித்தேன்" எனப் பதில் கூறினான். அப்போது கம்பர், "மருமகனே, தாங்களே எனக்கு அடிமையா யிருக்கும்போது ஒரு பூ தங்களுக்கு அடிமையா யிருப்பதில் என்ன விந்தை?" எனக் கூறினார்.

உடனே சோழனுக்குக் கம்பரைப்பற்றி ஒரு வெறுப்பும் கோபமும் ஏற்பட்டது. "என்ன! இவன் நம்மிடம் கவி பாடிப் பிழைக்கிறான் என்பதையும் மறந்து, நம்மையும் அவனுக்கு அடிமை ;எனக் கூறவும் துணிந்துவிட்டானே!" என மனத்தில் நினைத்து

உடனே அவ்விடத்தினின்றும் புறப்பட்டு, திட்டிவாசல் வழியாக அரண்மனைக்குள் நுழைந்து சயன அறைக்குச் சென்று படுத்துக் கொண்டான்.

வெகு நேரமாகியும் மன்னன் போஜனத்திற்கு வரக் காணோமே யென அரசி நேரில் வந்து மன்னனைப் போஜனத்திற் கழைத்தாள்.

மன்னன் எழுந்திருக்கவே யில்லை. ஆதலால் போஜனத்தை அங்கேயே கொண்டுவந்து உணவருந்தச் செய்ய அரசி முயன்றாள். ஆனால் மன்னன் கவலை தோய்ந்த முகத்துடன் உணவருந்த மறுத்துவிட்டான். மந்திரிகள் முயன்றும் பயனில்லை.

பின்னர் மந்திரிகள், அரசன் மிகவும் பிரியமாய் வைத்திருந்த தாசி பொன்னி என்பவளை, அரசனை உணவருந்தச் செய்யுமாறு அனுப்பினர். தாசியும் அவ்வாறே அரசனிடம் சென்று தனது சாகஸத்தால் அரசனைப் படுக்கையினின்று எழுந்து உணவருந்தச் செய்தாள்.

பின்னர், அரசனுக்கு ஏற்பட்ட மனக் கவலைக்கு என்ன காரணம் என்பதை அரசனிடம் கேட்டாள்.

அரசனும், இன்பத்திற்கும் துன்பத்திற்கும் உரிமையுடைய தனது மனைவியாகிய அரசியிடம் கூறாத ரகசியத்தை பொன்னி யென்ற இந்த தாசியிடம் சொன்னான்.

கம்பர் தன்னை அவருக்கு அடிமையெனக் கூறியதைச் சொல்லி மிகவும் வருந்தினான். அப்பொழுது பொன்னி, "அப்படியானால் அந்தக் கம்பனை எனக்கு அடிமையாக்குகிறேன்" என உரைத்தாள். "அவ்விதம் செய்தால் உனக்கு ஏராளமான சன்மானம் அளிக்கிறேன்" என மன்னன் தெரிவித்தான்.

பின்னர், பொன்னி தன் தோழியிடம், "கம்பர் வீதிவழியாக நம் வீட்டிற்கு முன் செல்லும்போது நான் அழைத்ததாக அழைத்து வா" எனத் தெரிவித்திருந்தாள்.

அவ்வாறே, ஒருநாள் கம்பர் அவ்வீதி வழியாகப் பல்லக்கில் செல்லுகையில், தோழி அவரிடம் சென்று, "தங்களை எங்கள் எஜமானி அழைக்கிறார்கள்" என அழைத்தாள். பல்லக்கினின்

றும் இறங்கி தாசி பொன்னியின் வீட்டிற்குள் பிரவேசித்தார் கம்பர்.

படுக்கையில் படுத்திருந்த பொன்னி, கம்பரைக் கண்டதும் சட்டெனெ எழுந்து, அவர்மீது ஆசை கொண்டவள்போல் சாகஸம் புரிந்து கைகூப்பி நமஸ்கரித்துக்கொண்டே அவரிடம் வந்தாள். இந்த விபரீதக் காட்சியைக் கண்ட கம்பர், "அம்மா, அப்படியே நில்! அரசர் எனக்கு மருமகனனபடியால் அவருடைய ஆசை நாயகியாகிய நீ எனக்கு மகளாக வேண்டும். ஒரு மகள் ஒரு தகப்பனிடம் எதைக் கேட்கலாமோ அதைக் கேள். நான் உனக்கு அடிமையாக இருந்து அதைச் செய்து தருகிறேன்' எனத் தெரிவித்தார்.

உடனே தாசி பொன்னி, "நீங்கள் எனக்கு அடிமையாக இருந்து...எனத் தெரிவித்தீர்களே, அதுபோன்று தாங்கள் எனக்கு அடிமை யென்று பகிரங்கமாய்ச் சொல்ல முடியுமா?" எனக் கேட்டாள்.

"ஆகா! இதிலென்ன சந்தேகம்? கூறுவதென்ன வேண்டிய திருக்கிறது? நான் உனக்கு அடிமை என்பதை ஏட்டிலே எழுதியே தருகிறேன்" எனப் புகன்றார்.

தாசியும் அவ்வாறே கம்பரிடம் ஓர் ஏட்டைக் கொண்டுவந்து கொடுத்தாள்.

"**தாசி பொன்னிக்குக் கம்பன் அடிமை**" என எழுதி அவ்வேட்டை தாசி பொன்னியிடம் கொடுத்துவிட்டுக் கம்பர் சென்றுவிட்டார்.

தாசியும் மிக மகிழ்ச்சியுடன் அந்த ஏட்டை அரசனிடம் கொடுத்து சன்மானமும் பெற்றாள்.

மறுநாள் காலை ராஜசபை கூடியது. மந்திரி பிரதானிகள், ராஜகுரு, சமஸ்தான வித்வானாகிய கம்பர் முதலியோர் அவரவர் ஆசனத்தில் வீற்றிருந்து அரசர் வருகையை ஆவலோடு எதிர் நோக்கி இருந்தனர்.

புது உவகையுடன் மன்னன் சிம்மாசனத்தில் வந்துஅமர்ந்து ஒரு சேவகனிடம் அந்த ஏட்டைக் கொடுத்துக் கம்பரிடம் காண்பித்து,

"இவ்வேட்டில் எழுதியிருப்பது நீர் எழுதிய வாக்கியந்தானா?" என்று கேட்டான். கம்பரும், "ஆம், நான் எழுதியதுதான்" என ஒப்புக்கொண்டார்.

பிறகு மன்னன் அவ்வேட்டைக் கட்டியக்காரனிடம் கொடுத்து உரக்கப் படிக்கச் சொன்னான். கட்டியக்காரன், "தாசி பொன்னிக்குக் கம்பன் அடிமை" என்று உரக்கப் படித்தான்.

சபையிலிருந்தோர், "கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர் ஒரு தாசிக்கு அடிமையா!" என வெட்கித் தலைகுனிந்தனர்.

மன்னன் ராஜசபை எதிரொலிக்கும்படி நகைத்தான்.

அப்பொழுது கம்பர், "தமிழில் தேர்ச்சி பெற்ற வித்துவான்கள் இதற்குச் சிரிக்க மாட்டார்கள். இவ்வாக்கியத்தின் பொருளை அறியாதவர்களே ஏளனமாக எண்ணி நகைப்பார்கள்" எனத் தெரிவித்தார்.

அப்பொழுது மன்னன் கோபாவேசத்துடன், "அப்படியானால் இவ்வாக்கியத்தின் பொருள் என்ன?" என்று கேட்டான். அதற்குக் கம்பர், "தா—சி—பொன்னி—க்கு—கம்பன்—அடிமை என ஆறு பதங்களோடு கூடிய வாக்கியம் இது. அதாவது, 'தா'—தாய்: யாவருக்கும் தாயான லோகமாதாவாகிய; 'சி'—மங்களகரம் பொருந்திய; 'பொன்னி'—பொன்னுக்கு அதிபதியாகிய மகாலக்ஷ்மிக்கு; 'க்கு'—ஆறும் வேற்றுமை; 'கம்பன்'—யானாகிய கம்பன்; 'அடிமை'—அடிமை. அதாவது, லோகமாதாவாகிய மகாலக்ஷ்மிக்கு யானாகிய கம்பன் அடிமை" என்ற அர்த்தத்தை விளக்கிக் கூறி, மகாலக்ஷ்மிக்கு அடிமையாயிருக்கும் பாக்கியம் யாருக்குக் கிடைக்கும் என மகிழ்ச்சியுடன் கூறினார்.

மன்னன் மனவருத்தத்துடன்,

"போற்றினும் போற்றுவர் பொருள் கொடாவிடில்
தூற்றினும் தூற்றுவர் சொன்ன சொற்களை
மாற்றினும் மாற்றுவர் வன்கணாளர்கள்
கூற்றினும் பாவலர் கொடியராவரே"

[புலவர்களுக்குப் பொருளைக் கொடுத்தால் இந்திரனே, சந்திரனே என்று துதிப்பார்கள்

பொருள் கொடாவிட்டாலோ நிந்தை செய்வார்கள். தாங்கள் சொன்ன வார்த்தைகளை மாற்றியும் சொல்வார்கள். மிகவும் கொடுமையான இவர்கள் எமனைப் பார்க்கினும் பொல்லாதவர்களாவார்கள்.]

என்ற கவியைப் பாடிக் கம்பரிடம், "நீர் நாம் அளித்துள்ள விருதுகளை யெல்லாம் கொடுத்துவிட்டு எம் ராஜ்யத்தை விட்டுப் போய்விட வேண்டும்" என உத்திரவிட்டான்.

கம்பரும் அவ்வாறே விருதுகளை யெல்லாம் அரசனிடம் ஒப்படைத்துவிட்டு,

"காத மிருபத்து நான்கொழியக் காசினியை
ஓதக் கடல்கொண் டொளித்ததோ?—மேதினியில்
கொல்லிமலைத் தேன்சொரியுங் கொற்றவா நீ முனிந்தால்
இல்லையோ வெங்கட் கிடம்?"

[எங்களுக்குச் சோழ நாட்டைத் தவிரப் பரந்த இந்த உலகத்தில் தங்குவதற்கு வேறு இடம் கிடையாதா] என்றும்,

"மன்னவனு நீயோ, வளநாடு முன்னதோ,
உன்னையறிந் தோதமிழை யோதினேன்—என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ, வுண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு?"

[ஒரு கொம்பிலிருந்து தவறிய குரங்கை மற்றொரு கொம்பு ஏற்றுக்கொள்வதுபோல், உன்னால் கைவிடப்பட்ட என்னை வேறு எந்த அரசனும் ஏற்றுக்கொள்வான் என்பது திண்ணம்]

என்றும் இக்கவிகளைப் பாடிவிட்டு வெளியேறும்பொழுது, "நீ ஒரு சிற்றரசன். உன்னைப்போல் பல மன்னர்களிடம் கப்பம் வாங்கும் ஏகச்சக்கிராதிபதியும் எனக்கு அடப்பப் பையை (வெற்றிலைப் பை) சுமப்பான்" என்று கூறிவிட்டுச் சென்றார்.

———

பிரமுகர்களால் சாதிக்க முடியா தவற்றை சாதாரண மக்கள் சாதிக்கின்றனர்.

மத சமூகப் பண்பாடுகளுக்கு ஆதாரம் யார்?

●

உலகிலுள்ள சர்வ தேசங்களிலும், பல மதஸ்தர்களும் பல சமூகத்தார்களும் இருக்கிறார்களென்பதை யாவரும் அறிந்ததே.

ஒவ்வொரு மதத்திற்கும் ஒவ்வொரு வகுப்பிற்கும் தனித்தனியாகப் பல சம்பிரதாயங்கள், பற்பல ஆசார ரீதிகள், அநுஷ்டானங்கள் முதலானவை அமுலில் இருப்பதும் நாம் அறிந்ததே.

மேற்கூறிய சம்பிரதாயங்களெல்லாம் ஒவ்வொரு மதத்தினரையும் ஒவ்வொரு வகுப்பினரையும் தனித்தனியான முறையில் கட்டுப்பாடு செய்வதற்கு அமைந்தவைகளாகின்றன.

மத வகுப்பு சம்பிரதாயக் கட்டுப்பாடுகளுக்கு உலகில் மனிதன் மிகவும் பயந்தே நடக்கவேண்டிய திருக்கிறது. மேற்கூறிய கட்டுப்பாடுகளுக்கு மீறி மனிதன் நடப்பானேயானால், மதத்தினராலோ அல்லது வகுப்பினராலோ தூற்றப்படுவதோடு மதத்தினின்றும் வகுப்பினின்றும் புறக்கணிக்கப்பட்டுப் பிறரால் எள்ளி நகையாடும் நிலையை அடைகிறான்.

உயிர் போவதாயினும் கட்டுப்பாட்டை மீறக்கூடாதென்ற இருப்புக் கதவுகளை உடைய காராக்கிருஹத்தில் கட்டுண்டு கிடக்கிறான். ஆகவே, மத சமூக சம்பிரதாயங்களாகிய இக் கட்டுப்பாடுகள் உயிருக்கு மேலாகக் கருதக்கூடியவைகளா யிருக்கின்றன.

இச் சம்பிரதாயங்களில் ஒரு சிறு அம்சத்தில் தவற நேரினும் ஜாதி, மதப் பிரஷ்டங்கள் சம்பவிக்குமென அஞ்சுபவர்கள் ஒவ்வொரு மதத்திலும் வகுப்பிலுமுள்ள பொதுமக்களே யன்றி அதி உன்னத நிலையில் உள்ளவர்களல்ல. கட்டுப்பாடென்பது யாவருக்கும் பொது நியதிதான். ஆனால் இதை அநுசரிப்பவர்கள் பொதுமக்கள்தான். உயர்ந்த அந்தஸ்துடைய பிரபுக்கள் அல்ல.

பொதுமக்கள்தான் ஜாதிமத சம்பிரதாயங்களில் எள்ளத்தனையும் பிசகாமல் நடக்கிறார்கள். பிசகினால் மதத்தினின்றும் அல்லது ஜாதியினின்றும் விலக்கப்பட்டு, மதத்தினராலும் வகுப்பினராலும் புறக்கணிக்கப்பட்டு, இவர்களுடைய ஆதரவிழக்கப்பட்டு, ஏகாங்கியாய்த் தனித்து வாழும் தன்மை ஏற்பட்டுவிடுமே யென்ற கட்டுப்பாட்டின் அச்சம், பொதுமக்களுக்குத்தான் இருக்கும்; உயர் நிலையிலுள்ளோர் இந்தக் கட்டுப்பாட்டை லட்சியம் செய்வதே கிடையாது.

எவ்வாறெனில், மத போதகர்களும், சீர்திருத்தவாதிகளும், தேசியத் தலைவர்களும், "நான் சொல்வதுபோல் நடவுங்கள்; ஆனால் நான் நடப்பதுபோல் நடவாதீர்கள்" எனப் பிரசாரம் செய்வது போன்றேதான், கட்டுப்பாட்டை நிர்த்தாரணம் செய்யும் மத சமூகப் பெரியோர்கள் விளங்குகின்றனர். இவ்வுண்மை சர்வ தேசங்களிலும், சர்வ காலங்களிலும் சாசுவதமாகவே இருந்து வருகிறது.

உதாரணமாக, பதினாலாம் நூற்றாண்டில் ஐரோப்பாக் கண்டத்தில் ரோமன் கத்தோலிக்க மதமே இருந்துவந்தது. (அக்காலத்தில் 'ப்ராடஸ்டன்ட்' மதம் தோன்றவில்லை) கத்தோலிக்க மதத்தில் விதவா விவாகம் கிடையாது. அவ்விதமிருக்க, அண்ணன் மனைவியாகிய விதவையை எட்டாவது ஹென்றி மணந்துகொள்ள வேண்டுமென்று ஏழாவது போப் கிளமெண்டு விதிவிலக்களித்தார். எட்டாவது ஹென்றி அவ்வாறே விதவையை மணந்தான்.

அக்காலத்தில் வேறு யாராவது சாதாரண மனிதன் ஒரு விதவையை மணக்க விரும்பினால் போப் அனுமதி யளித்திருப்பாரா? அனுமதியின்றி விதவையை மணந்தால் அவன் கதி என்னவா யிருக்கும்?

இதுபோன்றே நமது நாட்டிலும் சில வகுப்புகளில் பெண், பருவம் அடையுமுன் சிறுமியா யிருக்கும்போதே விவாகம் செய்து கொடுத்துவிட வேண்டுமென்ற சமூகக் கட்டுப்பாடு இருந்தது.

இக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு அச் சமூகத்திலுள்ள நடுத்தர மக்களும் எளிய மக்களுமேதான் பயந்து நடப்பார்கள். பெண்ணை எவ்விதத்திலும் சிரமப்பட்டு, புஷ்பவதியாகுமுன் விவாகஞ் செய்து கொடுத்துவிடுவார்கள்.

தக்க வரன் அமையாமல், பெண்ணும் பருவமடைந்து விட்டால் அச் சமூகத்திலுள்ள ஏனையோர் பெண்ணின் குடும்பத்தினரை ஏளனஞ் செய்வார்கள். எந்த வாலிபனும் அந்தப் பெண்ணை மணக்க முன்வர மாட்டான். ஒருவேளை பருவமான அப்பெண்ணை ஒரு வாலிபன் துணிந்து மணந்தாலும் அந்த மணமக்கள் இருவரும், இருவரின் குடும்பத்தாரும் அச் சமூகத்தினின்று புறக்கணிக்கப்பட்டுச் சமூகத்தாருடன் கலந்து உறவுகொள்ள முடியாமல் ஒதுக்கப்படுவார்கள். ஆனல், அச் சமூகத்திலுள்ள தனவந்தரின் பெண் விவாகத்திற்கு முன்பே புஷ்பவதியானல், அதை அச் சமூகத்திலுள்ளோர் பொருட்படுத்த மாட்டார்கள். வாலிபர்கள் போட்டியிட்டு அப்பெண்ணை மணந்துகொள்ள முன்வருவார்கள் பருவமடைந்த பெண்ணை மணந்துகொண்டான் என்ற இழிவிற்கோ, பருவமடைந்த பின் பெண்ணை விவாகஞ் செய்து கொடுத்தான் என்ற பழிச்சொல்லுக்கோ இவர்கள் பாத்திரர்களாவதில்லை. நியதி என்பது பொதுமக்களுக்குத்தானே? பணக்காரர்களுக்கு அல்லவே! பணக்காரர்கள் சமூகக் கட்டுப்பாட்டிற்குப் பயப்படவேண்டிய அவசியமே யில்லை. தேனிருக்குமிடத்தில் இயற்கையாக ஈ மொய்த்துக்கொள்வதுபோல் இவர்களையும் அச் சமூகத்திலுள்ள பொதுமக்கள் போய் அண்டிக்கொள்வார்கள். இவர்களின் ஆதரவு பொதுமக்களுக்கு அவசியம் தேவையாயுமிருக்கிறது. இவர்களின் சமூகக் கட்டுப்பாட்டிற்கு மீறிய அநாசாரமான காரியங்களைப் ''பெரிய இடத்துக் காரியம்'' என அவற்றைப் பகிரங்கமாகப் பேசவோ, சமூக சம்பிரதாய முறைக்கு இவர்களைக் கட்டுப்படுத்தவோ அச் சமூகத்திலுள்ள பொதுமக்களால் முடியாது.

உலகத்திலே உயர்நிலையில் இருப்பவர்கள்மட்டும் விதிவிலக்கற்ற முறையில் அமைந்திருக்கும் விசித்திர வாய்ப்பை அறிந்தால், நமக்கு விநோதமாகயும் வேடிக்கையாகவும்தான் தோன்றும்.

இவர்கள் சம்பந்தத் தொடர்புக்காக எந்த சமூகத்திற்கும், எந்த மதத்திற்கும் லகுவில் மாறி, அந்த மதத்திற்கும் அந்த சமூகத்திற்கும் தலைமைதாங்கும் முக்கியஸ்தர்களாக விளங்குகிறார்கள்.

மதத்திற்கும் சமூகத்திற்கும் பிறப்பிலே சம்பந்தமில்லாத ஒருவர் அம்மதத்திற்கும் அச்சமூகத்திற்கும் முக்கியஸ்தர்களாக விளங்குவது விநோதம்தானே!

ஹிந்து மதத்திலும், கிறிஸ்துவ மதத்திலும், இஸ்லாமிய மதத்திலுமுள்ள பிரமுகர்கள் அநேகருடைய வாழ்க்கையைக் கவனிப்போமானால் இவர்கள் செய்கைகளுக்கும் இவர்களுடைய பண்பாட்டோடு கூடிய மதாச்சாரங்களுக்கும் சம்பந்தமேயில்லை என்பது நன்கு புலப்படும்.

இதிலிருந்து நமக்குத் தெரிவதென்னவென்றால் உலகம் முழுவதிலும், சகல மதங்களிலும், வகுப்புகளிலும் உள்ள நடுத்தர வகுப்பார்தான் ஆசாரங்களோடு கூடிய மத, சமூக, பண்பாட்டைச் சிறிதும் பிசகாமல் பின்பற்றி, பண்பாடுகளை நிலைநாட்டி, மத சமூகங்களை என்றும் அழியாது விளங்கச் செய்விக்கின்றனர்.

பட்டைப்பற்றிப் பேசவேண்டாம்!

●

சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வாலிபனுக்கு ஒரு பிரபுவின் மகன் நண்பனு யிருந்தான். இந்த வாலிபனுக்கு விவாகத்திற்கு ஏற்பாடாகி யிருந்தது. பெண்வீட்டார் வாலிபனைப் பார்ப்பதற்காக அழைத்திருந்தனர்.

வாலிபன் பிரபுவின் மைந்தனுக்கு இத் தகவலை அறிவித்து, அவனிடமிருந்து ஒரு பட்டை இரவலாக வாங்கி அணிந்துகொண்டு, அவனையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு பெண்வீட்டிற்குச் சென்றுன்.

பெண்ணின் உறவினர்கள் கூட்டங் கூட்டமாக மணமகனைப் பார்க்க வந்தனர்.

முதலில் வந்தவர்கள், "மணமகன் மிகவும் அழகாயிருப்பதோடு பெரிய பணக்காரனுகவு மிருக்கலாம்" எனப் பேசிக்கொண்டனர். அத்தருணத்தில் மணமகனின் நண்பன் அவர்களிடம், "நீங்கள் கூறுவதுபோல் மணமகன் ஒரு பெரிய பணக்காரர்தான். ஆனல்--அவர் அணிந்துள்ள பட்டு என்னுடையது" எனக் கூறினன்.

அவர்கள் சென்ற பின்னர் நண்பர்கள் இருவரும் தனித்திருக்கையில், மணமகனுன வாலிபன் பிரபுவான நண்பனிடம், "பட்டைத் தாங்கள் எனக்கு இரவல்தான் கொடுத்திருக்கிறீர்கள். இதை நான் சொந்தமாய் வைத்துக்கொள்ளப்போவதில்லை. இதைத் தங்களிடமேதான் திருப்பிக் கொடுத்துவிடப்போகிறேன். அவ்விதமிருக்க நான் அணிந்திருக்கும் பட்டு இரவல் என்பதைப் பெண்ணின் உறவினர்களுக்குத் தங்கள் பட்டுதான் எனக் கூறித் தெரிவிக்க வேண்டுமா?" என வருந்தினன்.

தனவந்தன், "நீ வருத்தப்பட வேண்டாம். 'பட்டு' இனி மேல் என்னுடையதுதான் என்று சொல்லவில்லை" எனப் பதில் கூறிக்கொண்டிருக்கையில், பெண்ணின் வேறு சில உறவினர்கள் மணமகனைப் பார்க்க வந்தனர்.

அவர்களும் அவ்வாறே, "மாப்பிள்ளை நல்ல அழகுடன் இருக்கிறார்; சீமானுகவு மிருப்பார்போல் தோன்றுகிறது" எனப் பேசிக்கொண்டனர். அச்சமயத்திலும் மணமகனின் நண்பன், அவர்களிடம், "ஆம்; நீங்கள் நினைக்கிறபடி அவர் ஒரு பெரிய தனவந்தர்தான்; அவர் மேலே அணிந்திருக்கிறாரே பட்டு—அந்தப் பட்டும் அவருடையதுதான்" எனக் கூறினன்.

பெண்ணின் உறவினர் சென்ற பின்னர், "என்னய்யா இது! அவரவர் உடைகளைத்தானே அவரவர்கள் அணிந்திருப்பார்கள்? அவ்விதமிருக்க, நான் அணிந்திருக்கும் பட்டும் என்னுடையதுதான் என்று தாங்கள் கூறுவது, பட்டு எனது உடைமையல்ல—இரவல் என்பதை அல்லவா காட்டுகிறது? பட்டைப்பற்றி உங்களிடம் யார் கேட்டார்கள்? பட்டைப்பற்றி நீங்கள் ஏன் பேசவேண்டும்? நான் தங்களிடம் பட்டை இரவல் வாங்கியதும் போதும்; நான் படுகிற பாடும் போதும்!" எனக் கூறி வருந்தினன்.

அப்போது நண்பன், "சரி அப்பா! பட்டைப்பற்றி இனிமேல் பேசமாட்டேன்" எனக் கூறினன்.

மூன்றுவது முறையாக, மணமகளின் வேறு சில உறவினர் மணமகனைப் பார்க்க வந்தனர்.

அவர்களும், "மணமகன் நாகரிகத்தோடு நல்ல தோற்றமளிக்கிறார். மிகுந்த ஐசுவரியவானுகவும் இருப்பார்போல் தெரிகிறது" எனப் பேசிக்கொண்டனர்.

அவ்வேளையிலும் மணமகனின் நண்பன் அந்த உறவினர்களிடம், "நீங்கள் நினைக்கிறபடியே அவர் ஒரு பிரபுதான். ஆனல் பட்டைப்பற்றி நாம் ஏன் பேசவேண்டும்?" எனக் கூறினன்.

மணமகனின் நிலையைக் கூறவாவேண்டும்?

முன்னேற்றத்தில் பகுத்தறிவுக்குப் பொருந்தாத அம்சங்களும், ஏமாற்றங்களும் மேல்நாடுகளில் உண்டு என்பதற்கு ஒரு உதாரணம்.

குழந்தைகளும் ஒரு வியாபாரப் பொருள்

●

சமீபத்தில் திருச்சி ஜில்லாவிலுள்ள லால்குடியைச் சேர்ந்த வேம்பு அம்மாள் குழந்தையில்லாததால் அவள் கணவனாகிய தங்கவேலுவால் விலக்கப்பட்டாளென்றும் அவ்வாறு விலக்கப்பட்ட வேம்பு அம்மாள் திருச்சி ஸ்தல ஆஸ்பத்திரியில் பிரசவ அறையிலிருந்து தன் கணவனைத் திருப்தி செய்வதற்காக, ஒரு குழந்தையைத் திருடினாளென்றும், அதற்காக அரசாங்கத்தார் அவளிடமிருந்து ஒரு வருஷ நன்னடத்தை ஜாமீன் வாங்கினார்களென்றும் பத்திரிகைவாயிலாக யாவரும் அறிந்திருக்கலாம்...

சாதாரணமாக பொருள்களை திருடுவதைத்தான் நாம் எங்கும் பார்க்கிறோம். மேற்கூறிய ஸ்திரீயோ பிறருடைய சிசுவைத் திருடினாள். மக்களை 'மக்கட் செல்வம்' என்று திருவள்ளுவர் கூறுகிறார். 'தம் பொருள் என்பது தம் மக்கள்—' என்பதுபோல மனிதர்களுக்கு 'மக்கட் பேறு' தான் உயர்ந்த செல்வம் மற்ற செல்வங்களெல்லாம் திறமையோடு தேடலாம், விலை கொடுத்து வாங்கலாம். ஆனால் மக்கட் செல்வம் மட்டும் கடவுளின் அனுக்கிரஹத்தால் கிடைக்கவேண்டியதாயிருக்கிறது. வளர்க்கமுடியாமல் தவிக்கும் ஏழைகளுக்கு நிறையக் குழந்தைகளிருப்பதைப் பார்க்கிறோம்.

புத்திரட் பேற்றுக்காக தனவந்தர்கள் காசி, ராமேஸ்வரம்

முதலான க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை சென்றும், குழந்தையில்லாமல் அவர்கள் வருந்துவதை நாம் காண்கிறோம்.

குழந்தையில்லாத குறையை நீக்குவதற்காகவும் தனக்குப் பின் 'வாரிசு' ஆக இருப்பதற்காகவும், குழந்தையில்லாதவர்கள் பந்துக்களின் குழந்தைகளை சுவீகாரஞ் செய்துகொள்வது நம் நாட்டின் வழக்கம்.

நமது நாட்டில் ஜாதி, மத பேதங்கள் மலிந்திருப்பதால் சுவீகாரஞ் செய்துகொள்பவர்கள் அவரவர்களின் இனத்தில் நெருங்கிய உறவினர்களின் குழந்தைகளைத்தான் சுவீகரிப்பார்கள்

வறுமையின் காரணத்தால் நமது நாட்டில் ஸ்திரீகள் தங்கள் குழந்தைகளை விலை கூறினாலும் குழந்தையுள்ளவர்களானாலும் குழந்தையில்லாதவர்களானாலும் தங்கள் சொந்தக் குழந்தைகளாகப் பாவித்து வளர்ப்பதற்கு; விலைகூறும் அந்த ஸ்திரீகளிடமிருந்து குழந்தைகளை வாங்குவதற்கு யாரும் விரும்புவதில்லை. ஒருவேளை விலை கொடுத்து வாங்கினாலும் அடிமையாக்கிக் கொள்ளும் உத்தேசத்துடன் தான் வாங்குவார்கள்.

குழந்தையில்லாமல் வருந்தும் தம்பதிகளுக்கு குழந்தைகளில்லாத குறையைத் தீர்ப்பதற்கு ஏற்ற வசதிகள் நிரம்பியது அமெரிக்க ஐக்கிய நாடு.

தம்பதிகளுக்கு நிச்சயமாய் மக்கட் பேறு ஏற்படாது என்ற முடிவுக்கு வந்த பின்னர் அவர்கள் சர்க்காரின் அங்கீகாரம் பெற்ற குழந்தைகளை சுவீகாரம் அளிக்கும் ஸ்தாபனங்களுககுச் சென்றால் அவர்களின் விருப்பம் போல் குழந்தைகளை சுவீகாரஞ் செய்துகொள்ளலாம்.

அநாதைக் குழந்தைகளை, வளர்ப்பவர்களிடம் சுவீகாரஞ் செய்து கொடுப்பதுதான், இம் மாதிரி ஸ்தாபனங்களின் வேலை.

குழந்தைகளை சுவீகாரஞ் செய்து கொள்வோர், இந்த ஸ்தாபனங்களுக்கு வந்து தங்கள் அந்தஸ்து, பூர்வோத்திரம் முதலான தகவல்களை பத்திரங்களில் பதிவு செய்து கொடுக்கவேண்டும். முக்கியமாக சுவீகாரஞ்செய்துகொள்ள வருபவர்களின் தகுதிகளையும் குழந்தைகளை அன்போடும் ஆதரவோடும் பராமரிக்கும் மனோபாவம் இவர்களுக்கு இருக்கிறதா என்பதையும் நன்கு கவனிப்பதோடு அதற்கு முன் அவர்கள் ஏதாவது குற்றத்திற்காக தண்டனை யடைந்திருக்கிறார்களாவென இவைபேல்லாம் ஸ்தாபனத்தார் நன்கு பரிசீலனை செய்த பின்பே சுவீகாரஞ் செய்து கொடுக்கவேண்டுமென்பது அமெரிக்க சர்க்காரின் சட்டமாகும்.

குழந்தையில்லாத மேற்கூறிய தகுதிகளெல்லாம் ஒருங்கே வாய்ந்த பல்லாயிரம் தம்பதிக

ளுக்கு இந்த ஸ்தாபனத்தார் மூலம் குழந்தைகளை சுவீகாரஞ் செய்துகொள்ளமுடிகிறது.

சில்லறைக் குற்றங்களுக்காக தண்டனை யடைந்ததன்நிமித்தம் ஆயிரக்கணக்கான, குழந்தைகளில்லாத தம்பதிகளுக்கு ஸ்தாபனத்தரால் விதிக்கப்பட்டிருக்கும் எல்லாத் தகுதிகளும் பொருந்தியிருந்தும் குழந்தைகளை சுவீகாரஞ்செய்துகொள்ள முடியவில்லை. இக்காரணத்தால் குழந்தைகளை சுவீகாரஞ்செய்துகொள்ளமுடியாமல் தவிக்கும் ஆயிரக்கணக்கான தம்பதிகளின் குறைகளைத் தீர்ப்பதற்கு குழந்தைகளை விலைக்கு விற்கும் 'பிளாக் மார்க்கெட்டுகளு'ம் இருக்கின்றன.

ஈவிரக்கமற்ற பாவ புண்ணியங்களுக்குப் பயப்படாத ஆயிரக் கணக்கானவர்கள் இந்த வியாபாரத்திலீடுபட்டிருக்கின்றனர்.

இத்துறையிலீடுபட்டுள்ளோர் அபரிமிதமான ஆதாயம் அடைகின்றனர்.

இந்த வியாபாரிகள் ஒழுங்கற்ற முறையில் பிறந்த குழந்தைகளையும், வளர்க்கமுடியாத பெற்றோர்களிடமுள்ள குழந்தைகளையும் பேரம் பேசி விலைகொடுத்து வாங்கி, ஸ்தாபனத்தின் மூலம் நேர்மையாக சுவீகரித்துக்கொள்ளமுடியாத தம்பதிகளுக்கு ஏராளமான பொருளுக்கு விலைக்கு விற்றுவிடுகின்றனர். இது மிகவும் சட்டவிரோதமான செயல். குழந்தைகளை சுவீகரிப்பதற்குத் தீவிரக் கட்டுபாடும், கடுமையான சட்டமும் அமைந்திருப்பதனால்தான் மேற்கூறியுள்ள குழந்தைகளை விலைக்குவிற்கும் 'பிளாக் மார்க்கெட்' அங்கு மலிந்திருக்கிறது.

ஸ்தாபனங்களின் மூலம் நினைத்தவுடன் உடனடியாகக் குழந்தைகளை சுவீகரிக்கமுடியாது:

ஒருவேளை காலம் நீடிக்கவும் கூடும், ஆகையினால் பல நாட்கள் பொறுமையோடு காத்திருக்க விரும்பாத தம்பதிகளுக்கும் தங்கள் பூர்வோத்திரங்களை ஸ்தாபனத்தார் ஆராய்வதை விரும்பாத தம்பதிகளுக்கும் தான் 'பிளாக் மார்க்கெட்' வியாபாரிகள் குழந்தைகளைவிற்கிறார்கள். இம்மாதிரித் தம்பதிகள் திரள் திரளாக பிளாக் மார்க்கெட்டில் குழந்தைகளை நாடி வருகின்றனர்.

இந்த வியாபாரிகள் குழந்தைகளாகிய 'சரக்குகளை'த் தேடும் வரலாறு மிகவும் விநோதமாயிருக்கிறது. இவர்கள் எப்போதும் ஆஸ்பத்திரிகளிலும் ஏராளமான டாக்டர்களிடமும் தொடர்புவைத்துக்கொண்டிருப்பார்கள்.

ஒழுக்கமற்ற முறையில் கருவுற்றிருக்கும் பெண்களின் விபரங்களை ஆஸ்பத்திரிகளிலிருந்தும், டாக்டர்களிடமிருந்தும் இவர்கள் அறிந்துகொள்கின்றனர்.

விவரங்கள் கிடைத்தவுடனே அந்தப் பெண்களிடம் சென்று பேரம் பேச ஆரம்பித்துவிடுவார்கள், பேரம் பேசி முடிவானதும் இவ்வியாபாரிகளின் பொறுப்பிலேயே இவர்களுக்கு இஷ்டமான ஆஸ்பத்திரிகளில் அப்பெண்களின் பிரசவத்திற்கு வசதி செய்துகொடுப்பார்கள்.

சௌகர்யங்கள் நிறைந்த ஆஸ்பத்திரியும் அன்பு நிறைந்த டாக்டர்களும் தாய்போன்ற கனிவுள்ள நர்ஸுகளும் புஷ்டியான உயர்தர ஆகார வசதிகளும் பூரணமாய் இளைப்பாறத்தகுந்த மெதுவான பஞ்சணைகள் நிறைந்தகட்டில்களடங்கியவிடுதிகளும், குழந்தைகளைப் பிரசவித்ததும் மனங்குளிறும்படி கை நிறைய ஏராளமான பொருளும் கிடைக்கும்பொழுது பரிதாபகரமான நிலையிலுள்ள எந்தப் பெண்தான் குழந்தையை விற்க முன்வரமாட்டாள்?

இத்துறையில் திறமையான வியாபாரிகளுக்கு எந்த நேரத்திலும் விற்பதற்கு டஜன்கணக்கான குழந்தைகள் தயாராயிருக்கும்.

இந்தக் குழந்தைகளை வாங்குவதற்குப் பரிதாபகரமான பெண்களைச் சரிகட்டி வைத்து கொள்வது போலவே உடனடியாக விற்பதற்கு குழந்தையில்லாத தம்பதிகளிடஞ் சென்று பேரம்பேசி முடிவுசெய்து வைத்திருப்பார்கள். அத்துடன் அக்கம் பக்கத்தார் இவர்களுக்குத் திடீரென்று எப்படி குழந்தை கிடைத்தது என அத்தம்பதிகளைச் சந்தேகிக்காமலிருப்பதற்கு அவர்களுக்குச் சில யுக்திகளையும் சொல்லிக் கொடுக்கின்றனர்.

சாதாரணமாக, அக்கம்பக்கத்தாரிடம் கருவுற்றிருப்பதாகத் தெரிவித்து சில தினங்களில் அடுத்த ஊரிலிருக்கும் தம்இனத்தார் வீட்டிற்குச் செல்வதாகக் கூறி தம் வீட்டைவிட்டு வெளியேறிவிடுவார்கள்.

குழந்தையை விற்பதற்குத் தயாராகவுள்ள பெண் ஆஸ்பத்திரிக்கு வரும்போது அதே ஆஸ்பத்திரிக்கு இந்தத் தம்பதிகள் சென்றுவிடுவார்கள். குழந்தையை விற்கத் தயாராயிருந்த பெண் பிரசவித்ததும் அந்தக் குழந்தையை இத் தம்பதிகள் வாங்கிக்கொண்டு, தங்களுக்கே ஆஸ்பத்திரியில் குழந்தைபிறந்ததாகச் சொல்லித் திரும்பவும் தங்கள் சொந்த வீட்டிற்கு வந்துவிடுவார்கள். அக்கம் பக்கத்தினர், குழந்தையை, அந்தத் தம்பதிகளுக்குப் பிறந்ததாகவே கருதுவார்கள். வியாபாரிகள் சொல்லிக்கொடுக்கும் யுக்திகளில் இதுவும் ஒருவகை.

வியாபாரிகளுக்கு இக்குழந்தைகளுக்கு எந்தக் குறிப்பிட்ட விலையையும் நிர்ணயிப்பதில்லை. குழந்தைகளின் விலை வாங்குவோர்களின் பொருளாதாரத்தைப் பொறுத்தது.

ஆனால் இந்த வியாபாரிகள் குழந்தைகளை வாங்குவோர்களின் பொருளாதார நிலைக்குத் தக்கவாறு எவ்வளவு பொருள் பெறமுடியுமோ அதைத் தங்களுக்குள்ளே முடிவு செய்து வைத்துக்கொண்டு வெகு சாதுர்யமாய்ப் பேசி, அவர்கள் குறிப்பிட்டிருந்த தொகைக்கு வாங்குவோரை ஒப்புக்கொள்ளச் செய்துவிடுவார்கள்.

குழந்தை பிரசவிக்கும் வரை பொறுமையோடு காத்திருக்க விரும்பாமல் உடனடியாகக் குழந்தையை வாங்கிக்கொள்ள விரும்பும் தம்பதிகளுக்குச் சில உபாயங்கள் மூலம் தாமதமின்றி குழந்தைகளைக் கொடுப்பதற்கும் வேறு ஏற்பாடுகளும் உண்டு.

இவை எவ்விதமென்றால், ரயில்வே ஸ்டேஷன் போன்ற ஜன நெருக்கடி ஏராளமாயுள்ள பொது இடங்களுக்கு இத் தம்பதிகளை வரவழைத்து அவர்களிடம் யாரும் காணாதபடி சம்பிரதாயமாகக் குழந்தைகளைப் படைப்பார்கள். இதுவும் தவிர குழந்தையை ஒரு நர்ஸை எடுத்துக் கொண்டுவரச் செய்து அத் தம்பதிகளுடன் குழந்தையோடு இந்த நர்ஸையும் கூட கூட அனுப்பிவைப்பார்கள். பார்ப்பவர்களுக்கு ஆஸ்பத்திரியிலிருந்து குழந்தையைப் பெற்றெடுத்துக்கொண்டு வருகிறமாதிரி தோற்றமளிக்கச் செய்வார்கள்.

இவ்விதம் 'பிளாக் மார்க்கெட்டில் ஏராளமான பொருளைக் கொடுத்துக் குழந்தையை வாங்கிய தம்பதிகளில் சிலருக்கு நேரிடும் பரிதாபகரமான நிலையைப் பற்றியும், இங்கு குறிப்பிடவேண்டியதிருக்கிறது. இவர்களுக்குக் குழந்தைகளால் பின்னரும் ஏராளமான பொருட்செலவும் அமைதியின்மையும் ஏற்பட்டுக் கொண்டேதானிருக்கும்.

பிளாக்மார்க்கெட்டில் குழந்தையை வாங்கிய தம்பதிகளை, பிறகும் இந்த வியாபாரிகள் சும்மாவிடுவதில்லை, குழந்தையைப் பாராட்டி, சீராட்டி மிக அன்போடு வளர்த்து வருங்கால் குழந்தைக்கு ஒன்றிரண்டு வயது நடந்துகொண்டிருக்கையில் இவ்வியாபாரிகள் திரும்பவும் அத் தம்பதிகளிடம் சென்று "குழந்தையின் தாயார் குழந்தையைத் திரும்பவும் கேட்கிறாள் அவள் குழந்தையை விற்றதினால் மிகவும் ஏக்கமடைந்திருக்கிறாள், ஆகையால் குழந்தையைக் கொடுத்துவிடுங்கள்" என்று கேட்பார்கள். அதற்குத் தம்பதிகள், ஏராளமான பொருள் செலவு செய்து மிகவும் கஷ்டத்தோடு இதுவரை வளர்த்து மிக அன்புபாராட்டி வரும் இக் குழந்தையை எவ்வாறு திரும்பக் கொடுக்கமுடியும்" என்று பதில் கூறுவார்கள். அதற்கு வியாபாரிகள் தரித்திரத்தால் கஷ்ட நிலையிலுள்ள இக்குழந்தையின்

தாய்க்கு ஏதாவது பொருள் கொடுத்தால், அதை அவளிடம் சேர்த்து அவளை சமாதானப் படுத்திவிடுகிறோம்'' எனக் கூறி அவர்களிடம் ஏராளமான பொருளைப் பெற்றுச் செல்வார்கள். நய வார்த்தைகளால் இவர்களிடம் பொருள் பெறுவதுமன்னியில் ''குழந்தையின் தாயார் சர்க்காருக்கு அறிவிக்கப்போவதாகவும் அதனால் உங்களுக்கு ஆபத்து நேரிடும் ஏதாவது பொருள் கொடுத்தால் அவளை சமாதானப்படுத்தலாம்'' என பயமுறுத்தியும் ஏராளமான பணத்தை அவர்களிடமிருந்து பறிப்பார்கள்.

இவ்வாறு இத் தம்பதிகளுக்கு 'பிளாக்மார்க்கெட்' வியாபாரிகளிடமிருந்து அடிக்கடி தொந்திரவு ஏற்பட்டுக்கொண்டேயிருக்கும்.

குழந்தையில்லாத தம்பதிகள் சர்க்கார் நிர்வாகத்திலுள்ள ஸ்தாபனங்கள் மூலமாக குழந்தைகளை சுவீகரிப்பதுதான் சிறந்ததே தவிர, 'பிளாக்மார்க்கெட்டில்' வாங்குவது சரியல்ல என்று குழந்தைகளை பலஆண்டுகளாக 'பிளாக்மார்க்கெட்' செய்த ஒரு அமெரிக்க மாது கூறுகிறாள்.

மேல்நாடுகள், பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும்வகையில் எவ்வளவோ முன்னேற்றங்கள் அடைந்திருந்தபோதிலும், அங்குள்ள மக்கள் பல துன்பங்களையும் அனுபவிக்கின்றனர் அத்துன்பங்களில் ஒன்றுதான் பரவச மூட்டும், தெய்வத் தன்மை பொருந்திய குழந்தைகளை உப்பு, புளி, தட்டு முட்டுச் சாமான்கள் போன்று ஒருவியாபாரச் சரக்காக ஆக்கியிருப்பது.

எது கலை?

உலகம் ஒரு பெரிய கலைப் புத்தகம். அவற்றின் பாகங்களெல்லாம் ஒவ்வொரு பக்கமாகும். அகில புவனகர்த்தாவே இப் புத்தகத்தின் ஆசிரியர். இவ்வாசிரியரை அறிவதே கலையை அறிந்ததாகும்.

பொன் அளியாததைக்
கூழ் அளித்தது !

●

சோழநாட்டிலே அம்பர் என்ற ஊரிலே சிலம்பி என்ற ஒரு தாசி இருந்தாள். செல்வச் சிறப்புடனிருந்த அவளைத் தரித்திரம் பற்றிக்கொண்டது. கம்பர் தன்மீது கவிபாடினால், திரும்பவும் செல்வத்துடன் வாழலாம் எனக் கருதித் தன்னிடமுள்ள உடைமைகள் யாவற்றையும் ஐந்நூறு பொன்னுக்கு விற்று, கம்பரிடம் கொண்டுபோய், அவர் முன்பாக வைத்து நமஸ்கரித்துத் தன்மீது கவி பாடும்படி பிரார்த்தித்தாள்.

கம்பர் எவ்வளவு பொன் இருக்கிறதென்று கேட்டார். அவள் ஐந்நூறு பொன் இருக்கிறது எனப் பதில் கூறினாள். "என் பாட்டுக்கு ஆயிரம் பொன். ஆனால், நீ ஐந்நூறு பொன்தான் கொண்டு வந்திருக்கிறாய், ஆகையினால் அரைப் பாட்டுத்தான் பாடுவேன்" எனக் கூறி, அந்த ஐந்நூறு பொன்னையும் எடுத்துக் கொண்டு,

"தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவதுஞ்சோழ மண்டலமே—"

என்ற கவியை அந்தத் தாசியின் வீட்டுச் சுவரில் எழுதினார்.

அதாவது, புண்ணிய தீர்த்தம் காவிரி தீர்த்தந்தான்; நீதி வழுவா மன்னன் சோழ மன்னன்தான் என்றும், புண்ணிய பூமி சோழ மண்டலமே என்றும் பாடினார்.

தாசியாகிய சிலம்பியைப்பற்றி, அவர் பாடிய அந்த அரைக் கவியில் ஒரு வார்த்தைகூடக் காணப்படவில்லை!

தன்னிடம் மீதமிருந்த ஐந்நூறு பொன்னையுமிழந்து, மிகவும் தரித்திர நிலைக்குள்ளானாள் சிலம்பி.

ஒருநாள் ஔவையார், மிகுந்த பசியோடும் களைப்போடும் இத் தாசியின் வீட்டிற்கு வந்து, "அம்மா, எனக்கு மிகவும் பசியாயிருக்கிறது. ஏதாவது ஆகாரம் இருந்தால் கொடு" என்று கேட்டாள்.

"தாயே, கூழ்தான் இருக்கிறது. அதை எப்படித் தங்களுக்குக் கொடுப்பது" என தாசி வருந்தினாள்.

அதற்கு ஔவையார், "பரவாயில்லை; அதையே கொடு" என்று கூறினார். தாசியும் அவ்வாறே தன்னிடமிருந்த கூழை ஔவையாருக்குக் கொடுத்தாள். ஔவையார் கூழை உண்டு தாசியின் வீட்டிலேயே சிரமபரிகாரஞ் செய்துகொண்டாள்.

பின்னர் அந்த வீட்டின் சுவரில் கம்பரால் எழுதப்பட்டிருந்த பூர்த்தியாகாத கவியைக் கண்ணுற்றார். உடனே,

" — பெண்ணவாள்
அம்பொற் சிலம்பி யரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு"

என அக்கவியைப் பூர்த்தி செய்தார்.

அவ்வாறே காலில் பொற்சிலம்பு அணியத்தகுந்த அம்சத்தோடு மிகுந்த செல்வம் பெற்று சுபிட்சமாக வாழ்ந்தாள் சிலம்பி.

அறியார்க்கு அறிவித்த வழி

டாக்டர் வெலிங்டன் கூ சீன ராஜ்யத்தின் தூதராகத் தொடர்ந்து பல வருஷங்கள் வாஷிங்டனில் இருந்தார். டாக்டர் கூ சிறந்த அறிவாளி; ராஜதந்திரி; பிரபல எழுத்தாளர்; ஆங்கிலத்தில் கனிவான சொற்பொழிவாளர். அக்காலத்தில் இவருடைய புகழ் அமெரிக்காவெங்கும் பரவியிருந்தது.

வாஷிங்டனில் ராஜப்பிரதிநிதிகளின் மகாநாடு ஒன்று நடைபெற்றது. அம் மகாநாட்டு நிகழ்ச்சிகளில் டாக்டர் கூவின் சொற்பொழிவு முக்கியமானதா யிருந்தது.

டாக்டர் கூ தாமதித்துச் சென்றதால், தலைவர்களுடன் முன்வரிசையில் அமர முடியாமல் பின்வரிசையில் அமர்ந்திருந்தார்.

இவருக்குப் பக்கத்தில் பிரிட்டிஷ் தூதர் காரியாலயத்தில் புதிதாக உத்தியோகம் பெற்ற ஆங்கிலேய வாலிபர் ஒருவர் அமர்ந்திருந்தார். இதற்கு முன் இந்த வாலிபர் டாக்டர் கூவைப் பார்த்ததுமில்லை; கேட்டதுமில்லை.

இந்த வாலிபர், "இவர் சீனக்காரர்போல் தோன்றுகிறரே, இவரால் ஆங்கிலப் பிரசங்கத்தை எவ்விதம் புரிந்துகொள்ள முடியும்" என நினைத்து, டாக்டர் கூவைப் பார்த்து, "உங்களுக்கு ஆங்கில பாஷையைப் புரிந்துகொள்ள முடியுமா?" என, சீனர்கள் ஆங்கிலம் பேசும் தொனியிலே கேட்டார். இதைக் கேட்ட டாக்டர் கூவுக்கு மிகவும் வெறுப்பு ஏற்பட்டபோதிலும் அதை வெளிக்காட்டாமல், ஆங்கிலத்தைப் புரிந்துகொள்ள முடியும் என்பதைத் தன் தலையை மட்டும் அசைத்துத் தெரிவித்தார்.

பின்னர் நிகழ்ச்சிக் குறிப்பில் கண்டபடி டாக்டர் கூ சொற்பொழிவாற்றும் முறை வரவும், அவர் மேடைக்குச் சென்று

அழகான ஆங்கிலத்தில் சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்ததுபோலப் பேசினர்.

இவருடைய பிரசங்கம், பேசிய மற்ற எல்லோரைக் காட்டிலும் சிறப்பாகவும் உயர்வாகவுமிருந்ததால் சபையோர் மிகுந்த ஆரவாரஞ் செய்து கைதட்டித் தங்கள் பாராட்டைத் தெரிவித்தனர்.

டாக்டர் கூ தன் ஆசனத்திற்கு வந்ததும் தன்னைக் கேலி செய்த அதிகாரியிடம், அவர் தன்னிடம் பேசிய தொனியிலேயே, " என் பிரசங்கம் உங்களுக்குப் புரிந்ததா ?" என்று கேட்டார். வாலிபரின் முகம் வாட்டமுற்றது என்று கூறவும் வேண்டுமா ?

பெருக்கவேண்டும்

ஒரு எழுத்தாளர் தன் அறையில் உட்கார்ந்து கொண்டு கட்டுரை எழுதிக்கொண்டிருந்தார். எழுத்தாளர் அறை எப்போதும் எப்படியிருக்கு மென்பது யாவரும் அறிந்ததே. எழுத்தாளர் கட்டுரை எழுதிக் கொணடிருக்கும் போது அவரது மனைவி துடைப்பத்தோடு அறையைப் பெருக்கவந்தாள்.

கட்டுரையிலீடுபட்டிருந்த எழுத்தாளர் " நாட்டில் செல்வத்தை பெருக்கவேண்டும், சுகாதாரத்தைப் பெருக்கவேண்டும் தொழில்களைப் பெருக்கவேண்டும் " என்று உற்சாகத்தோடு மனைவிக்குப் படித்துக் காண்பித்தார். இதைக்கேட்ட மனைவி, " முதலில் நீங்கள் இருக்கும் இடத்தைப் பெருக்கவேண்டும் " என்றாள்.

நவீன சாதனங்களில்லாத ஆதி காலத்தில் தங்கள் புத்தி நுட்பத்தாலேயே உண்மையைக் கண்டறிந்து நியாயம் வழங்கின கதை.

கூடைகளால் "குட்டு" வெளியாயிற்று

வெகுகாலத்திற்கு முன்பு தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் மிகவும் தெய்வபக்தியுடைய ஒருவர் வசித்து வந்தார்.

அவரும் அவருடைய மனைவியும் காசிக்குச்செல்ல விரும்பினார்கள். அந்தக் காலத்தில் நீண்ட தூர இடங்களுக்கு பிரயாண வசதி கிடையாது. பிரயாணம் அதிக நாட்கள் பிடிக்கும திருடர் பயமும் உண்டு. ஆகையினால் காசி யாத்திரைக்குக் கிளம்பின இவர்கள் தங்கள் விலை உயர்ந்த பொன் ஆபரணங்களையெல்லாம் கழற்றி உயரமான ஒரு கூடையின் அடிபாகத்தில் துணிகளாற் சுற்றி நகைகளை பத்திரமாய் வைத்து அதன் மீது வரட்டிகளைப் பரப்பி அதை மூடி அக் கூடையை பக்கத்துவீட்டாரிடம் கொடுத்தார்கள். தாங்கள் காசிக்குச் சென்று திரும்பி வரும் வரை அதை பத்திரமாய் வைத்திருக்க வேண்டுமென்றும் கூறிச் சென்றனர்.

பக்கத்து வீட்டாரும் கூடையைவாங்கிக்கொண்டு அதைப் பத்திரமாய் வைத்துக் கொள்வதாய் வாக்களித்தனர்.

மழைக் காலம் வந்தது. அடை மழை 'சோ' வென்று தினமும் பெய்துகொண்டேயிருந்தது.

கூடையை வாங்கிக் கொண்ட பக்கத்து வீட்டுக்காரி அடுப்பு மூட்ட விறகு இல்லாமல் திண்டாடினுள். வீட்டுக்காரர் 'காசிக்குச் சென்றவர்கள் கொடுத்துப் போன வரட்டியை உபயோகித்துக்கொள்' என்று சொன்னர்.

அதற்கு மனைவி, ஐயோ, அது அடைக்கலப்பொருள். அதைநாம் உபயோகப்படுத்துவது அநீதியாகும்' என்று தெரிவித்தாள்.

அதற்குக்கணவன், சாதாரண வறட்டிதானே, அதை எடுத்து உபயோகிப்பதால் என்ன தவறு? வெயில் காலம் வந்தவுடன் வறட்டியைத் தட்டிவைத்துவிட்டாற் போயிற்று என்று சமாதானம் கூறினர்.

பிறகு அவள் கொஞ்சம் கொஞ்சமாக அந்த வறட்டிகளை எடுத்து உபயோகித்துக்கொண்டே வந்தாள். கடைசியாக கூடையின் அடிப்பாகத்திலிருந்த பொன் ஆபரணங்களை பார்த்து கணவனிடம் தெரிவித்தாள். அவர்கள் குடும்பச் செலவிற்கு மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தசமயம் அது.

வறட்டியை எடுப்பது அநீதி எனக் கருதியவர்கள் பொன்னுபரணங்களைத் தாராளமாய் எடுத்து அவையனைத்தையும் கொஞ்சம் கொஞ்சமாக விற்றுக் குடும்பச் செலவுகளை நடத்தி வந்தனர். நகைகள் யாவும் தீர்ந்தவுடன் கூடையை முன் போல் தோற்றமளிக்கும்படி வறட்டியை போட்டு மூடி வைத்தனர்.

காசிக்குச் சென்ற தம்பதிகள் திரும்பிவந்து இந்தக் கூடையைவாங்கிக்கொண்டு வந்து வீட்டில்பார்க்கையில் கூடையில் நகைகளைக் காணுது திடுக்கிட்டனர்,

ஒப்படைத்திருந்த பக்கத்து வீட்டாரிடம் 'நாங்கள் கூடையில் வைத்த நகைகளைக் காணும். எங்கள் நகைகளுக்கு என்ன வழி சொல்கிறீர்கள்?' என்று கேட்டார்கள்.

அதற்கு அவர்கள் 'நீங்கள் எவ்வாறு கூடையை எங்களிடம் ஒப்படைத்தீர்களோ அவ்வாறே திருப்பித் கொடுத்துவிட்டோம். கூடையில் என்ன வைத்திருந்தீர்கள் என்று எங்களுக்குத் தெரியாது. ஆகையால் நகைகளுக்கு நாங்கள் பொறுப்பாளிகளல்ல''

எனப் பதில் அளித்துவிட்டனர்.

நகைகளையிழந்த தம்பதிகள் கிராம பஞ்சாயத்தாரிடம் தெரிவித்தனர்.

பஞ்சாயத்தார்கள் வழக்கை விசாரிப்பதற்கு இருதரப்பினரையும் பஞ்சாயத்து கூடுமிடத்தில் ஆஜராகச் சொன்னார்கள்.

அவ்வாறே இருதரப்பினரும் பஞ்சாயத்தார் முன்பாக ஆஜரானார்கள். பிராது கொடுத்த தம்பதிகளை முதலில் விசாரித்தார்கள்.

அவர்கள் தாங்கள்கூடையில் வைத்துப்போன நகைகளைப் பற்றியும் அவை காணாததால் ஏற்பட்ட நஷ்டத்தையும் கூறினார்கள்.

பஞ்சாயத்தார் கூடையை வாங்கி வைத்திருந்தவர்களை அழைத்து 'மிகவும் கஷ்டமானநிலையில் யாருடைய பொருள் கையிலிருந்தாலும் அதை செலவு செய்துவிடுவது மனிதர்களின் இயல்புதான். ஆனால் பொருளைக் கொடுத்துச் சென்றவர் வந்து கேட்கும்போது நடந்த உண்மைகளை கூறி சௌகரியமான தவணையைக் கேட்டு, அத் தவணையில் அப்பொருளைக் கொடுப்பதுதான் நியாயம். அது போலவே நீங்களும் உங்கள் குடும்பச் செலவுக்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில் உங்களிடத்தில் ஒப்படைத்துச் சென்ற இந்த நகைகளை விற்றுச் செலவு செய்துவிட்டீர்கள். இது ஒரு பெரிய குற்றமில்லை. ஆகையினால் நகைகளின் சொந்தக்காரர்களுக்கு நகையின்விலை மதிப்பை நீங்கள் கொடுத்துவிட வேண்டும். உங்களுக்கு எப்போது சௌகரியமோ, அப்போது கொடுக்கலாம் அதற்கு வாய்தா தருகிறோம்' என்று கூறினர்.

அதற்கு கூடையைவாங்கி வைத்த தம்பதிகள் "அவர்கள் கூடையை எவவாறு எங்களிடம் ஒப்படைத்தார்களோ அதேபோல் அவர்களிடம் திருப்பிக்கொடுத்து விட்டோம். நாங்கள் கூடையைத் திறந்து பார்க்கவுமில்லை. அதற்குள் என்ன இருந்ததென்பதும் எங்களுக்குத் தெரியாது. இவ்விதம் அந்நகைகளைக் கையாடல் செய்தோமென்றும், அதற்காக அதன் விலை மதிப்பை நாங்கள் கொடுத்து விடவேண்டுமென்றும் நீங்கள் கூறுவது நியாயமல்ல" என்று தெரிவித்தனர்.

நகைகளைக் கையாட வில்லை, எனக்கூறும் தம் பதிகளை நகைகளைக் கையாட வில்லை, என்று பிரமாணம் செய்துகொடுக்கச் சொன்னார்கள் பஞ்சாயத்தார்.

அதாவது முன்கூட்டியே அங்கு சித்தப்படுத்தி வைத்திருந்த சிறுகுதிர் போன்ற தோற்றமுடைய உயரமான இரண்டு கூடைகளைக் காண்பித்தார்கள். அக் கூடையின் மேல்பாகத்தில் வேப்பிலையைப் பரப்பி அதற்கு மேல் முடியும் வைத்திருந்தது. பஞ்சாயத்தார் அந்தத் தம்பதிகளைப் பார்த்து "இவ்விரண்டு கூடைகளிலும் இரண்டு பூதங்கள் அடைத்துவைக்கப்பட்டிருக்கின்றன. பொய் சொல்பவர்களையும் பொய்ச் சத்தியஞ் செய்பவர்களையும் இப்பூதங்கள் கண்டிப்பாய் அழித்துவிடும். இவ்விரண்டு கூடைகளையும் நீங்கள் இருவரும் தலையில் தூக்கிக் கொண்டு ஒரு பர்லாங்கு தூரத்திலிருக்கும் அம்மன் கோயிலுக்குச் சென்று அம்மன் சந்நிதியை மும்முறை பிரதக்ஷணம்செய்துமீண்டும் இக் கூட்டத்தின் மத்தியில் கூடையைக் கொண்டுவந்திறக்கவேண்டும். நீங்கள் நகைகளைக் கையாடவில்லையானல் உங்களுக்கு ஒருதீங்கும் நேராது. ஆனல் நீங்கள் நகைகளை அபகரித்திருப்பீர்களானல் இக் கூடைகளிலுள்ள பூதங்கள் நிச்சயமாய் உங்களை அழித்தேவிடும். நாங்கள் சொல்வதை யெல்லாம் நீங்கள் நன்கு கவனித்துக் கொண்டீர்களா? இனி, உங்கள் உத்தேசம் என்னவென்பதைக் கூறுங்கள்'' என தெரிவித்தார்கள். அதற்கு நகைகளை அபகரித்தவர் நகைகளைப் பற்றி எங்களுக்கு ஒன்றும் தெரியாது. நகைகளை மோசம் செய்தால் தானே பூதங்களுக்கும் தேவதைகளுக்கும் பயப்பட வேண்டும்? எங்கள்மனத்தில் களங்கமில்லை ஆகையினல் நாங்கள் எந்தச்சோதனைக்கும் தயார்'' என்று கூறினர். "அப்படியானல் நாங்கள் கூறியபடி கூடையை எடுத்துச் சென்று அம்மன் கோயிலை மும்முறை பிரதக்ஷணம் செய்து இங்கே கொண்டுவந்து சேருங்கள்'' என்றனர் பஞ்சாயத்தார்.

தம்பதிகள் அவ்வாறே கோயிலுக்குக் கூடைகளைத் தூக்கிச் சென்றனர். கோயிலருகே வந்ததும் தாங்கள் பேசுவதை தூரத்திலிருக்கும் பஞ்சாயத்தார் கேடக

முடியாது என்ற தைரியத்தினால் மனைவி கணவனை நோக்கி "வேண்டுமென்றே நமக்கு அழிவைத் தேடிக் கொண்டீர்களே, நமது கஷ்டமான நிலையில் அந்த நகைகளை விற்று நாம் செலவு செய்துவிட்டோம்" என்று கூறுவது குற்றமாகாது என பஞ்சாயத்தாரே ஒப்புக்கொள்கிருர்களே. நாம் உண்மையைக் கூறிவிட்டால் அந்த நகைகளின் விலைமதிப்பை அல்லது அந்த நகைகளை என்ன விலைக்கு விற்ருேமோ அத் தொகையை நமக்கு சௌகரியமான, நாம் விரும்பும் தவணையில் நம்மிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கும் பஞ்சாயத்தார் சம்மதிக்கிருர்களே, அவ்விதமிருக்க, உண்மையைக்கூறி நாம் நேர்மையுடன் நடந்துகொள்ளாமல் நமக்கு நாமே அழிவைத் தேடிக்கொள்ளலாமா? உங்கள் செய்கையால் நமக்கு அழிவுநேரிடுமென்று பயமாக இருக்கிறது நாம் இறந்துபோனல் நமது குழந்தைகளை யார் காப்பாற்றுவார்கள்? இப்போதும் ஒன்றும் கெட்டுப் போகவில்லை. இனிமேலாவது உண்மையைக் கூறி ஆபத்தினின்றும் தப்பித்துக் கொள்ளலாம்" என்று வருந்தினள்.

அதற்குக் கணவன் அசட்டுத் தைரியத்துடன் "பூதமாவது, பிசாசாவது, மனிதனை அழிக்கவாவது நமக்கு ஒன்றும் நேராது, நீ தைரியமாயிரு, மற்றவைகளை நான் சமாளித்துக் கொள்கிறேன்" என அவளுக்குத் தைரியமூட்டி கோயிலை மும்முறைப் பிரதக்ஷணம் செய்து திரும்பவும் பஞ்சாயத்தார் கூடியிருந்த இடத்திற்குவந்து கூடையை இறக்கினர்கள். பிறகு பஞ்சாயத்தார் இவர்களை நோக்கி, "கூடைகளைத் திறக்கப்போகிருேம், கூடைகளிலிருந்து பூதங்கள் உதயமாகப் போகின்றன, பொய்கூறினல் அவை உங்களை அழித்துவிடும் இப்போதாவது உண்மையைக் கூறி விடுங்கள்" எனத் தெரிவித்தனர்.

"நாங்கள் பொய்கூறினல் தானே பயப்படவேண்டும். நீங்கள் கூடையைத் திறக்கலாம் என்று பதில்கூறினர்கள். பின்பு கூடைகள் திறக்கப்பட்டன.

என்ன ஆச்சரியம்! பன்னிரண்டு வயதுடைய இரு சிறுவர்கள் இருகூடையி

னின்றும் வெளிவந்தார்கள், கூடையைத் தலையில் வைத்துக்கொண்டு இவர்கள் கோயிலைத் தனியாக பிரதக்ஷணமாய் வரும் போது இவர்கள் தனியாகப் பேசியதையெல்லாம் அவர்களின் தலைகளின் மீது இருந்து கொண்டேகேட்டுக் கொண்டிருந்த இரு சிறுவர்களைவிட இவர்கள் நகைகளை அபகரித்துக் கொண்டார்களென்பதற்கு வேறு சாட்சிகள் வேண்டுமா?

பிறகு தம்பதிகள் இருவரும் பஞ்சாயத்தாரிடம் உண்மையைக்கூறி நகைகளுக்கு ஈடுசெய்ய ஒப்புக் கொண்டனர்.

தற்காலத்தில் துப்புகளை அறிய பல்வேறு சாதனங்களிருக்கின்றன. இத்தகைய சாதனங்களேயில்லாத ஆதி காலத்தில் நம் நாட்டுப்பெரியோர்கள் தங்கள் புத்திநுட்பத்தினால் எத்தகைய மர்ம விஷயங்களையும் வெளியாக்கி குற்றவாளிகளுக்குத் தகுந்த தண்டனையளித்த அவர்களது அறிவுத்திறமையை நாம் மிகவும் போற்றவேண்டும்.

மூன்றின் முக்கியத்துவம்

குணம் மூன்று:

தாமஸம், ராஜஸம், சாத்வீகம்.

தாமஸம்—தீய எண்ணங்களே குடிகொண்டிருப்பது, நன்மை செய்தார்க்கும் தீமை செய்வது.

ராஜஸம்—நன்மை புரிந்தோர்க்கு நன்மையும், தீமை இழைத்தோர்க்குத் தீமையும் செய்வது.

சாத்வீகம்—இது தெய்வத் தன்மை பொருந்திய மகா உத்தம குணம். இக்குணம், எல்லாம் நன்மையே செய்வது. கேடு விளைத்தார்க்கும் நன்மை பயப்பது.

கரணம் மூன்று:

மனம், வாக்கு, செயல்.

இதைத்தான் திரிகரண சுத்தியாய் ஒருவருக்கும் தீங்கிழைக்கக் கூடாது எனக் கூறுவது. திரிகரண சுத்தி என்பது தீங்கை மனசாலும் நினைக்கக் கூடாது, பேசவும் கூடாது (வாக்கு) தீங்கு செய்யவும் கூடாது (செயல்).

மலம் மூன்று:

ஆணவம், மாயை, காமியம்.

ஆணவம், தான் என்ற அகங்காரம் மாயை யாவற்றிலும் பிரமிப்பது. காமியம்—யாவற்றிலும் சுயநலம் கருதுவது.

முத்தொழில் சிருஷ்டி, திதி, சம்ஹாரம். படைத்துக் காத்து அழித்தலாகிய தெய்வீகச் செயல்.

முமுக்ஷித்வம் மூன்று:

அறிவு, அனுபவம், வசனம்.

சத்விஷயங்களை அறிவது அறிந்தவற்றை அனுபவசாத்தியமாய் உணர்வது. அறிந்ததும், அனுபவித்ததுமாகிய தெளிவுற்ற விஷயங்களை வசனிப்பது.

பரிபக்குவம் மூன்று:

கேட்டல், சிந்தித்தல், தெளிதல்

சத்விஷயங்களைக் குருமுகாந்திரமாய்க் கேட்பது; குரு முகாந்திரமாய்க் கேட்ட விஷயங்களைத் தனியாக இருந்து சிந்திப்பது.

தெளிவான அறிவுபெறுவது.

தெய்வீகம் மூன்று:

சர்வ பரிபூரணம், சர்வ வியாபகம் சர்வ சக்தி.

சர்வ பரிபூரணர்—எங்கும் நிறைந்தவர்.

சர்வ வியாபகர்— அளவிடப் படாதவர்.

சர்வ சக்தி—சர்வ வல்லமை கொண்டவர்.

ஆத்மிகம் மூன்று:

த்வைதம், விசிஷ்டாத்வைதம் அத்வைதம்.

த்வைதம் சரியை, கிரியையாகிய விக்கிரக ஆராதனை **விசிஷ்டாத்வைதம்** சொருபத்தைத் தன்னுள் தியானிப்பது. **அத்வைதம்** வாக்கற்று, மனம் அற்று நண்ணுதலும் அற்று, ஏகப் பரப்பிரம்மத்தோடு ஒன்றாக இயங்கும் நிலை.

———

[ஒரு சிறுவர் கதை]

சூழ்ச்சி பலித்தது

●

ஒரு கிராமத்தில் ஒரு மூடன் தன் மனைவியுடன் வசித்துவந்தான். அவனிடம் ஒரு கழுதை யிருந்தது. அதை சுமைகள் சுமப்பதற்காக உபயோகித்து வந்தான். மூடனும் அவனுடைய மனைவியும் தெய்வபக்தி யுடையவர்கள். ஒரு நாள் மூடன் சந்தையில் தன்வேலையை முடித்து விட்டுக் கழுதையின் கழுத்திலே கட்டிய கயிற்றை பிடித்துக் கொண்டு வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தான். மூடன் முன்னேசெல்ல கழுதை அவன் பின் தொடர்ந்து வந்துகொண்டிருந்தது.

அந்த வழியே சென்ற இரண்டு திருடர்கள் இதைக் கவனித்தார்கள். எப்படியாவது கழுதையை மூடனுக்குத் தெரியாமல் திருடிச்செல்ல வேண்டுமென்று தீர்மானித்தார்கள். இருவரும் சிறிதுநேரம் யோசனை செய்தபின் ஒருவன் மெதுவாக கழுதையின் கழுத்திலே மாட்டியிருந்த கயிற்றை அதன் கழுத்தினின்றும் எடுத்து தன் கழுத்தில் மாட்டிக்கொண்டு மூடனைப் பின்தொடர்ந்து சென்றான். மற்றவன் கழுதையைப் பின்புறமாக ஓட்டிக்கொண்டு சென்றுவிட்டான். இவ்வளவும் மூடனுக்குத் தெரியாமல் ஒரு நிமிஷ நேரத்தில் நடந்துவிட்டது.

சிறிது தூரம் சென்ற மூடன் யதேச்சையாக திரும்பிப் பார்த்தான். கழுதை யிருக்கவேண்டிய இடத்தில் மனித

ஞெருவன் இருப்பதைக் கண்டு பிரமித்துப் போய்விட்டான். கழுதை எப்படி திடீரென்று மனிதனுக மாறிவிட்டது என்பது அவனுக்கு விளங்கவில்லை.

மூடன் திருடனைப் பார்த்து 'கழுதையாயிருந்த நீ எப்படி யப்பா மனிதனுக மாறிவிட்டாய்' என்று கேட்டான்.

அதற்குத் திருடன், 'ஐயா அதை ஏன் கேட்கிறீர்கள். நான் முன்பு மனிதனுகதான் இருந்தேன். என தாயார் கொஞ்சம் தெய்வபக்தியுடையவள். ஒரு நாள் நான் அதிகப்படியாக குடித்துவிட்டு வீட்டில் கும்மாளமடித்தேன். என் தாயார் என்னைக் கண்டபடி திட்டினுள். எனக்கு அப்போது வந்த கோபத்தில் என் தாயாரை நன்ருக அடித்துவிட்டேன். அடிதாங்கமுடியாத என் தாயார் முன்பின் யோசியாமல் என்னைக் கழுதையாக மாறும்படி சபித்துவிட்டாள். கடவுள் உடனே என் தாயாரின் கட்டளைப்படி என்னைக் கழுதையாக மாற்றிவிட்டார். அன்று முதல் இன்று வரை உங்களிடம் கழுதையாக இருந்துவந்தேன், என்மேல் இரக்கங்கொண்டு இன்று என் தாயார் என்னை மறுபடியும் மனிதனுக மாற்றிவிடும்படிக் கடவுளை வேண்டிக்கொண்டாள். கடவுளும் அவள் விருப்பப்படியே இன்று என்னை பழையபடி மனிதனுக்கிவிட்டார். வரும் வழியில்தான் நான் இந்த மாறுதலை அடைந்தேன். இதுதான் என் கதை'' என்று திருடன் மிக சாமர்த்தியமாக மூடன் நம்பும்படி கூறினுன்.

திருடன் கூறியதை நிஜமென்று நம்பிய மூடன்தான் இதுவரை அவனைக் கழுதைபோல் கொடூரமாய் நடத்தியதற்காக மன்னித்துவிடும்படி கேட்டுக்கொண்டு, அவன் கழுத்தில் மாட்டியிருந்த கயிற்றை எடுத்துவிட்டு இனிமேலாவது குடிக்காமலும் அவனுடைய தாயாரை அடிக்காமலும் நல்லவனுக நடந்துகொள்ளும்படி புத்திமதி கூறி அவனை அனுப்பினுன். திருடன் தன் யுக்தி பலித்ததைக்

கண்டு சந்தோஷமடைந்து தன் கூட்டாளியை நாடிச் சென்றான்.

வீட்டையடைந்த மூடன் நடந்த விஷயத்தைத் தன் மனைவியிடம் கூறினான். அவளும் அதை உண்மையென்று நம்பினாள். இதுவரை ஒரு மனிதனை தங்கள் அடிமையாகச் செய்து கழுதைபோல் வேலைவாங்கிக் கொண்ட பாபத்திற்காக தன் சக்திக்கு முடிந்தவரையில் தானதருமஞ் செய்தனர்.

சிலநாட்கள் சென்றன. கழுதை யில்லாததால் தன் கணவன் வேலைசெய்யாமல் வீட்டிலே வெறுமனே இருப்பதைக்கண்டு, அவனிடம் சந்தைக்குச்சென்ற வேறு ஒரு புதிய கழுதையை வாங்கும்படி வற்புறுத்தினாள். அவள் விருப்பப்படி மூடன் கழுதை வாங்க சந்தைக்குச்சென்றான். அங்கே பல கழுதைகளை பார்த்துக்கொண்டேவந்த மூடன் அப்படியே பிரமித்துப்போய்விட்டான். தன்னிடம் முன்பிருந்த கழுதை அங்கிருந்தது தான் அவன் பிரமைக்குக் காரணம்.

மந்த புத்தியுடைய மூடன் அந்த கழுதையின் காதருகில் "ஏ கெட்டகுணம் படைத்த மனிதனே, நான் உனக்கு எவ்வளவு புத்திமதி சொல்லியனுப்பினேன். நீ அதன்படி நடக்காமல் மறுபடியும் குடித்துவிட்டு உன் தாயை அடித்துவிட்டு, அவர்கள் சாபத்தால் கழுதையாக மாறிவிட்டாயே. துர்புத்தியுடைய நீ இனிமேல் மனிதனாக மாறவேமாட்டாய். கெட்டகுணம் படைத்த உன்னை நான் மறுபடியும் விலைகொடுத்து வாங்கமாட்டேன்" என்று வெறுப்பாகக் கூறிவிட்டு வேறொரு கழுதையை வாங்கிக் கொண்டு வீடுபோய்ச்சேர்ந்தான் மூடன்.

D. திருஞானம்

''மனம் குவிய ஒரு தந்திரம் பண்ணு வது'' அருமை என்பதின் உண்மை.

பாவித்தல் எளிதல்ல

வயது ஆக ஆக, முக்திக்கு வழிதேடுவதில் சிரத்தை தோன்றுவது இயற்கையின் நியதிகளில் ஒன்றுபோலிருக்கிறது!

உபமானத்திற்கு என்னையே நான் எடுத்துக்கொள்ளலாம்—எங்கும் போகவேண்டாம்!

எனது சிறுவயதிலும், யௌவனப்பிராயத்திலும் வாழ்க்கையிலுள்ள இன்பங்களிலும், வேடிக்கை விநோதங்களிலும் அடங்காத ஆசை கொண்டவள் நான். ஏதோ ரொம்ப இல்லாவிட்டாலும், நினைத்ததை முக்கால்வாசியாவது சாதித்துக்கொண்டு மகிழ்வுற்றிருக்கிறேன். வருஷங்கள் பறக்கின்றன. கிட்டத்தட்ட நாற்பதாவது வயதை எட்டிப்பிடிக்க இருக்கிறேன். சிறிது சிறிதாக என் மீது நரையும் திரையும் தோன்ற ஆரம்பித்திருக்கிறது!

எனவே சில நாட்களாக எனக்குப் பரகதி விஷயத்தில் சிரத்தை ஏற்பட்டிருக்கிறது. அதிகப்படியாக பட்டினி, பசி தாங்காத தேகம், கோயில், குளம், தீர்த்த யாத்திரை இந்த வழிகளைக் கடைப்பிடிக்கவும் திராணி கிடையாது!—இந்த வழிகளை விடுத்து கடினமான யோக தாரணையில் ஈடுபடலாமென்றாலோ அதற்கும் சாத்தியமில்லை—ஏனென்றால், உபதேச க்ரமம், குருகுலவாசம் இதெல்லாம் வேண்டாமா? அந்த அனுகூலங்கள் எனக்கில்லை. பின் வழியெது—முக்திபெற?

யோசித்துப் பார்த்தேன்—தீவிரமாக. அப்பொழுது......

காவித் துணிவேண்டா
கற்றைச் சடைவேண்டா
பாவித்தல் போதும்
பரமநிலை யெய்து தற்கே.........

என்ற பாரதியின் வாக்கு ஞாபகத்திற்கு வந்தது. ஜீவன் முக்த நிலையை அந்த க்ஷணமே அடைந்துவிட்டது போன்ற மகிழ்ச்சி ஏற்பட்டது மனசில். அப்பாடா! கஷ்டப்படாமலே பரமநிலையெய்துவதற்கு வழி கண்டுபிடித்துவிட்டேன்!

ஆகவே இனி பாவிக்க வேண்டியதைப் பற்றி சிந்திக்க வேண்டும். எதைப் பாவிப்பது. எப்படி பாவிப்பது—இதெல்லாம் யோசிக்க, பழக நிசப்தமான இடம்வேண்டும் முதலில். வேறு வேலையென்ன இருக்கிறது? நானோ தனி ஜீவன். பொழுதெல்லாம் உட்கார்ந்து 'பாவித்தல்' பழகலாம். என்னுடைய பாட்டனார் கட்டி வைத்திருக்கும் வீடோ இருக்கிறது—பிரம்மாண்டமாக கீழேதான் இரண்டு மூன்று குடி, மேல் தளம் தான் காலியாகக் கிடக்கிறதா. அங்கு முன்புற மிருந்த ஹாலில் 'கண்டானும் முண்டானுமா'க மரச் சாமான்கள் கிடந்தன. அந்த அறைதான் மனித அரவமே எட்டாத இடமாகையால் 'பாவித்தல்' பழக அதுதான் தகுதியான இடம் என்று எனக்குள் தீர்மானித்துக்கொண்டேன்.

அப்பொழுதே அவ்வேலையில் முனைந்தேன். அந்த அறையிலிருந்த எல்லாவற்றையும் எடுத்து எதிர்த் தாழ்வாரத்தில் அடைத்தேன். அறையை ஒட்டடை அடித்து, சுண்ணம்பு பூசி, தவாரமுழுவதும் அலம்பி சுத்தம் செய்து, கண்ணாடி போல ஆக்கிவிட்டேன். கூடத்திலும் அங்குமிங்குமாக மாட்டிக்கிடந்த ராமகிருஷ்ணர், விவேகானந்தர், அரவிந்தர், ராமதீர்த்தர், புத்தர் முதலிய மகான்களின் படங்களையெல்லாம் எடுத்துவந்து பளிச்சென்று துடைத்து, எதிர் சுவரில் வரிசையாக ஆணி அடித்து மாட்டினேன். அஷ்டகந்த தூபம் போட்டு கதவுகளெல்லாம் சாத்திவிட்டு வந்து நிம்மதியாக இலையெடுத்துப் போட்டுக்கொண்டு சாப்பிட்டேன்.

சாப்பாடானதும் விசுபலகையில் சாய்ந்து சிரமபரிகாரம் செய்துகொண்டே கனவு காண ஆரம்பித்தேன்!

நாளை உதயத்திலிருந்துதான் ஆரம்பம்- இன்றிரவோடு அக்ஞான கிருதமான சமஸ்த சபலங்களும் மாய்ந்துவிடவேண்டும். தினமுழுவதும் பரம நிலையின்பத்தையே ஸ்மரித்துக்கொண்டு 'பாவனை' செய்வதிலேயே பொழுது பயனுறக் கழியவேண்டும்.

உம், அதுதற்குக் காலம் வந்தால் தான் காரியம் புரிகிறது! இத்தனை நாளும் விருதாப்பொழுதாகப் போக்கிவிட்டது போல உணர்ந்து நானே என்மீது பரிதாபப் பட்டுக்கொண்டேன்!

இவ்விதமான பவ்யசிந்தையில் இரவு முழுதும் சென்றது. அருணோதயத்தின் வரவுக்காக, பரத்வாஜபக்ஷி எழுந்து குரல் கொடுத்ததும் நானும் எழுந்தேன். ராமாயணத்தில் வால்மீகி மஹரிஷி பரத்வாஜத்தின் குரல் கேட்டதும் தான் எழுந்து பிராத ஸ்நானத்திற்குச் செல்வதாகப் படித்த ஞாபகத்தைக்கொண்டு, டிரமகிலே மெய்த்தப்பாடுபடுபவர்கள் எழுந்திருக்கவேண்டிய நேரம் அதுதான் என்று நிர்த்தாரணம் செய்துகொண்டு படுத்தேன். அதன்படி எழுந்து வந்து வெளியே பார்த்தேன். சந்திராஸ்தமன மாகி கிழக்கு வெளுத்துக்கொண்டிருந்தது. காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, நீராடிவிட்டு, மனம், வாக்கு, காயமென்ற மூன்று சுத்தியுடனும் அறையின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றேன். எண்ணை திரியிட்டுத் தயாராக இருந்த தீபஸ்தம்பத்தை ஏற்றி அறையின் எதிரே பிரசன்னர்களாக திருவுருவங்களுக்கு முன்வைத்து அஞ்சலி செய்து வணங்கினேன். அதன் பிறகு முதல் நாளே சுத்தப்படுத்தி வைத்திருந்த கிருஷ்ண ஜினத்தை எடுத்து ஒரு பலகையைப்போட்டு அதன் மீது விரித்து, அதன் மீது ஒரு வெண்துகிலை மடித்துப் போட்டுக்கொண்டு உட் கார்ந்தேன்—நிமிர்ந்து நேராக!

அப்புறம் மனசை ஒரு முகப்படுத்தி பாவிக்க முயன்றேன். அசையவில்லை ஆடவில்லை. ஒரே நிமிர்வு!

நிலம் தெளிந்தது. பால்காரி வந்து அம்மா, அம்மா, என்று கத்தினாள். அவள் வந்து கத்துவதற்கு முன்பே மனம் 'அடடா, பாத்திரத்தை மாடத்திலாவது வைத்திருந்தால் ஊற்றிவைத்து விட்டுப்போவாள். பிறகு எடுத்துக்கொள்ளலாமே என்று ஒரு நாழிகை முன்பே நினைவு!

பால்காரி நாலு சத்தம் கூப்பிட்டாள். பிறகு காணோம். குடி யிருப்பவர்கள் யாராவது வாங்கி வைத்திருப்பார்கள் என்ற சமா தான புத்தி ஒருபுறம் தோன்ற, அட, வாங்காவிட்டால்தான் என்ன மோசம், ஒரு நாள் காபி சாப்பிடாமல் போனால்தான்

என்ன? தலைவலி வந்தால் வந்துவிட்டுப் போகட்டும். என்ற நிச்சய புத்தி உடனே தலைதூக்கிற்று. இடத்தைவிட்டு எழுந்திருக்கவே யில்லை.

நான்தான் 'பாவித்தல்' பழகுகிறேனே!

சூரியதரிசன மாயிற்று. இளம் வெயில் இடுக்கு வழியாக (ஜன்னல்கள் தான் அடைத்திருக்கிறதா?) மேற்புறத்துச் சுவரில் ரவுண்டு ரவுண்டாக விழுந்திருந்தது.

'பார்வதியின் பிள்ளை பாவம், உள்வாசலில் வந்து எட்டிப் பார்த்திருக்கும். தினமும் காபி கொடுத்து பழக்கப்படுத்திவிட் டோம். பச்சைக் குழந்தை பாவம் ஏமாந்து போயிருக்குமே, பால் அவள் ஊற்றிவிட்டுப்போயிருக்கிறாளோ இல்லையோ; அப்படி யில்லாவிட்டால் எதிர் வீட்டில் எருமைப் பாலாவது இருக்கும். வாங்கி குழந்தைக்குக் காபி போட்டுக்கொடுத்து விடவேண்டும். இல்லாவிட்டால் 'மாமி நேக்கு ஏன் காபி குடுக்கல்லே?' என்று அவம்மாவிடம் கேட்டுவிட்டு வசவோ, அடியோ வாங்கும். சீ! பாவம்......!

சட்டென்று பூர்வஞானம் வந்துவிட்டது. 'பாவிக்க'வென்று மனசை ஒருமுகப் படுத்தவன்றோ உட்கார்ந்தோம்; அது மறந்து போய்......அடடா! 'பாவித்தல்' வழி சுலபமல்ல என்பது மெள்ள மெள்ளப் புரிய ஆரம்பித்தது. பாரதி இதையா சுலபமாகச் சொல் லுகிறார்? பாவிப்பது என்பதை எந்த ரீதியில் பாவித்தால்?......

இந்த வழியில் யோசனை நீண்டது. மனசைப் பாவிக்கப் பழகும் வழியை முதலில் கண்டுபிடிக்கவேண்டும். என்னென் னவோ செய்யலாம்— மனசை ஒருமுகப்படுத்தி சிந்தைசெய்ய— அதைக் கட்டமுடியவில்லையே என்று கதறிய சித்தர்களின் பாடல் கள் வரிவரியாக நினைவின்முன் தோன்றின.

இருந்தும் நான் விடப்போவதில்லை. பிடிவாதமாக பாவித்தல் பழகி பரமநிலை யெய்தவே போகிறேன்.

'மனிதனுடைய மனமே அவனுடைய பந்தமோட்சங்களுக்குக் காரணம் என்பது சுருதி வாக்கியமல்லவா?

நாளை முதல் இந்த நச்சுப்பிச்சுகளுக்கெல்லாம் வழிசெய்து விட்டுவந்து உட்காரவேண்டும். அவாத்து சீதாராமனுக்கு 'காபி இனிமேல் எட்டு மணிக்குத்தான் தருவேன்! என்று சொல்லி விட் டால் கவலையில்லை.

ஆகட்டும் நாளைமுதல் இந்த விவகாரமெல்லாம் மனசில் நுழைய இடம் கொடுக்கவே கூடாது என்று தீர்மானித்துக் கொண்டு எழுந்தேன். —கு. ப. சேது அம்மாள்

பூமியைப் பயிரிடுவதற்கு பண்படுத்துபோலவே தான் நற்காரியங்களுக்கும் மனமாகிய பூமியை பண்படுத்துவதும்.

மனமும் பூமியும்

"மனமெனும் பூமி வெளிகாணத் திருத்தி'' எனமனத்தைப் பூமிக்கு ஒப்பிடுகின்றனர் ஆன்ரோர்கள். பூமியில் புல் பூண்டு, செடி, கொடிகள், மரவகைகள் ஆகிய எண்ணிறந்த தாவரங்கள் முளைத்திருப்பது போல் மனிதருடைய மனம் என்னும் பூமியில் அளவிடமுடியாத எண்ணங்களாகிய தாவரங்கள் முளைத்து மனத்தை வியாபித்திருக்கின்றன. பூமியில் மக்கட்குத் தீங்கு பயக்கும் விஷவிருக்ஷங்கள் மூளைத்திருக்கின்றன. அதுபோலவே மனமாகிய பூமியிலும் மக்கட்குக் கேடு விளைவிக்கும் தீயஎண்ணங்களாகிய நச்சு மரங்களும் மலிந்திருக்கின்றன.

பூமியில் மனித சஞ்சாரத்திற்கு இடையூருகவும் மனிதர்கள்சஞ்சாரமே செய்யமுடியாதவண்ணமாகவும் தினவை வருவிக்கும் செந்தட்டியும் காலேயே யூன்றமுடியாத நெருஞ்சிச் செடிகள் போன்ற முட்செடிகளும், புதர்களும் வளர்ந்திருக்கின்றன. அதுபோலவே மனிதருடையமனமாகிய பூமியிலும் காமக்குரோத லோக, மோக, மத மாற்சரியம் என்னும் முட்செடிகளும் புதர்களும் வளர்ந்து, அடுத்தாரை அண்டவிடாமற் செய்கிறது.

இதைத் தவிரப் பூமியில் இயற்கையாகவே பண்பட்ட விளை நிலமாகிய சதுப்பு நிலங்களுமிருக்கின்றன. இது

போன்றே மக்கட் பணி, தெய்வப் பணி ஆகிய இயற்கை யாகவே பண்பட்ட நன்மை விளைவிக்கும் மனமாகிய சதுப்பு நிலங்களுமிருக்கின்றன.

பயன் தாராத கல் கரடுகளோடு மேடு, காடாகவும் புல் புதர்களாகவும் இருக்கும், பூமியைச் சதுப்பு நிலமாகப்பண் படுத்தி விளை நிலமாகப் பயன்படுத்த முயற்சித்து வரு கின்றனர். இத்தகைய பூமியைப் பண்படுத்துவதற்குத் தீவிரப் பிரயாசையோடு சிரமங்களைப் பொருட்படுத்தாமல் இடைவிடாத முயற்சி வேண்டியதிருக்கிறது.

முதலில் காடுகளை அழித்து பாறை, கற்களையெல் லாம் உடைத்துச் சமப்படுத்தி புல் பூண்டுகள், புதர்கள் முதலியவற்றை வேரற அறுத்துத் தோண்டியபின்னரே அந்நிலத்தை உழுது பண்படுத்தவேண்டியதிருக்கிறது.

அதிலும் புல் பூண்டு எனும் களைகளாகிய வேர்களைப் பூரணமாக வெட்டியெடுத்துச் சுத்தஞ் செய்யாமல் அந் நிலத்தைப் பயிரிடஎத்தனித்தால் உழைப்புக்குத் தகுந்த வாறு பயிர்கள் பலன் தராமல் நஷ்டமும் ஏற்படும்.

இதுபோன்றே ஆணவம், மாயை, காமியம் ஆகிய மனமெனும் பூமியிலுள்ள காடுகளையும், அகங்காரமென் னும் கல் கரடுகளையும் காமக் குரோதாதிகள் என்னும் புதர் கள்போன்ற களைகளையும் வேரற எடுத்துச் சுத்தஞ்செய்து மனத்தைப் பயன் தரும் நிலமாகப் பண்படுத்தவேண்டிய திருக்கிறது.

மேற்கூறியவாறு மனமெனும் பூமியை பண்படுத்தா மல் மக்கட் பணி, தெய்வப் பணி ஆகிய பயிர்களைப் பயி ரிடஎத்தனித்தால் கண்டிப்பாகப் பூரண பலன் கிட்டாது. இப்பயிர்களை பண்படுத்தாத மனமாகிய பூமியில் பயிரிட எத்தனிப்பது 'குளிக்கச் சென்று சேற்றைப் பூசிக் கொண்ட' விபரீதத்தை ஒக்கும். "காராறும் ஆணவக்காட்

டைக் களைந்து அறக்கண்டு அகங்காரமென்னும் கல்லைப் பிளந்து நெஞ்சகமான பூமி வெளிகாணத் திருத்திமோன மாம் வித்தைப்பதித்து' எனத்தாயுமானவர்கூறியதுபோல் நற்கருமங்களாகிய பயிர்களை மனமாகிய பூமியில் வளர்ப்ப தற்கு, மனத்தைப் பண்படுத்துவதேதான் அவசியமான ஆதாரமாகும்.

கரடு முரடான நிலங்களைப் பண்படுத்த பலவித கருவி களை உபயோகிக்கவேண்டியிருக்கிறது. அதுபோன்றே நல் லொழுக்கம், நல்லோரிணக்கம்,நற்சிந்தை, அறநூற்கற்றல் முதலான கருவிகளாலேயே மனமாகியபூமியை பண்படுத்த வேண்டியதிருக்கிறது.

"மனம்போல் வாழ்க்கை என்றும்" மனமிருந்தபடி குரு விருந்து ரக்ஷிப்பார் என்றும், "மனமது செம்மையா னல் மந்திரம் ஜபிக்கவேண்டாம்" என்றும் பெரியோர் கூறுகின்றனர்.

சிறந்த தேசத் தலைவர்களும், ஆத்மீக ஞானிகளும் மனத்தை பண்படுத்துவதற்கு பூமியைப் பண்படுத்தும் சிரமங்களைக் காட்டிலும் 'அஞ்சக்ஷரம் என்னும் கோடாலி கொண்டு நெஞ்சைப் பிளந்து விஞ்சைத்திருத்திச் சதாசிவ மெனும் வித்தைப் பதித்து" எனப் பட்டிணத்தடிகள் கூறி யதுபோல் மிகுந்த சிரமங்களை யடைந்திருக்கின்றனர். மனத் தைப் பண்படுத்துவதே அவர்களின் முதற்கடமையாக இருந்திருக்கிறது.

இவ்வாருகத் தீவிரப் பிரயாசையோடு மனமாகிய பூமியைப் பண்படுத்திய பின்னர் நற்கருமமாகிய தெய்வீக வித்துக்களைவிதைத்து அதற்குஆர்வமாகியநீரைப்பாய்ச்சி நியமமாகிய உரமிட்டு அது பயிராகுமட்டும் லௌகீகமென் னும் மிருகங்கள் அழிக்காமல் வைராக்கியமென்னும் வேலி கட்டி மாயையாகிற களைகளைப்பறித்துக் கதிர்வந்து கதிர்

விளையும் மட்டும் காமக் குரோதாதிகளாகிய வன்பறவைகளால் கதிருக்கு அழிவுநேரமல்காத்து, நன்ருக விளைந்த பிறகேதான் விளைபோகம் புசித்து உய்யவேண்டியதிருக்கிறது.

''மெய்யாம் உளவைச் செய்து
விருப்பெனும வித்தை வித்து
பெய்யாம் களையை வாங்கி
பொறை யெனும் நீரைப் பாய்ச்சி
தம்மையும் நோக்கிக் கொண்டு
தகவனும் வேலியிட்டு
செம்மையுள் நிற்பாராகில்
சிவகதி விளையுமன்ரே''

எனத்தேவாரத்தில் திருநாவுக்கு அரசு கூறியது போல்.

இவ்விதமாக முன் எச்சரிக்கையோடு இப்பயிர்களை வளர்ப்பவர்களுக்கு லட்சியபதம் தாமே கிட்டுமென்பதில் சந்தேகமில்லை:

கடைச் சங்க காலத்தின் இறுதியில் நடந்த ஒருகதை.

தட்டிய கையை வெட்டு

●

தன்னுயிரைப்போல் மன்னுயிரையும் பாதுகாக்கும் மன்னன் என்று கூறுவது கொற்கையை ஆண்ட பாண்டியனுக்கே பொருந்தும்.

மக்களுக்குக் குறைகளும் தீங்குகளும் நேரக்கூடாதென்று சதா மக்களின் க்ஷேமாபிவிருத்திகளிலே கண்ணுங் கருத்துமாயிருப்பான். பிறரிடமிருந்து குடிகளின் க்ஷேமங்களை அறிவதைக் காட்டிலும் தானே நேரில் சென்று அறிய வேண்டுமென்ற ஆவலுடையவன். அதற்காக ஒவ்வொரு நாளும் நடுநிசியில் ஒரு சேவகனைப்போன்று மாறுவேடந்தரித்து கொற்கைமாநகரிலுள்ள சகல வீதிகளையும் சுற்றி நகரசோதனை செய்துமுடித்த பின்னரே திட்டிவாசல் வழியாக அரண்மனைக்குள் நுழைந்து சயனிப்பது வழக்கம்.

அவவாறே பாண்டியன் ஒருநாள் மாறு வேஷத்தில் அந்தணர்கள் வசிக்கும்வீதி வழியாக வரும்பொழுதுஒரு வீட்டில் இருவர் சம்பாஷிக்கும் சப்தம் கேட்டது.

மன்னன் அவ்வீட்டின் முன்பாக நின்று, கணவரும் மனைவியும் பேசிக்கொண்டிருந்த சம்பாஷணையை உற்றுக்கேட்டான்.

மனைவி 'தாங்கள் என்னைத் தனியே விட்டுச் செல்கிறேனென்கிறீர்களே, என்னையும், நம் வீட்டையும் கவனித்துக்கொள்ள ஆதரவாக ஒருவருமில்லையே, திருடர் பயத்திற்கு என்ன செய்வது? தாங்களும் திரும்பிவர நாளானல் நான்

சாப்பாட்டிற்கு என்ன செய்வேன்?' என்று கூறினாள்.

அதற்குக் கணவன் 'என்னடி, பேதமையாக உளறுகிறாய்? பாண்டிய மன்னன் ஆட்சியில் வாழும் நமக்கு என்னகுறைஏற்படும்? பாண்டியன் நீதி வழுவா உத்தம மன்னன் ஆயிற்றே: இதுவரை இவனது ஆட்சியில் கொலை, களவு முதலிய பஞ்ச பாதகச் செயல்கள் நடக்கவில்லையென்பது உனக்குத் தெரியாதா? மன்னன் மக்களிடம் எவ்வளவு கருணை கொண்டவன். நமதுநகரிலே எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரக் கடவுளே பாண்டியனாக நம்மை ஆளுகிறான் என்று கூறுவது மிகையாகாது. தெய்வத் தன்மையோடு அவன் நம்மை ஆட்சி புரிவதால்தான் நான் உன்னைத் தனியேவிட்டு காசிக்குச் செல்லத் துணிந்தேன். நீதி வழுவா பாண்டியன் ஆட்சியில் உனக்கு ஒரு குறையும் நேரிடாது, தைரியமாயிரு' எனக் கூறினார்.

தற்செயலாய், தன் ஆட்சியின், நீதியையும். பெருமையும் வெகுவாய்ப் புகழும்ஒரு பிரஜையின் சம்பாஷணையை கேட்டு மிகவும் பூரிப்படைந்தான் மன்னன்.

பின்னர் அரண்மனைக்குச் சென்று தம்பதிகளின் சம்பாஷணையைப்பற்றி ஆலோசிக்கலானான்.

'நாளைக்கு அந்தணர் காசிக்குச் சென்று விடுவார் அவள் கூறியதிலிருந்து, அவள் கணவன் காசிக்குச் சென்றுவிட்டால் அவள் ஆதரவற்றவளாகத் தானிருப்பாளெனத் தெரிகிறது. அந்தணரோ, பொறுப்புகளையெல்லாம் நம் தலைமீது சுமத்தி மனைவியைத் தைரியமாயிருக்கச் சொல்லியிருக்கிறார். நாளையிலிருந்து அந்தணர் காசிக்குச் சென்று திரும்பி வரும்வரை அவர் மனைவி பசியால் வருந்தாமலும் அவளுக்கு எவ்விதத் தீங்கும் நேராமலும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நம்மைச் சேர்ந்ததாயிருக்கிறது என மன்னன் தீர்மானித்து அடுத்த நாளிலிருந்து அவளுக்கு அரிசி முதலிய உணவுப் பொருள்களை அனுப்பி வைப்பது நமது கடமையென நினைத்தான்.

கணவன் ஊரில்லாத போது மனைவிக்கு அரண்மனையிலிருந்து உணவுப் பொருள்கள் போவதைப் பற்றி பிறர் தப்பபிப்பிராயங் கொள்ள நேரிடுமாகையால்

இம்மாதிரி அவளுக்கு உணவுப் பொருள்கள் அனுப்புவது தவறு என்றமுடிவுக்கு வந்தான்.

பிறகு, "இதற்கென்ன வழி, அவளுக்கு எவ்வாறு உணவுப் பொருள்களை அனுப்பலாமென்று மறுபடியும் ஆலோசித்தான்" பின் முடிவிற்குவந்தவனாய் அந்த அந்தணர் மனைவி வசிக்கும் வீதியிலுள்ள எல்லா அந்தண வீடுகளுக்கும் நாள்தோறும் உணவுப் பொருள்களை தானம்செய்து வர உத்திரவிட்டான்.

இந்த உத்தரவுப்பிரகாரம் எல்லா வீடுகளுக்கும் நாள்தோறும் தவருமல் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டபோது இந்த அந்தணரின் மனைவிக்கும் உணவுப் பொருள்கள் வந்து கொண்டிருந்தன. யாதொரு கவலையுமின்றி அந்தணர் மனைவி சௌகரியமாய் வாழ்ந்துவந்தாள். அது மட்டுமல்லாமல் அவளுக்கு திருடர்களால் ஆபத்து ஒன்றும் நேரிடாது காப்பதற்காக இரவு முழுவதும் சேவகன் உடைதரித்து வாளேந்திய கையுடன் அவள்வீட்டைக் காவல் புரிந்துவந்தான் மன்னன். இவ்வாறு வழக்கமாக ஒரு வருஷம் வரை காவல் புரிந்து வந்தான். கடைசியாக ஒரு நாள் மன்னன் அந்த வீட்டிற்கு வழக்கம் போல் காவலுக்கு வந்த சமயம் அந்த வீட்டில் மெதுவான தொனியில் ஆள் பேசுங்குரல் கேட்டது. ஒருவேளை திருடர்களாயிருக்கலாமோ என மன்னன் சந்தேகித்து அவளை உரக்கத்திலிருந்து எழுப்பி, உஷாராக இருக்கச் சொல்ல வேண்டுமென நினைத்துக் கதவைத் தட்டினன். மன்னன் கேட்டகுரல் திருடர் குரல் அல்ல, அன்றுதான் காசியிலிருந்துவந்துசேர்ந்த அந்தணரின் குரல் தான் அது.

மன்னன் கதவைத் தட்டிய சத்தத்தைக் கேட்ட அந்தணர் "யாரடி கதவைத் தட்டுகிறது? எனக்குச் சந்தேகம் ஏற்படுகிறது, உள்ளதைச் சொல்" என்று அதட்டினர்.

"இன்றுதான் அந்தணர் காசியிலிருந்து வந்திருக்கிறுர். சதிபதிகளின் சம்பாஷணையை திருடர்களின் சத்தம் என்று எண்ணி பாதுகாக்கவே தட்டினேம். நமது செய்கை களங்கமற்றவளின் வாழ்க்கைக்கு களங்கமேற்படுத்தி

அவளை வாழ்விழக்கச் செய்யும் நிலைக்குக் காரணமாகிவிட்டதே'' என வருந்தினன்.

பின் அவள் வாழ்க்கைக்குப் பங்கம் நேராமல் அந்தணரின் சந்தேகத்தைப் போக்குவதற்காக எல்லா அந்தணர்களின் வீடுகளையும் தட்டினன். உடனே 'திருடன், திருடன், என்வீட்டில் தட்டினன்' என் வீட்டில் தட்டினன்' எனயாவரும் கூடிவிட்டனர். இந்த அந்தணரும், தன் வீட்டிலும் திருடன்தான் தட்டியிருப்பான் என சந்தேக நிவர்த்தியடைந்தான்.

மறுதினம் காலை அந்தணரெல்லாம் ஒன்று திரண்டு மன்னனிடஞ்சென்று அவர்கள் வீடுகளில் திருடன் வந்து கதவைத்தட்டினன் என்று முறையிட்டனர்.

'' அதற்கு என்ன செய்ய வேண்டுமென்று மன்னன் கேட்டான். அதற்கு அந்தணர்கள் எவ்வாறேனும் திருடனைக் கண்டுபிடிக்கவேண்டும்'' என்றனர்.

'' சரி, கண்டுபிடித்தால் அத் திருடனுக்கு என்ன தண்டனை விதிக்கவேண்டும்'' என்று கேட்டான். அதற்கு அந்தணர்கள் தட்டிய கையை வெட்டி விடவேண்டும். அதுதான் அவனுக்குத் தண்டனை'' என்று கூறினர். உடனே பாண்டியன் தன் கையை இரண்டு துண்டாக வெட்டி விட்டான்.

அந்தணர்கள், உடனே, '' ஆஹா, அபசாரம், அபசாரம், இத்தகைய கொடுமைக்கு ஆளாகிவிட்டோமே'' என்று ஓலமிட்டு '' மன்னரே, ஏன் இவ்வாறு செய்தீர்கள்'' என்று கேட்டனர். அரசன் நடந்தவற்றை ஒன்றுவிடாமற் கூறிக்கொண்டு வருகையில் அவன் வெட்டுண்டு கை பொன்மயமாக வளர்ந்து விட்டது. இதனல் இந்த மன்னனுக்கு பொற்கைப் பாண்டியன் எனப் பெயர் வழங்கலாயிற்று.

VISIT
OUR
RETAIL SHOW ROOM
FOR
ALL YOUR DRESS
REQUIREMENTS

★

ALL ITEMS MANUFACTURED
FROM
SELECTED B & C MILLS FABRICS

★

OMER BROS
106-107, Moore Market,
MADRAS - 3

198747

நல்குடிப் பிறந்தாரிடமும் நல்கூர்ந்தாரிடமும் அன்பு பாராட்டும் பிரிட்டிஷ்மக்களின் மனப்பான்மை

பட்டம், பிரபுத்துவம் அன்றும்—இன்றும்

●

ஐம்பெருங் காப்பியத்தில் ஒன்றாகிய ஜீவகசிந்தாமணி என்பது அரசனிடத்தில் குடிகள் செலுத்த வேண்டிய பக்தியைப் பற்றியும் பிரபுத்துவ மகிமையைப் பற்றியும், பிரபுக்களிடம் மற்றவர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைகளைப் பற்றியும் விவரமாய் பொது மக்களுக்கு அறிவிக்கும் ஒரு அரிய நூலாகும்.

ஆதியிலிருந்தே நமது நாட்டில் லக்ஷக்கணக்கான பொருளுடையவர்களை லக்ஷப்பிரபு என்றும்,கோடிக் கணக்கான பொருள் உடையவர்களை கோடி-ஈஸ்வரன் என்றும் அழைக்கும் பழக்கத்திலிருந்து மிகுந்த தனவந்தர்களுக்கு ஈசுவரனுக்கு ஒப்பாகிய உயர் நிலையை ஆன்றோர் அளித்திருக்கின்றனரென்பது நமக்கு நன்கு புலனாகிறது. இவர்களிடம் மிகவும் பயபக்தியாக நடந்துகொள்ள வேண்டுமென்ற மனப்பான்மையும் நிலவி வந்திருக்கிறது. இக்கருத்தைத்தான்,

யாவராயினும்
நால்வரைப் பின்னிடில்
தேவரென்பது தேறும்
இவ்வையகம்
காவல் மன்னவர்
காய்வன சிந்தியார்
நாவினும் உரையார்
நவையஞ்சுவார்

என்ற ஜீவக சிந்தாமணியிலுள்ள கவி நமக்கு நன்கு உணர்த்துகிறது.

இக் கருத்தை இன்று வரை அப்படியே பின்பற்றி வரும் ஒருநாட்டினர்உலகில் இருப்பாரேயானுல்அவர்கள் ஆங்கிலேயர்கள் தான். பிரபல ஆங்கில நாடகாசிரியரானபெர்னுட்ஷா, ஆங்கிலேயர்கள், அவர்களின் வாழ்க்கையிலுள்ள ஒவ்வொரு செய்கைகளிலும் "மன்னன் நீடுழி வாழ்க" என்று வாழ்த்தி தொழில்புரிந்து வருவதாகக் கூறியுள்ளார்.

இங்கிலாந்துதேச மன்னனுக்கு ஆங்கிலேயர்களின் ஏகோபித்த அபிலாஷையோடு கூடிய பக்தியிருப்பது போலவே அங்குள்ள பிரபுக்களுக்குக்கூட மக்களால் அவர்களின் அந்தஸ்துங்குத் தகுந்த கௌரவமும் நன்மதிப்பும் அளிக்கப்பட்டு வருகிறது,

நமது நாட்டில் பிரபுக்களை, மிராசுதார். மிட்டாதார், ஜமீன்தார் பண்ணையார் என்று அழைக்கப் பட்டு வருவதுபோலவே இங்கிலாந்திலுள்ள பிரபுக்களுக்கும், டியூக் (Duke) வைக்கவுண்ட் (Viscount) ஏர்ல் (Earl) 'பாரன்' (Baron) 'லார்டு' (Lord) என்ற பட்டங்கள் வழங்கப்படுகிறது.

இந்தப் பட்டங்கள் அவரவர் ஆஸ்தியையும் அந்தஸ்தையும் அனுசரித்தே யிருந்து வருகின்றன. இப்பட்டங்கள் வாரிசுக் கிரமமாக வழங்கப் பட்டு வருகின்றன.

இந்தப் பட்டங்களின் வாரிசு ஒருவர் தனது ஆஸ்தியெல்லாம் இழந்த போதிலும், பொது மக்கள் இவர்களைக் கௌரவிக்கும் முறைகளில் தவறுவதில்லை.

ஆதிகாலத்தில், கம்பர் போன்ற பெரும் புலவர்கள் தமிழ் நாட்டிலிருந்த வள்ளல்கள் என்ற பிரபுக்களைப் பற்றி தனித்தனியாக வர்ணித்துள்ள பல நூல்கள் இருப்பதுபோல, ஆங்கில நாட்டில் அங்குள்ள சகலப் பிரபுக்களின் வரலாறுகள் அடங்கிய ஒரு புத்தகம் வருஷா வருஷம் வெளிவருகிறது.

Debrett's Peerage, Knightage and Baronetage என்ற இப் புத்தகத்தில் ஆங்கில நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரபுவின் ஊர், பெயர், ஆஸ்திதி, பூஸ்திதி ஆங்காங்குள்ள அரண்மனைகள், ஏவலாளர்களின் எண்ணிக்கை, அந்தஸ்து குடும்ப வரலாறுகள் முதலியவை விவரமாக வெளியிடப்பட்டிருக்கும்.

இப்புத்தகத்தில் மேற் கூறிய வரலாறுகளைத்தவிர பிரபுக்களின் என்றும் சிறப் புங்ரேங்கும் பல அம்சங் களும் விளக்கப்பட்டிருக் கின்றன. அதாவது ராஜாக்களுக்கு அவர்கள் மட்டும் தரித்துக்கொள்ளும் பிரத்தியேக உடைகளும் கிரீடமும் இருப்பதுபோல ஒவ்வொரு பட்டத்தைத் தாங்கியிருக்கும் ஒவ்வொரு பிரபுவிற்கும் தனித்தனி யான ரகங்களோடு கூடிய ஆடைகளைப் பற்றியும் தனித்தனியான தலையணி களைப்பற்றியும் இப் புத்த கத்தில் குறிப்பிட்டிருக்கும்.

வம்ச பரம்பரையாய்ப் பல நூற்றுண்டுகளாய்ப் பிரபுக் களாக இருப்பவர்களை பற்றியும் சமீபகாலத்தில் பிரபுக்களாயிருப்பவர்களைப் பற்றியும் இப் புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

இவர்கள் வரலாறுகளில் ஒரு விசேஷ அம்சம் என்ன வென்றல், இப்பிரபுக்களின் ஒவ்வொரு இனத்திற்கும் உள்ள ஒவ்வொரு புனித வசனமேயாகும். உதாரண மாக ஒரு பிரபுவின் வம்சத் திற்கு "வாளின் வெற்றி இன்பம் அளிக்கும்" என் றும், இன்னெரு பிரபுவின் வம்சத்திற்கு "மேன்மையை விரும்புகிறேன்" என்றும் மற்ெருரு பிரபுவின் வம்சத் திற்கு "தெய்வசித்தம் என் சித்தம்" என்றும் இன் ெனுரு பிரபு வம்சத்திற்கு "நான் உயிரோடிருக்கும் வரை சேவைசெய்வேன்" என்றும் இவ்வாறெல்லாம் மேற்கூறிய புனித வசனங் களை தங்கள் பெயர்களுக்கு முன்ஞல் கௌரவமாக வழங்கிக்கொள்வார்கள்.

இவ்வாருன ஆர்ப்பாட்ட ஆடம்பர படாடோப டாம் பீக அம்சங்களையெல்லாம் பல தலைமுறைகளாக கௌரவம் கொண்டாடி வந் தவர்களில்அநேகர் இப்பொ ழுது பொருளிழந்து நிர்க் கதிக்காளாகிவிட்டனர்.

பிரிட்டிஷ் சர்க்காரின் மரணவரிச் சட்டப்பிரகாரம் ஒரு பிரபு மரணமடைந்தால் அவர்சொத்துக்களின் விலை மதிப்பின் சரிபாதி வரையி லும் சர்க்காரைச் சேர்ந்து விடுகிறது. இம்மாதிரி வரி யால் அநேக பிரபுக்களின் குடும்பங்கள் க்ஷீணித்துவிட் டன. இன்னுஞ் சில பிரபுக் களின் தற்போதுள்ள வாரி சார் தங்கள் குடும்பச் சொத் துக்களுக்கு, முனிசிபாலிட் டிக்கும், சர்க்காருக்கும்

செலுத்தவேண்டிய வரிகள் கூட கட்டமுடியாமல் ஜீவனத்திற்காகவே வேறு தொழில்களை நாடிச்செல்கின்றனர்.

ஒருபிரபுக் குடும்பத்தைச் சேர்ந்த ஸ்திரீ ஒரு ஹோட்டலில் பணிஆளாக வேலைக்கமர்ந்திருக்கிருளாம்.

தற்போதுள்ள சிலபிரபுக்களின் வம்சத்தார் அவர்களின் பரம்பரையான அரண்மனைகளையும், மற்றவசதிகளையும், வரிசெலுத்த முடியாத நிலையில் விற்றுவிடத் தயாராயிருக்கின்றனர்.

அவற்றைப் பிறர் வாங்கி அழித்துவிடாதபடி தேசீய டிரஸ்டு' (National Trust) என்ற ஒரு இலாக்கா ஏற்படுத்தி அவ்விலாக்காவின் மூலம் நிர்க்கதியாகும் பிரபுக்களிடமிருந்து விலைக்கு வாங்கிக்கொள்கின்றனர்.

அலங்காரச் சாமான்களோடும் அந்தந்த காலத்தின் நாகரிகரீதியில் அமைந்திருந்த 'பர்னிச்சர்களோடும் அரண்மனைகளை விலைக்கு வாங்குகின்றனர்.

ஒவ்வொரு நூற்ருண்டிலும் நாகரிகமாக விளங்கி வந்த பொருள்களோடு கூடிய அவ்வரண்மனைகளை தற்காலத்தில் உள்ளோர்கள் கண்டுகளிக்கும் ஒரு மியூசியமாக வைத்திருக்கின்றனர்.

தற்போதுள்ள மற்றுஞ் சில நிர்க்கதியான நிலையிலுள்ள பிரபுக்குடும்பத்தார் தங்களின் முன்னோர்களால் நிர்மாணிக்கப்பட்டு வம்ச பரம்பரையில் அனுபவித்து வரும் அழகான அரண்மனையைத் தங்களின் கௌரவ டாம்பீக செலவினங்களுக்கும் சர்க்கார் வரி செலுத்துவதற்கும் விற்க மனமற்று; அவ்வரண்மனையிலுள்ள ஜங்கமப்பொருள்களைமட்டும் விலைக்கு விற்றுவிடுவார்கள். அரண்மனை முழுவதும் பழகுவதற்கு வசதியில்லாமல் போய்விடுவதனுல் அவ்வரண்மனையில் ஒரு சிறு பகுதியில் மட்டும் வாழ்ந்து வருவார்கள்.

பழகாத அவ்வரண்மனையின் இதர இடங்கள் பாழடைந்து போய்விட்டது,

தான் வசிக்கும் அரண்மனையை பழுதுபார்த்து செப்பனிட்டு வசதியோடு வைத்துக்கொள்ளும் தகுதியை இவர்கள் இழந்துவிட்டார்கள்.

தற்போதுள்ள இன்னுஞ் சில பிரபுக்களின் வாரிசுகள்

பிரபுக்கள் என்று காண்பிக்கும் பட்டங்களை வேண்டாம் என்று உதறித்தள்ளி, பிரபு வல்லாத சாதாரண மனிதர்களாகவே வாழ்க்கை நடத்துகிறார்கள். ஏனென்றால் பட்டம் பதவியெல்லாம் வைத்துக் கொண்டிருப்பதற்கு வரிசெலுத்தவேண்டியிருக்கிறது. இவர்கள், சாப்பாட்டிற்கே சிரமப்பட்டு கொண்டிருக்கும்போது வரி எவ்வாறு செலுத்தமுடியும்?

பொதுஜன சபை, பிரபுக்கள் ஆகிய இரண்டு அம்சங்களையுடையது பிரிட்டிஷ் பாராளும் மன்றம்.

இதில் ஒரு சட்டத்தைக் கொண்டுவரும் அதிகாரம் பொதுஜன சபைக்குத்தான் உண்டு. பொதுஜன சபையிலுள்ள அங்கத்தினர்கள் யாவரும் பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

பிரபுக்கள் சபையிலுள்ள அங்கத்தினர்கள் யாவரும் பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கடாமல் 'பிரபு' என்ற பிறப்புரிமையால் அங்கத்தினராயிருக்கின்றனர். ஒவ்வொரு பிரபுவின் வாரிசும் மேஜரானதும் பார்லிமெண்டின் பிரபுக்கள் சபைக்கு அங்கத்தினராகிறார்.

இவர்கள் பொதுஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படாததால் சட்டத்தை பிறப்பிக்க அதிகாரமும் இதர முக்கியமான நிர்வாகப் பொறுப்புகளும் இவர்களுக்குக் கிடையாது.

ஆகையினால்பார்லிமெண்டில் இந்தப் பிரபுக்கள் சபை இருக்கவேண்டிய அவசியமில்லையென அபிப்பிராயம் நிலவிவருகிறது.

ஆனால் புரபுக்களைப்பற்றி ஜனங்களுக்குச் சிறிதேனும் வெறுப்புக்கிடையாது, வருஷாவருஷம் வெளிவரும் 'பிரபுக்கள் டைரக்டரி'யைப் பொது மக்கள் போற்றுகின்னரென்பதிலிருந்து பிரபுக்களை வழக்கம்போல் கௌரவிப்பார்களென்று புலப்படுகிறது.

கனவு கண்டு கண் துயின்ற கல் அணையின் மகத்துவம்.

கல்லுக்கு முத்தமிட்டால் சொல்லுக்கு வன்மை உண்டு

●

நமது நாட்டில் புனித மென்றும் புண்ணியமென்றும், தெய்வீகமென்றும் அனுசரிக்கப்பட்டுவரும் முறைகள் பலதரப்பட்டதாக இருக்கின்றன.

சிவாலயத்திற்குச் சென்றால் வீபூதி தருகிறார்கள். விஷ்ணு ஆலயத்திற்குச் சென்றால் துளசிதளமும் தீர்த்தமும் அளிக்கின்றனர்.

இவற்றைப் பெற்றுக் கொள்ளும்போது நாம் தெய்வ அருளைப் பெற்றதாக நினைக்கிறோம். தீபாராதனை செய்த கற்பூரத்தை தொட்டுக் கண்ணில் ஒத்திக்கொள்வது நமக்குப்பக்திப் பரவசத்தையூட்டுகிறது.

சமுத்திரங்களிலும், நதிகளிலுமுள்ள தீர்த்த கட்டங்களில் ஸ்நானம் செய்தால் நமக்கு பாபவிமோசனம் கிடைத்ததாகக் கருதுகிறோம்.

இலங்கையிலுள்ள குன்றின்மீது காணப்படும் சிவனடி பாதங்களையும், ராமேஸ்வரத்தில் ஒரு பாறைமீது காணப்படும் இராமர் பாதங்களையும் தரிசித்தால் அம்மூர்த்திகளையே நேரில் தரிசித்த உவகை யடைகிறோம்.

தற்காலத்தில், அதுவும் நம் தமிழ் நாட்டில் இதெல்லாம் மூடப்பழக்கங்களெனச் சிலர் கூறுகின்றனர்.

இத்தகைய உண்மைக் கருத்துக்களோடு கூடிய புனிதமான பழக்கவழக்கங்

கள் நமது நாட்டில் மட்டும் மல்ல, உலக முழுவதுமிருக்கின்றன.

ஜெரூசலம் கிறிஸ்துவர்களுக்கு புனிதஸ்தலமாக விளங்குவதோடல்லாமல் முகமதியர்களுக்கும் யூதர்களுக்கும் புனித ஸ்தலமாக விளங்குகிறது.

இங்குள்ள ஒரு ஆலயத்தைச் சேர்ந்த மேற்கு பக்கமுள்ள சுவரை அடுத்து நின்றுகொண்டு, துக்கச் சின்னமாக முகமதியர்களும் யூதர்களும் நெஞ்சில் அடித்துக்கொள்வது வழக்கமாயிருக்கிறது, இந்தச் சுவருக்கு (Wailing Wall) 'ஒலமிடும் சுவர்' என்ற பெயர் வழங்கிவருகிறது.

இதுபோன்றே அயர்லாந்து தேசத்தில் கிருஸ்துவர்கள் புனிதமென்று கருதும் ப்ளார்னி (Blarney) என்ற ஒரு விசேஷமான இடமிருக்கிறது. இது ஒரு தேவாலயமல்ல.

ப்ளார்னி என்ற இடத்தில் ஐநூறு வருஷங்களுக்கு முன் ஒரு பிரபு 'அரண்மனை' கட்டியிருக்கிறார்.

அவவரண்மனையில் நூற்றிருபது அடி உயரமுள்ள ஒரு கோபுரமிருக்கிறது. இந்தக் கோபுரத்தின் உச்சியில் 'ப்ளார்னி' என்ற ஒரு கல்லைப் பதித்திருக்கிறார்கள்.

மேல் நாடுகளிலுள்ள கிறிஸ்துவர்கள் இந்த அரண்மனையிலுள்ள கோபுரத்தின் உச்சியிலிருக்கும் ப்ளார்னி என்ற கல்லை முத்தமிடுவதை தெய்வீகமாகக் கருதுகின்றனர்.

'ப்ளார்னி' என்ற கல்லின் வரலாறு இதுவே:—

ஏசு கிறிஸ்துவிற்கு பன்னிரண்டு சிஷ்யர்கள் உண்டு. அவர்களுக்கு அப்போஸ்தலர்கள் அல்லது தீர்க்கதரிசிகள் என்று பெயர். இவர்களில் ஒருவர் தான் யாக்கோபு இவர் ஒருநாள் ஒரு கல்லைத் தலைக்கு அணையாக வைத்துக்கொண்டு நித்திரை செய்யும் போது பரமண்டலத்திற்கு ஏறிச்செல்வதற்குத் தேவதூதர்களிடமுள்ள ஏணியைப் பற்றிக் கனவு கண்டார். இக்கனவு காணும்பொழுது அவர் தலையணையாக வைத்திருந்த அந்தக் கல்லின் ஒரு சிறு பகுதிதான் கோபுரத்தில் பதித்திருக்கும் 'ப்ளார்னி' கல் என்பது. இந்தக் கல்லை முத்தமிடுபவர்கள் அபார

வர்க்குச் சாதுர்யம் அடைவார்களாம்.

'ப்ளார்னி' கல்லை முத்தமிடுவதற்கு ஒரு ஆளுக்கு ஒன்லரை ரூபாய் கட்டணமாம். இந்தக் கட்டணத்தால் வருஷந்தோறும் ஒரு விசேஷ தினத்தில் 3000 ரூபாய் வரை கிடைக்கிறது.

யாக்கோபு தலையணையாக உபயோகித்த கல் ப்ளார்னி என்ற இடத்திற்குப் பக்கத்திலுள்ள ஒரு குன்றின்மீது இருக்கிறது.

அயர்லாந்து தேசத்து அரசர்களுக்குப்பட்டஞ் சூட்டும்போது, அக்கல்லின்மீது அவர்களை அமரச்செய்து கிரீடத்தை அணிவிப்பார்கள்.

ப்ளார்னி கல்லை முத்தமிடுபவர்கள் மல்லாந்து படுத்துக்கொண்டு சுவரிலுள்ள ஒரு துவாரம் வழியாய்த் தலையைஉள்ளுக்குள் செலுத்தி அதனுள்ளிருக்கும் கல்லை முத்தமிடவேண்டும். இவ்வாறு முத்தமிடும் கல் ப்ளார்னிகல் அல்ல. ப்ளார்னிக் கல்லோடு பொருத்திவைக்கப்பட்டிருக்கும் மற்றொரு கல்லேயாகும்.

யாகோப்பு தலையணையாக உபயோகித்த கல்லின் பகுதியான ப்ளார்னிக் கல்லின் சக்தியாவும் அதனுடன் பொருத்தி வைத்திருக்கும் இந்தக் கல்லுக்கும் நாளாவட்டத்தில் வந்துவிட்டதாம்.

ப்ளர்ர்னி கல்லை முத்தமிடும் பழக்கத்தை மூடப்பழக்கவழக்கமென கூறுபவர்கள் மேல்நாட்டிலுமிருக்கின்றனர்.

இதுபோல பல மூடபழக்கவழக்கங்கள் கிறிஸ்துமத ஸ்தாபனத்திற்கு முன்னல் அனுஷ்டிக்கப்பட்டு வந்தனவென்றும் அவற்றில் ஒன்றுதான் ப்ளார்னி கல்லை முத்தமிடுவதுமாகுமென்பது சிலருடைய அபிப்பிராயம். அமெரிக்கர்களும் ஜப்பானியர்களும் போலி 'ப்ளார்னி' கல்லை உற்பத்தி செய்து ப்ளார்னிக்குச் செல்வோருக்குச் விற்பனைக்கு அனுப்புகின்றனர்.

திரட்டு

சிறந்த மாதாந்திர கட்டுரைப் பொக்கிஷம்

1/C 17, டின்ரோஸ் எஸ்டேட்,
மவுண்ட் ரோடு, சென்னை

★ பல ஆங்கிலப் பத்திரிகைகளின் சுவையான சார மிக்க விஷயங்கள்

★ 50-க்கு மேலான அரசியல் சமூக, விஞ்ஞான கட்டுரைகள், உண்மைக் கதைகள்!

★ பலதரப்பட்ட விஷயங்கள்!

★ பொது மக்களுக்கும் மாணவர்களுக்கும் இன்றியமையாதது.

★ சிறந்த முறையில் நிறைந்த பக்கங்களைக் கொண்டது.

தனிப்பிரதி விலை எட்டணாதான்.
வருட சந்தா ரூ. 6

மானேஜர், **திரட்டு**
1/C, 17, டின்ரோஸ் எஸ்டேட்,
மவுண்ட் ரோடு, சென்னை-2.

அன்புடையீர்,

திரட்டுக்கு நான் சந்தாதாரராகச் சேர விரும்புகிறேன். இத்துடன் ஒரு வருட/அரை வருட சந்தா ரூ............அனுப்பியுள்ளேன். பத்திரிகையை அடியிற்கண்ட விலாசத்திற்கு அனுப்பி வையுங்கள்.

வணக்கம்.

விலாசம் :—

....

....

....

கொடிக்குக் குதர்க்கம்!

உலகத்திலுள்ள ஒவ்வொரு தேசத்திற்கும் தனித் தனியாக ஒரு கொடி உண்டு என்பதை யாவரும் நன்கு அறிந்ததே.

ஒவ்வொரு தேசத்தின் மகத்துவத்தை அறிவிப்பதும் அக் கொடிகளின் சின்னங்களே. ஒவ்வொரு தேசமக்களும் அந்தந்த தேசங்களின் கொடியின் கீழ் (அநேகவிதமான வேறுபாடுகள் உள்ள ஜனத் தொகுதிகள்) ஒன்று சேரு கின்றன.

அக் கொடி உல்லாசமாகப் பறப்பது அந்தந்த தேசத் தவருக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கும் காட்சியாகும். இக் கருத்தைத் தான் நம் பாரதியாரும்,

"தாயின் மணிக்கொடிப் பாரீர்! —அதை
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்"

என்று பாடியுள்ளார். இத்தகைய சிறப்புவாய்ந்த கொடியே யில்லாத ஒருநாடு இருக்கிறதென்றால் அது கனடா தேச மாகும்.

மிகுந்த விஸ்தீரணத்தினாலும் ஏராளமான ஜனத் தொகையினாலும் உலகிலேயே ஒரு முக்கியமான ராஜ்ய மாக விளங்குகிறது கனடா. இவ்வளவு பெரிய ராஜ்யத் திற்கு தனியாக ஒரு கொடி கிடையாது. கனடாவின் மொத்த ஜனத்தொகை ஒன்றரைக் கோடியாகும். அதில் அரைக்கோடிப்பேர் பிரஞ்சுக்காரர்களாவார்கள். மீத

முள்ளவர்கள் ஆங்கிலேயர்கள். கனடா குடியேற்ற நாட்டந்தஸ்துடைய பிரிட்டிஷ் 'காமன்வெல்த்'திற்குட்பட்டது.

கனடா 'காமன்வெல்த்திற் குட்பட்டதால் பிரிட்டிஷார், 'யூனியன் ஜாக்' கொடியை வைத்துக்கொள்வது உசிதமென்று அபிப்பிராயப்படுகின்றனர். ஆனால் பிரெஞ்சுக்காரர்கள் 'யூனியன் ஜாக்கை வைத்துக்கொண்டால் தாங்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்டிருப்பதாய் அர்த்தமாகுமென்று நினைத்து இதை விரும்பவில்லை.

கனடா தேசத்திற்கு நாட்டுக்கொடியாக ஒரு கொடி வேண்டுமேயென அங்குள்ள பலர் உத்தேசித்து கனடா தேசத்தின் வளப்பங்களின் சின்னங்கள் பொருந்தின கொடியை அமைக்க முயன்று வருகின்றனர்.

கனடாவிலுள்ள வெள்ளைக்கரடி, சிலுவை, கோதுமைக் கதிர், ஹிருதயம், நக்ஷத்திரம், இணைத்த கைகள், கண் முதலிய மூவாயிரம் ரகங்கள்வரை ஒவ்வொன்ருக அமைக்க முயன்றும் அங்குள்ள மக்களால் இவற்றில் ஒன்றையேனும் ஏகோபித்து தேர்ந்தெடுக்கப்பட முடியவில்லை.

ஐக்கிய நாட்டு சபையார், பிரிட்டிஷ் வியாபாரக்கப்பல்களில் உபயோகித்துவரும் வியாபாரக் கொடியை கனடா உபயோகிக்கலாமென்று கூறியுள்ளனர். இந்தக் கொடியைத் தற்காலிகமாக உபயோகித்தாலும் தேசக்கொடியாய் கனடா மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

வர்க்கபேதம், மதபேதம், பண்பாட்டிலுள்ள பேதம் கோத்திர பேதம் ஆகிய இத்தகைய பேதங்கள்தான் இந்தக் 'கொடிப் பிரச்னையை ஐக்கிய பாவத்தோடு தீர்த்துக் கொள்ள முடியாததற்குக் காரணமாயிருக்கின்றன.

———

SIR THEAGARAYA COLLEGE

MADRAS-21

Dated 26 March 1954

ஆசிரியர்

திரட்டு

அன்புடையீர்,

தாங்கள் அன்புகூர்ந்தனுப்பிய திரட்டுக்களைப் படித்தேன். விலை குறைவு; பக்கம் நிறைவு. திரட்டினைக் காண்போர் யாவரும் இதனையுணர்ந்து பாராட்டுவார்களென்பதில் ஐயமில்லை. பலதுறைக் கட்டுரைகளும் திரட்டில் இடம்பெற்றிருக்கின்றன. குடும்பச் சண்டையைச் சுருக்கமாகக் கூறுவது சிறுகதை; இடமும், காலமும் சொல்லிக் காதும் தலையும் வைத்து விவரமாக விளக்குவதுதான் தொடர்கதை யென்னும் இத்தகைய தலைவலிக்கதைகளால் தவிக்கும் தமிழ் நாட்டிற்குத் திரட்டு தக்க மருந்தாகுமென்றெண்ணுகின்றேன்.

கட்டுரைகளின் தலைப்புகள் நன்றாக இருக்கின்றன. தலைப்புக்களைப் பார்த்தவுடன் படிக்கவேண்டுமென்னும் எண்ணந் தோன்றுகிறது. தமிழ் மக்கள் இதனைப் பெற்றுப் போற்றுவார்களாக; திரட்டு நீடூழி வாழ்ந்து மக்களின் அன்பைப்பெறுவதாகுக.

ம. இராசமாணிக்கம்
தமிழ் விரிவுரையாளர்

உலகமெல்லாம் ஒரே வீடு. உலகிலுள்ள குழந்தைகள் யாவும் ஒரே வீட்டில் பிறந்தவை என்ற கருத்தை லட்சியமாகக்கொண்ட ஒரு புனிதத்தொண்டு.

வையக சிசுக்களை வாழ்விக்கும் சேவை

●

உலகத்தில் புத்திரப்பேறு கிடைத்ததும் இன்பமடையாதவர்கள் இல்லை; குழந்தை பிறந்த பின்னர்.

“மதலையைப் பெறுநாள் துன்பம்
வளர்த்திடும் நாளும் துன்பம்
விதலை நோய்அடையில் துன்பம்
... ...
இதமுறும் என்னுள் சேயால் என்றைக்கும் துன்பந்தானே”

என குசேல உபாக்கியானத்தில் கூறியுள்ளபடி, குழந்தைகளை வளர்ப்பதற்கு அளவற்ற துன்பங்களை அடையவேண்டியிருக்கிறது.

உதாரணமாக, குழந்தைக்குத் தாய்ப்பால் இல்லாமற்போகிறது. வயிற்றுப்போக்கு முதலான பாலாரிஷ்டங்கள் ஏற்படுகின்றன. குடல் ஈரல் முதலான கோளாறுகளால் குழந்தைகள் வளர்ச்சியடையாமல் துரும்பாய் இளைத்துப்போகின்றன.

இத்தகைய காரணங்களினால் குழந்தை பிறந்தவுடன் ஏற்பட்ட உவகைக்கு மாறாக அதை வளர்க்கும் போது பெற்றோர்கள் படும் அவதியை விவரிக்கவே முடியாது.

இவ்விதம் கீழ்நாடுகளில் நோயால் பீடிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை அறுபது கோடி என்று கணக்கிட்டிருக்கின்றனர்.

யுத்தம் வராமல் தடுப்பது; சமாதானத்தை நிலைநாட்டுவது; அணுக்குண்டு, ஜலவாயுக் குண்டு முதலியவற்றினால் தீங்குநேராமல் கண்காணிப்பது முதலிய அரிய பெரிய சேவைகளில் ஈடுபட்டிருக்கும் ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தாரின் கருணை இம்மாதிரி நோயினால் பீடிக்கப்பட்டுவரும் கோடிக்கணக்கான குழந்தைகளின் மீதும் சென்றிருக்கிறது.

குழந்தை பராமரிப்புக்காக U. N. I. C. E. F. [United Nations. International Childrens' Emergency Fund] என்று சிசுபரிபாலனத்திற்கென்று ஒரு ஸ்தாபனத்தை அவர்களுக்குள்ளேயே அமைத்து, அதற்கு வேண்டிய நிதி திரட்டி தகுந்த ஆலோசகர்களையும் நிபுணர்களையும் நியமித்து உலகமெங்கும் சேவை செய்துவருகின்றனர்.

ஈரான், இராக், எகிப்து, அரேபியா, ஆப்கானிஸ்தானம், சிரியா, பாகிஸ்தான், இந்தியா முதலிய ராஜ்யங்களிலுள்ள எளியவர்களின் குழந்தைகளுக்குத்தான் இந்த சேவை மிகவும் அவசியமாயிருக்கிறது. இவர்களுக்கு சத்தான ஆகாரங்களைக் குழந்தைகளுக்குக் கொடுக்கமுடியாது. இங்குள்ள எளிய மக்களின் குழந்தைகளுக்கு, க்ஷயம், மலேரியா, தொண்டை நோய், ஈரல் கட்டி முதலிய நோய்கள் பீடித்திருக்கின்றன.

இம்மாதிரி எண்ணிறந்த குழந்தைகளுக்குப் போஷாக்கான ஆகாரம் அளிப்பது, நோய்களுக்குச் சிகிச்சை செய்து குணப்படுத்துவது, நோய் வராமற் தடுப்பது முதலான அரிய பெரிய சேவைகளை இந்த ஸ்தாபனத்தார் திறமையோடும், ஊக்கத்தோடும் செய்துவருகின்றனர்.

உதாரணமாக அயர்லாந்தில் பிறந்த ஒரு நர்ஸ், தாய்லாந்தில் மேற்கூறிய ஸ்தாபனத்தார் நடத்திவரும் ஒரு சிசு சம்ரக்ஷண ஆஸ்பத்திரியில் சேவை செய்து வருகிறாள்.

இங்குள்ள குழந்தைகளுக்கெல்லாம் பால் பவுடர், மருந்துகள் முதலானவை கொடுக்கப்படுகின்றன. இங்கே வேறு டாக்டர்களும்

கிடையாது. ஆஸ்பத்திரிகளுமில்லை. அதனால் ஸ்தாபன ஆஸ்பத்திரியைச் சேர்ந்த நர்ஸ் எளியவர்கள் வசிக்குமிடங்களுக்கெல்லாம் சென்று அங்குள்ள குழந்தைகளுக்கு வைத்திய உதவி புரிந்து வருகிறாள்.

தாய்லாந்தில் பரம்பரையாய் மருத்துவத்தொழில் புரிந்துவரும் மாதர்களுக்கு பிரசவத்தின்போது கையாளும் முறைகளைப் பற்றியும் பிரசவித்த குழந்தைகளுக்கு உடனடியாகச் செய்யவேண்டிய சிஷ்ருஷைகளைப் பற்றியும் போதிப்பதோடு பெண்கள் அனுஷ்டிக்கவேண்டிய சுகாதார முறைகளைப் பற்றியும் ஆலோசனை அளித்து வருகிறாள்.

இவ்வாருக அங்கே பல பெண்கள் இந்த மாதுக்குச் சமமாக சிகிச்சை முறையில் பயிற்சி யடைந்துவிட்டபின் இந்த மாதை ஸ்தாபனத்தார் வேறு ராஜ்யத்திற்கு அனுப்பிவிடுவார்கள். இவள் வேறு ராஜ்யத்திற்கு மாற்றப்பட்டபோதிலும் இவளிடம் பயிற்சி பெற்ற மாதர்கள் அந்த ஆஸ்பத்திரியின் பொறுப்புகளை ஏற்று சிகிச்சை முறைகளை திறமையாக நடத்திவருவதோடு நர்ஸ்செய்து வந்ததுபோல் வீடுவீடாகச் சென்று கிராமக் குழந்தைகளுக்கு வைத்திய உதவியும் புரிந்துவருவார்கள்.

பாகிஸ்தானத்தில் ஒரு முஸ்லீம்மாது மேற்கூறியவாறு பயிற்சி பெற்று லாகூரை அடுத்த கிராமங்களுக்கு வீடுகள்தோறுஞ் சென்று கோஷா முறையிலுள்ள முஸ்லீம் ஸ்திரீகளுக்குச் சிசு பரிபாலனம், பெண்கள்சுகாதாரம் முதலானமுறைகளை போதித்து வருவதோடு பிரசவங்களையுங் கவனித்துக் குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் வைத்திய உதவியும் புரிந்துவருகிறாள்.

இந்த ஸ்தாபனத்தாரால் உலக முழுமையிலுமுள்ள எழுபது ராஜ்யங்களில் இரண்டு கோடி குழந்தைகளுக்கு க்ஷயத்தடுப்பு ஊசிகள் குத்தியும், மலேரியா தடுப்பு மருந்துகளைப் பிரயோகித்தும் இதர சிகிச்சைகளை அளித்து பரிபாலித்து வருகின்றனர்.

குழந்தைகளின் முக்கியமான ஆகாரம் பால். அநேக ராஜ்யங்களில் பால் சுத்தமாக இல்லாததால் யந்திர சாதனங்கள்மூலம் பாலைச் சுத்தப்படுத்தி குழந்தைகளுக்கு புஷ்டியளிக்குமாறு பக்கு

வப்படுத்தி இருபது ராஜ்யங்களிலுள்ள குழந்தைகளுக்கு இந்த ஸ்தாபனங்கள் மூலம் அளிக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஸ்தாபனத்திற்கு சிசுபரிபாலனத்திற்காக பல ராஜயங்களின் சர்க்கார்கள் அளித்துவரும் நன்கொடைகளைத் தவிர தனிப்பட்ட முறையில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் பொதுமக்களும் ஏராளமான பொருளதவி புரிகின்றனர். அமெரிக்க ஐக்கிய நாட்டில் அநேக ஆயிரம் பெண்கள் சிசு பரிபாலன நிதிக்கு பொது மக்களிடம் வசூல்செய்வதையே முக்கிய வேலையாகக் கைக்கொண்டுள்ளனர்.

இதில் ஒரு விசேஷமென்னவென்றால் கிறிஸ்துமஸ் போன்ற பண்டிகைகளின்போது குழந்தைகள் தங்கள் பெற்றோர்களிடமிருந்து பரிசுப் பொருள்கள் வாங்குவதற்குப் பதிலாக பணமாகவே பெற்றுக்கொண்டு அத்தொகையை சிசுபரிபாலன நிதி வசூலிக்கும் பெண்களிடம் கொடுத்துவிடுகின்றன. இதற்குக் காரணம் அமெரிக்க ஐக்கிய நாட்டில் குழந்தைகளுக்கு இயற்கையாகவே ஏராளமான வசதிகள் உள்ளன. மற்ற ராஜ்யங்களில் வசதிகள் இல்லாத குழந்தைகளும் ஸ்தாபனத்தார் மூலம் வசதிகள் பெற வேண்டுமே என்ற இந்த குழந்தைகளின் பரோபகார மனப்பான்மைதான்.

பண்டிகை தினங்களில் சில கிராமங்களில் குழந்தைகள்மூலம் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் வரை வசூல் ஆகும். இதைத் தவிர மற்ற தொழிற்சாலைகள், சர்க்கார் காரியாலயங்களிலுள்ள சிப்பந்திகள் மூலமாகவும் அவரவர்களின் தகுதிக்குத் தக்கவாறு அளிக்கும் நன்கொடைகளை வசூலித்து ஸ்தாபனத்திற்களிப்பார்கள்.

நிதி வசூலிக்கும் பெண்கள் ஒவ்வொருவரும் இரண்டு கோடி குழந்தைகளை தாங்களே பெற்றுப் பொறுப்போடு வளர்த்து வரும் மனப்பான்மையில் தொண்டுபுரிந்துவருகிறார்கள்.

ஏராளமான வாழ்க்கை வசதிகளோடு தனமிருந்த குடும்பங்களிலுள்ள ஐக்கிய நாட்டுப் பெண்கள் தங்கள் வாழ்நாட்களை வீண்நாளாக்காமல் இந்த அறநெறித்தொண்டு ஆற்ற முனைந்திருப்பது போற்றத் தகுந்ததுதானே.

"மக்கட் பணியே தெய்வப்பணி" என்பதுபோல் இச்சேவையைக் கடவுள் சேவையாகக் கருதலாமல்லவா?

"ஊரெங்கும் வாழக் கேடு ஒன்றுமில்லை" என்பது போலவும், "எல்லா மக்களும் வாழ என் மக்களும் வாழ" என்ற பழமொழியையும் அனுசரித்து உலகின் பல பாகங்களிலுள்ள குழந்தைகளைப் பரிபாலிக்க உதவியளிக்கும் இப்பெண்கள் தங்களால் பரிபாலிக்கப்பட்டுவரும் அயல்நாட்டுக் கோடிக்கணக்கான குழந்தைகள் அடையும் அபிவிருத்தியிலிருந்து, தங்கள் குழந்தைகள் அபிவிருத்தியடைந்தால் எவ்வளவு ஆனந்தமடைவார்களோ அவ்வளவு ஆனந்தமடைகின்றனர்.

பூவின் விதையும் உணவாகும்

சூரியகாந்தி விதைகளைத் தின்னலாம் என்று பறவைகளுக்கு ஆதியிலிருந்தே தெரிந்திருக்றது. ஆனால் விஞ்ஞானிகள் இப்போது தான் அதைக்கண்டுபிடித்திருக்கிறார்கள். இவ் விதையில் சரிபாதி யளவு கொழுப்புச் சத்து அடங்கியிருக்கிறது. இதினின்று இறக்கும் எண்ணெய் நிறமில்லாதது. நறுமணமுள்ளது. நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெயைப் போல, அதையும் சமையலுக்கு உபயோகப்படுத்தலாம்.

மறு பாதி புரோட்டீன் சத்து. அதுவும், நல்லதரமான புரோட்டீன். இலகுவில் ஜீரணமாகக் கூடியது. மேலும் அதிலே கால்ஷியமும், பாஸ்பரஸும், வைடமின் ஏயும், பியும் அமோகமாக இருக்கின்றன.

சூரியகாந்தி விதையை வறுத்துச் சாப்பிடலாம். அல்லது அதை மில்லிலே அரைத்து, மைதா முதலிய மாவோடு 10 சத விகிதம் கலந்து, பலகாரம் செய்யலாம்.

CONSULT

K. M. S. PRESS

1-C 17, DINROZE ESTATE
MOUNT ROAD
MADRAS-2

FOR

ALL HIGH CLASS
JOB WORKS

AND

BOOK WORK

IN

ENGLISH & TAMIL

நேசபான்மைக்கும், உபசாரத்திற்கும் அறிகுறியாகவும் களைப்புக்கு மருந்தாகவும் விளங்கும் காப்பியின் உண்மை சொரூபம்.

அபாயமளிக்கும் அமிருத பானம்

●

சாதாரணமாக, கள், சாராயம் முதலிய மதுபானம் அருந்துபவர்களையே குடிகாரர்கள் என்று இழிவாகக் குறிப்பிடுவோம். ஆனால் காப்பி அல்லது தேநீர் குடிப்பவர்களும் அந்தப் பட்டத்துக்கு உரியவர்கள்தான், இவை எல்லாம் நச்சுப்பானங்கள். பார்க்கப் போனால், லாகிரிப் பொருள்களைக் காட்டிலும் காப்பியே மிகப் பரவலான கெடுதி செய்கிறது. நியூ யார்க் லைப் இக்ஸ்டென்ஷன் இன்ஸ்டிடியூட்டின் (New York Life Extension Institute) அறிக்கை ஒன்றில் யோசனைக்கிடமான, அஞ்சத் தக்க தகவல் வெளியாகியுள்ளது. அக் கழகம் 16,562 ஆண்களின் உடல் நிலையைப்பரிசோதித்து, அவர்களுக்கு இருந்த நோய்களிலும் உறுப்புகளின் சீர்கேடுகளிலும் 7 சத விகிதம் அமித மதுபானத்தின் பயனாக விளைந்தவை என்று கண்டது; காப்பி, தேநீர்க் குடியால் ஏற்பட்டவை 40 சத விகிதம்!

காப்பியைப் பற்றி டாக்டர் ஈ. எல். பிஸ்க் பின்வருமாறு கூறுகிறார்: ''உண்மையைச் சொன்னால், காப்பி ஒரு மருந்தே தவிர, உணவல்ல. உடம்பைப் போஷிக்கும் அம்சம் அதிலே கொஞ்சமும் கிடையாது. அதைக் குடித்த

வுடன், ஒருவித விறுவிறுப்பு ஏற்படுகிறதே, அது எதனுல் என்ருல் அதிலே காபீன் (caffeine) என்னும் பெயருடைய ஒரு உப்பு இருக்கிறது. இந்த உப்பு ஒரு காரம் (alkaloid) சோடா, பொட்டாஷ் முதலியவைகளைப் போல; வெள்ளை நிறமும் பட்டுப் போல் மென்மையும் வாய்ந்தது; நரம்புகளை கிளறிவிடக் கூடியது. முன்னெல்லாம் இந்த உப்பை இருதயத்திற்கும் நரம்புகளுக்கும் கொடுக்கும் பலகர்ரி மருந்துகளிலே மிகுதியாகச் சேர்ப்பார்கள். இப்போது அப்படிச் செய்வதில்லை. ஏனெனில் அது உடம்பிலே என்ன பலன்களையெல்லாம் உண்டாக்குகிறது என்று இன்னும் சரியாக கண்டுபிடிக்க முடியவில்லை.

புகையிலை விஷயமும் இப்படித்தான்...நெருக்கடியான கட்டங்களில் மட்டுமே இக்காலத்தில் காபீனை உபயோகிக்கிருர்கள். மேலும் இப்போது அதைத் தலைவலி மருந்துகளிலும் கட்டோடு உபயோகிப்பதில்லை. அம் மருந்துகளில் சேரும் மற்றச் சரக்குகளின் விஷ குணங்களைக் காபீன் அதிகரிக்கப் பண்ணுகிறது என்று வாஷிங்டனிலுள்ள ஹைஜீயினிக் லாபோரட்டரி (Hygienic Laboratory) நிபுணர்கள் நிரூபித்திருப்பதே அதற்குக் காரணம்.

''நாம் மனச் சோர்வு அடைந்திருக்கும் பொழுது, நமக்கு ஓய்வும் உறக்கமும் தேவையே தவிர, நமது நரம்பு மண்டலத்தைக் கிண்டிக் கிளறிவிடும் பானங்களல்ல. காப்பியால் அக் களைப்பைப் போக்க இயலாது: சிறிது நேரத்துக்கு அதை மறைத்து வைக்க மட்டும் இயலும். இம் மறைப்பு நாளடைவில் தீமையாய் முடியலாம்.

''காப்பியும் தேநீரும் கெடுதியுள்ளவை என்பதில் ஐயமில்லை; மிதமாகக் குடித்தாலுங் கூடக்கெடுதிதான். குறிப்பாக, அஜீரணம், இரவில் தூக்கம் வராமை, நரம்புப் பலவீனம், இருதய நோய் ஆகிய பிணிகளால் வருந்துவோர்க்கும், பிறவியிலேயே சிடுசிடுப்புக் குணமும் பதட்டமான

சுபாவமும் படைத்தவர்களுக்கும் அது பெரும் தீங்கு செய்கிறது. இந் நோயாளிகளில் பலர் காப்பி, தேநீர் குடிக்கும் பழக்கத்தை விட்டுவிட்ட பிறகு பூரண சுகம் அடைந்திருக்கிறார்கள்.''

இந்தப் பானங்களுக்கும் இரத்தக் கொதிப்புநோய்க்குமுள்ள சம்பந்தத்தைக் குறித்தும் டாக்டர் பிஸ்க் சுருங்கச் சொல்லி, அஞ்ச வைத்திருக்கிறார்: ''காப்பி குடிப்பது இரத்த அமுக்கத்தை அதிகரிக்கச் செய்து, மூத்திரக் காய்களின் செயலை அதிகப்படுத்துகிறது என்பது ஒன்றே அவ் விஷப் பழக்கத்தை விட்டொழிக்க போதுமானகாரணமாகும் என்று கருதுகிறேன். மூத்திரக் காய்களின் மேல் வேலை செய்யும் மருந்துகள் எல்லாம் அபாயகரமானவை. இக்காலத்தில் வைத்தியர்கள் அவற்றை மிகவும் பயத்தோடும் ஜாக்கிரதையாகவும் உபயோகப்படுத்துகிறார்கள். மூத்திரக் காய் நோயுற்றால், அதை மருந்து சரக்குகளைக் கொண்டு குத்திவிட்டு நடப்பிக்காமல், நல்லுணவு, நீர் முதலிய சாதனங்களால் அதை நன்னிலைக்குக் கொண்டு வர முயலவேண்டும்.''

இருதய வியாதியும், மூத்திரக் காய் வியாதியும், இரத்தக் குழாய் வியாதிகளும் மலிந்துள்ள இக் காலத்திலே இவ் வார்த்தைகளை அசட்டை பண்ணுவதற்கில்லை.

இனி, மற்றோர் நிபுணரின் அபிப்பிராயத்தை ஆராய்வோம். லீப் சிக் வாசியான டாக்டர் பாக் பின்வருமாறு சொல்கிறார்: ''இக் காலத்தில் பெருவாரியான மக்கள், நரம்புத் தளர்ச்சியும் வெடுவெடுப்பான சுபாவமும் முன்கோபமும் உடையவர்களாயிருப்பதற்கு முக்கிய காரணம் காப்பியும் தேநீரும் தான்.''

காப்பி குடித்தவுடன் களைப்பு நிவர்த்தியாவதுபோல் தோன்றும். ஆகவேதான் ஜனங்கள் அதை விரும்பிப் பருகுகிறார்கள். ஆனால் உண்மையிலே அது என்ன செய்கிறது தெரியுமா? நமது தேகத்தில், சக்தியைச்

சேகரித்து வைக்கக்கூடிய சில ஸெல்லுகள் அல்லது அணுக்கள் இருக்கின்றன. நாம் வேலையினின்று ஓய்ந்திருக்கும் பொழுதும், தூங்கும்பொழுதும், அவற்றில் புதிய சக்தி ஏற்றப்படுகிறது. ஆனால் வேலை செய்கையில், அந்தச் சக்தி கொஞ்சங் கொஞ்சமாக ஸெல்லுகளிலிருந்து விடுவிக்கப்பட்டு, உபயோகிக்கப்படுகிறது. அது முற்றும் செலவழிந்து ஸெல்லுகளெல்லாம் காலியாவதற்குச் சற்று முன்னர், களைப்பு தோன்றும். இது ஒரு அபாயக் குறி, இயற்கையின் எச்சரிப்புக் குறி. உடனே நாம் வேலையை நிறுத்திவிட்டு, இளைப்பாறவேண்டும். உடல் தனது ஸெல்லுகளில் புதிய சக்தியை ஊட்டிக்கொள்ள அவகாசம் அளிக்கவேண்டும். இப்படிச் செய்வதற்குப்பதிலாக, ஒரு கப் காப்பியாகிலும் தேநீராகிலும் அருந்தினுல், களைப்பு மறைந்து போய், நாம் நமது வேலையைத் தொடர்ந்து செய்யலாம்; ஆனால் காலியான ஸெல்லுகள் காலியாகவே இருக்கும். அவற்றில் புதிய சக்தி ஏறமுடியாது, இவ்விதமாக, காப்பி நாம் நமது நிலைமையையும் தேவையையும் உணரவொட்டாமல் தடுத்து, தமது தேகப் மாதுகாப்புக்கு இன்றியமையாத சேம சக்தியை வீண் விரயம் செய்கிறது.

வட துருவப் பிரயாணியாகிய நான்சனும் "அக்ராஸ் கிரீன் லன்ட்" என்னும் தமது புத்தகத்திலே, காப்பி குடிக்கும் பழக்கத்தை வன்மையாகக் கண்டிக்கிறார். அப் பயணத்தின் போது அவரது சகாக்களில் பலர் தாராளமாகக்காப்பி உட்கொண்டனர். அது அவர்கள் களைப்பைப் போக்குவது போல் காட்டின போதிலும், துருவக் குளிரையும் அப் பயணத்தின் அதீத சிரமங்களையும் தாங்கும் வலுவை அளிக்கவில்லை என்று அவர் கண்டார். "நமது உடலையும் உள்ளத்தையும் செயற்கை முறைகளால் அடிக்கடி தூண்டிவிட்டுக் கொள்ளல் நன்மை என்று எண்ணுவது சுத்தமுட்டாள்தனம்" என்று அவர் கூறுகிறார்.

"நல்வழி"—பூனா.

———

உங்களுக்குத் தெரியுமா?

ஆமைக்குப் பல் இல்லை.

ஒவ்வொருவருக்கும் நான்கு உள்நாக்குகள் இருக்கின்றன:

உலகத்தில் ஏறக்குறைய 12,000 வகை மீன்கள் இருக்கின்றன.

வைடமின் சத்துகள் கண்டு பிடிக்கப்பட்டு சுமார் நாற்பது ஆண்டுகள் ஆகின்றன.

அடிக்கடி காக்காய் வலிப்பு உண்டாகும் நோயாளிகள் ஸோடியம் புரோமைட் என்னும் மருந்தைத் தினம் 60 அரிசி எடை வரை சாப்பிட்டு வருவது நல்லது.

காமாலை வியாதியில் தோல் மஞ்சள் நிறமாகத் தோன்றுவதற்குக் காரணம் இரத்தத்தில் பிலிரூபின் (Bilirubin) என்ற வர்ணப் பொருள் இயற்கைக்கு அதிகமாக இருப்பதேயாகும்.

1951 ஆம் ஜனக் கணிதப்படி, இந்தியாவின் மொத்த விஸ்தீரணம் 11,76,864 சதுர மைல். மொத்த ஜனத் தொகை 356,879,304 540,56388 கிராமங்கள் இருக்கின்றன; 3,018 நகரங்கள் இருக்கின்றன.

பெரியோர்களுக்கு 45 நிமிஷத்திலும், பதினைந்து வயதானவர்களுக்கு 35 நிமிஷ நேரத்திலும், பன்னிரண்டு வயதானவர்களுக்கு 25 நிமிஷ நேரத்திலும், ஒன்பது வயதானவர்களுக்கு 15 நிமிஷ நேரத்திலும் மூளைக்குச் சோர்வு உண்டாகும்.

வான சாஸ்திரிகள் இதுவரையில் ஏறக்குறைய நூறு ரேடியோ நட்சத்திரங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவைகளுக்கு மற்ற நட்சத்திரங்களைப்போல, நம் கண்ணுக்குத் தெரியக் கூடியவிதமான ஒளி கிடையாது; ஆனால் இவை சதா ரேடியோ அலைகளை வீசிக் கொண்டிருக்கின்றன.

சாந்தி நிலையம்

ஒரு காலேஜ் மாணவி ஒரு கனமான அட்டையிலே "மூன்றாவது நான்" என்று மிக அழகாக எழுதி, ஹாஸ்டலிலே தன் அறையில் மாட்டி வைத்திருந்தாள். புதிதாக அவள் அறைக்குள்ளே வருபவர்கள் அதற்கு என்ன அர்த்தம் என்று கேட்டால், அவள் புன்னகை புரிந்து "முதலாவது கடவுள், இரண்டாவது பிறர், மூன்றாவது நான்" என பதில் கூறுவாளாம். எத்தகைய கருத்தமைந்த வாசகம்! குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் இந்த வாசகத்தைக் கடைப்பிடித்து ஒழுகினால், எவ்வளவு மேன்மையடையலாம்! தெய்வ நம்பிக்கை இல்வாழ்வின் அஸ்திவாரம். கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று நம்பாத, அவரைத் தொழாத, அவரது அறக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாத, வீட்டிலே நிலையான ஒற்றுமையோ மகிழ்ச்சியோ இருக்கமுடியாது. கடவுளுக்கு அடுத்தபடியாக, பிறர். அவர்களை மதித்து நடக்க வேண்டும். பிறரது தேவைகளையும் வசதிகளையும் பெரிதாக, முதன்மையாகக் கொள்ள வேண்டும். அவற்றிற்காக நமது சொந்த உரிமைகளையும் கூட விட்டுக்கொடுக்க எப்பொழுதும் சித்தமாக இருக்க வேண்டும். இத்தகையோர் வாழும் இல்லத்திலே சண்டை சச்சரவு இருக்காது. மனஸ்தாபம் இருக்காது. முணுமுணுப்பு இருக்காது. அங்கு சதா அமைதி நிலவும்; மகிழ்ச்சி பொங்கி வழியும். அவ் வீடு ஓர் சாந்தி நிலையம்; ஓர் கோயில்! சொர்க்கத்தின் வாயில்!

பணக்காரக் கிழவியை மணம் புரியத் தயார்

●

'கலியாண' மார்க்கெட்டுக்கு விளம்பரம் நம்நாட்டில் மட்டுமின்றி சில மேல் நாடுகளிலும் சகஜமாயிருக்கிறது.

இதைப் பற்றிய இத்தாலிய தேசத்து விவரங்கள் மிக விநோதமாயிருக்கின்றன.

சந்தைக்குச் சென்று ஆடு, மாடுகளை வாங்குவதைப் போல் பத்திரிகையில் வெளிவந்துள்ள விளம்பரங்களைப் பார்த்துத்தான், மணமகனையும், மணமகளையும் தேடித் தேர்ந்தெடுக்கவேண்டி யிருக்கிறது.

தினமும் பத்திரிகை வாயிலாக சுமார் நூற்றைம்பது மணமகன், மணமகள்—விளம்பரங்கள் வெளியாகின்றன. அவற்றில் சில கீழ் வருமாறு:—

மனைவி இழந்த வக்கீல் வயது 42

பிரபலமானவர், இளமையாகத் தோற்றமளிப்பர்.

வருஷ வருமானம் 60,000 ரூபாய்.

ஆடம்பரமான மாளிகை வசதி,

36-வயதுக்கு உள்பட்ட விதவையானாலும் சரி, கலியாணம் ஆகாத'பெண் ஆனாலும் சரி.

நிபந்தனைகள்:

படிப்பு, அழகு, குடும்பக் கலையில் தேர்ச்சி, தனக்கு சமமாக சம்பாத்தியம். பூரா விவரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

ராணுவ அதிகாரிக்கு

33 வயதுக்குமேல் 55 வயதுக்குட்பட்ட பெண்தேவை. ஏராளமான சொத்துகள் வேண்டும்.

★

36 வயதுள்ள தனவந்தனுக்கு

பெண் தேவை

குடும்பத்தை நடத்தும் சாமர்த்தியம் வேண்டும்.

வயது 26 இருக்கவேண்டும்.

சொத்து ஒன்றும் தேவையில்லை.

நல்ல தேகக் கட்டும், நேர்மையும் வேண்டும்.

★

பல துறைகளிலும் பயிற்சி பெற்ற 30 வயதுடைய ஒருவர் கலியாணஞ் செய்துகொள்ள விரும்புகிறார்.

மிகவும் அழகு வாய்ந்தவர்.

கிழவியாயிருந்தாலும், பணக்காரியானால் கலியாணஞ்செய்துகொள்ளத் தீர்மானித்திருக்கிறார்.

★

எங்களுக்கு ஒரே பையன் நேர்மையும், அழகும், வாய்ந்தவன் பட்டதாரி. சர்க்கார் காரியாலயத்தில் உத்தியோகம்.

ஒரு லட்சத்திற்கு ஆஸ்தி இருக்கிறது.

இதே போன்ற சம அந்தஸ்துள்ள அபார அழகு வாய்ந்த கன்னி தேவை,

24 வயதிலிருந்து 32 வயது வரை இருக்கலாம்.

கலியாண விவரங்களைப் பற்றி பெண்ணின் பெற்றோரிடம் தான் கலந்து பேசலாம்.

தெய்வ பக்தி கொண்டவளும்,

ஆரோக்கியம் நிறைந்தவளும், கல்வி கற்றவளுமான ஒரு இளம் பெண்ணுக்குப் பணக்கார வரன் தேவை.

★

23, 27 வயதுடைய இரு சகோதரிகளுக்கு வரன் தேவை.

ஒரே நிபந்தனை—நாலரைக்கோடி ரூபாய் நன்கொடை அளிக்கவேண்டும்.

சாணியிலிருந்து வெளிச்சம்!

மாட்டுச் சாணத்திலிருந்து ஒருவித வாயுவை (Gas) எடுக்கும் முறையை லக்ஷமணபுரி விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறாகள். இந்த வாயுவைக்கொண்டு உணவு சமைக்கவும் விளக்கு எரிக்கவும் முடியும் என்று "டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகை (அக்டோபர் 29, 1953) கூறுகிறது.

அக்டோபர் மாதக் கடைசியில் லக்ஷ்மணபுரியில் நடந்த உத்தர பிரதேச பொருட்காட்சியில் இந்த நூதனம் பொதுஜனங்களுக்குக் காட்டப்பட்டது.

வாயுவை எடுத்தபிறகும், சாணத்தை எருவாக உபயோகிக்கலாமாம்.

உத்தரப் பிரதேச சர்க்காரின் ஸ்தல சுய ஆட்சி இலாகாவைச் சேர்ந்த இன்ஜினீயர்களே இந்தச் சாதனையைப் புரிந்தவர்கள்.

சென்னை-600 008
198747

OUR FALLEN VILLAGE

published by

SANGU GANESAN

ஆங்கிலப் பிரசுரம்

○

கிராமப் பஞ்சாயத்துச் சட்டத்தைச் சீர்திருத்த சில உருப்படியான யோசனைகள். கிராம வாசிகள், விவசாயிகள் இவர்களின் சுபிட்சத்திற்கான ஆக்க வேலைகள். இவை யாவும் அடங்கியது.

விலை அணா 8

திரட்டு சந்தாதாரர்களும் வாசகர்களும்
ஐந்தணா ஸ்டாம்பு அனுப்பி
பெற்றுக் கொள்ளலாம்.

கிடைக்குமிடம்:

திரட்டு காரியாலயம்

1-C, 17 டின்ரோஸ் எஸ்டேட்
மவுண்ட் ரோடு, சென்னை

அச்சில்

க்ஷீணித்த கிராமம்

(தமிழ் பதிப்பு)

Edited, printed and published by E. Balasubramaniam at the K. M. S. Press, 1-C 17, Dinroze Estate, Mount Road, Madras. Associate Editors:- N. S. Mani and C. Ramaiah Pandian.

SAMSONS DRESSES

ஸாம்ஸன்ஸ்
ரெடிமேட்
ஆடைகள்

★

சிறந்த துணி வகைகளில், நாகரீகமான பாணியில் நீடித்த உழைப்புக்காக தயாரிக்கப்படுகின்றன.

★

ஆடவர், பெண்டிர், சிறுவர் யாவருக்கும் தேவையான ஆடை வகைகள் யாவும் கிடைக்கின்றன

★

பெங்களூர் டிரஸ்
மானுபாக்சரிங்
கம்பெனி,
12, லால் பாக் ரோட்,
பெங்களூர் - 2.

Colourful

BINNY'S FABRICS

The most suitable material for the tropies. These lovely colourful fabrics in beautiful designs such as seersucker, plain and printed Linen, Lustalin Shirtings, Hanava Suitings, etc., are available at our Show Rooms.

VENKATESH VASTRALAYA

Phones: 4688.

Retail Show Room :
2, THAMBU CHETTY STREET, MADRAS-1.